# பழமையில் புதுமை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 APR 1957
MADRAS

வித்துவான் V. நரசிம்மன், M. A.,

சாந்தி நூலகம்
புத்தகம் வெளியிடுவோர்,
கண்டனூர்.
இராமனாதபுரம் மாவட்டம்

வெளியீடு எண்—4.
முதற் பதிப்பு மார்ச்—1957.

TAMIL NADU ARCHIVES LIBRARY
MADRAS-600 008
105064

விலை ரூ. 1—8—0.

செளத் இந்தியா பிரஸ், காரைக்குடி.

# முன்னுரை

புரட்சி! புதுமை! இந்த முழக்கம் எங்கும் முழங்கு கிறது இந்தக்காலத்திலே. நாமுந்தான் கொஞ்சம் புரட்சி செய்வோமே! புதுமையில் புகுவோமே! இவ்விருப்பம் தோன்றியது என் மனத்தில். மணிமேகலை என்னும் பெருங்காப்பியம் என் மனத்தைக் கவர்ந்தது. புரட்சி செய்து அதில் கொஞ்சம் புதுமையைப் புகுத்தினேன். எழுந்தது பழமையில் புதுமை என்னும் இந்நூல்.

ஒருமந்திரம் ஜபித்தான், வானத்திலே பறந்து அங்கே இங்கே போனான், இது எவ்வளவு எளிது. புதுமையைப் புகுத்தும்போது இதற்கேற்ற கருவியைத் தேடவேண்டியிருக்கிறது. இது எவ்வளவு சிரமம்! ஏதோ சிரமப்பட்டு ஒருவிதமாகக் கருதியதைச் செய்து முடித்துள்ளேன். எதுவானாலும் போற்றுகிறவர்கள் சிலரும், தூற்றுகிறவர்கள் சிலரும் இருக்கத்தான் இருப் பார்கள். எல்லாருக்கும் பொருந்த நடப்பது இயலாத காரியம். தவறு இருந்தால் மன்னிக்க!

பழமையில் புதுமை புகுத்தப்பட்டுள்ளதாயினும் பழமை இன்னது, புதுமை இன்னது என்பதை நன் கறிய இதில் வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வரலாற் றில் புதிதாகப் படைக்கப்பட்டவர்களாகிய **ஆநந்ததீர்த்தர், வித்யாவிநோதன், மகானுபாவன், கௌதமர், அகோரம், பிரபாகர் இளையநம்பி** ஆகியோர் செயல்கள் புதுமை. மற்றச் செய்திகள் பழமை. ஒரு நல்ல தமிழ் நூலைப் புதிய முறையில் மக்களுக்கு அறிமுகப்படுத்துவது, அதன் வழியாக இனிமையாகப் பொழுதைப்போக்கச் செய்வது இவையே என் நோக்கங்கள். இவை நிறைவேறும் என்று கருதுகிறேன். இப்புதிய முயற்சியைப் பொது மக்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

**ஆக்கியோன்.**

# உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | அந்தப் பெண் யார்? | 1 |
| 2 | இரண்டு பெரியார்கள் | 7 |
| 3 | ஐக்கிய முன்னணி | 14 |
| 4 | மத யானையும் பளிங்கு அறையும் | 19 |
| 5 | நால்வர் மாநாடு | 36 |
| 6 | எடுக்க எடுக்கக் குறையாத திருவோடு | 42 |
| 7 | மீண்டும் நால்வர் மாநாடு | 51 |
| 8 | காதலர் கூடிப்பேசுதல் | 60 |
| 9 | அவசரக் கூட்டம் | 72 |
| 10 | மிகவும் இரங்கத்தக்க செய்தி | 83 |
| 11 | மகானுபாவன் வேலைகள் | 92 |
| 12 | சிறைப்படுதலும் மீளுதலும் | 101 |
| 13 | அபாய அறிவிப்பு | 109 |
| 14 | பட்டினம் மூழ்கியது | 118 |

# பழமையில் புதுமை

## 1. அந்தப் பெண் யார்?

ஆ! அது யார்? அழகெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பெண் உருவம் எடுத்துவந்து இங்கே நடந்து செல்கிறதோ! திலோத்தமை என்னும் தேவருலக நாடகக் கணிகையைப்பற்றி நூல்களில் சொல்லப்பட்ட செய்தி உண்மை என்பதை இப்போதுதான் நான் உணர்கிறேன். ஒவ்வொரு பொருளிலும் உள்ள அழகில் எள்ளத்தனை எடுத்து அவள் உருவாக்கப் பட்டாள் என்று சொல்லப்படுகிறது. இவளைப் பார்த் தால் அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது.

கையில் பூக்கூடை, அப்போது மலர்ந்த பூக்கள், பூக்களைப் பார்த்துப் பார்த்து பிரலாபித்து மகிழ்ந்து கொண்டேபோகிருள். நிறைய நல்ல பூக்கள் கிடைத்து விட்டன என்று எண்ணம்போலிருக்கிறது.அழகொழுகும் முகத்தில் மிகுந்தமகிழ்ச்சியும் சேர்ந்துவிட்டது. அதனல் என் உள்ளமும் பறிபோய்விட்டது.

அவள் கூடையில் ஒரு மலர்ந்த தாமரைப்பூ! தாமரைப்பூவை முகத்துக்கு உவமானமாகச் சொல்லு வார்கள். அது எவ்வளவு பொருத்தம் என்று இப்போது அல்லவா தெரிகிறது. அதோ பூ! அதோ முகம்! எவ்வளவு ஒற்றுமை! அந்தத் தாமரை மலரின்மேல் இரண்டு அல்லி மலர்கள். நீல அல்லிமலர்கள். நீல அல்லி கண்ணுக்கு உவமை. அதோ நீல அல்லி! அதோ கண்! ஆகா எவ்வளவு பொருத்தம்! அதோ செவ்வல்லி, அது வாய்க்கு உவமை! நூற்றுக்குநூறு உண்மை! பெண்ணுக்குப் பூங்கொம்பை உவமையாகச் சொல்லுவார்கள். ஒரு பூங்கொம்பு ஒருவகை மலர்களைத் தான் தாங்கிநிற்கும். இங்கே அது பலவகை மலர்களைத் தாங்கிநிற்கிறது.

பெண்களின் நடையை அன்ன நடை, பெண்யானை நடை என வர்ணிப்பார்கள். அவற்றின் நடைகளுக்கும் இவள் நடைக்கும் உள்ள ஒற்றுமை நன்ருகப் புலப் படுகிறது. ஆ! அவள் என்னைவிட்டுத் தூரத்தூரப் போய்க்கொண்டிருக்கிருளே! ஏனோ என் மனம் அவளை நாடுகிறது! நானும் தினமும் எத்தனையோ பெண்களைப் பார்த்துக்கொண்டு தானிருக்கிறேன். அவர்களில் பலர் அழகாகவும் இருக்கிருர்கள். ஆனுலும் இவளைக் கண்ட போது எனக்குண்டான உணர்ச்சி ஒரு தனிவகையாக அல்லவா இருக்கிறது! மற்றவர்களைக் காணும்போது இவ்வித உணர்ச்சி இல்லை. ஆ! அவள் என் கண்ணுக்கு மறைந்துவிட்டாள். என் இன்பமும் என்னைவிட்டுப் போய்விட்டது. அவள் யார்? அவளை நான் அடைய ஏதாவது வழி உண்டா?

இவ்வாறு எண்ணமிட்டான் சோழநாட்டு இள வரசன் உதயகுமரன். சோழர்களுடைய தலைநகரமும் துறைமுகமுமாகிய காவிரிப்பூம் பட்டினத்தில் இலவந்திகைச் சோலை என்று ஒரு பூந்தோட்டம் உண்டு. "இலவந் திகை" என்ருல் "யந்திரவாவி" என்று அர்த்தம். அதாவது குழாய்கள் மூலம் நீர் விசிறிபோலவும் பூவாணம் போலவும் மேலெழும்பி அழகாக விழுகின்ற குளத்தையுடைய பார்க். "பார்க்" என்று சொல்லுவது தானே நாகரிகம்! அப்போதுதான் நமக்கும் விளங்கு கிறது. ஆகவே இலவந்திகைச் சோலையைப்பற்றி இப்போது விளங்கிவிட்டதென எண்ணுகிறேன்.

தெரு வழியாகச் சோலையை நோக்கி வந்துகொண் டிருந்த இளவரசன் சோலையின் வாசலண்டை வந்ததும், சோலைக்குள்ளிருந்து அந்த வாசலைத்தாண்டி ஒரு பெண் அப்போதுதான் வெளியில் போவதைக் கண்டான். கண்டதும் அப்படித் தன் மனத்திற்குள் எண்ணினுன். அந்தப் பெண் யார்? கொஞ்சம் பொறுங்கள்! அது இதோ தெரிந்துவிடப் போகிறது!

சோலையின் வாசலண்டை வந்ததும் இளவரசனின் பார்வை பெண்ணை நோக்கிச் சென்றது. பெண்ணைக் கண்டதும் குதிரைமேல் வந்துகொண்டிருந்த அவனுடைய கை அவனையும் அறியாமல் லகானை இழுத்துப் பிடித்தது! குதிரை சட்டென்று நின்றது! அரசன் பார்வை வேறு ஒன்றிலும் செல்லாமல் பெண்ணின் உருவத்திலேயே நிலைத்தது. இளவரசன் திடீரென்று நிற்கவே அவன் பின்னால் வந்துகொண்டிருந்த பரிவாரத்தாரும் சட்டென்று நின்றனர். அரசன் பார்வை சென்ற வழியே அவர்கள் பார்வையும் சென்றது. இளவரசன் நாலைந்து நொடிப் பொழுதே அவளைப் பார்த்திருப்பான்! அதற்குள் மேலே குறித்த எண்ணங்கள் எல்லாம் அவன் மனத்தில் தோன்றிவிட்டன. மனத்தின் வல்லமை அது!

உடனே உதயகுமரன் பக்கவாட்டில் திரும்பி "யாரங்கே?" என்றான். உடனே குதிரையின் பக்கத்தில் நடந்து வந்துகொண்டிருந்த காவலன் ஒருவன், கைகட்டி வாய்புதைத்து அரசன்முன் வந்து நின்றான். "அதோ போகும் பெண் யார்? விசாரித்து வந்து தெரிவி!" என்றான். ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு விரைந்து சென்றான் காவலாளி. உதயகுமரனும் சோலைக்குள் புகுந்தான்.

இங்கே சில செய்திகளைத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகிறது. யந்திர வாவியை உடைய அந்த இலவந்திகைச் சோலை அரச குடும்பத்தாரும் அவர்களுடைய பணியாளரும் வந்து இன்பமாய்க் காலங் கழிக்கும் இடம். ஆயினும் அது பொதுமக்களுக்கும் பயன்படுமாறு குறிப்பிட்ட சிலநேரங்களில் பொதுமக்கள் அதற்குள் இருந்து இன்பமடையவும், பூப்பறிக்கவும் அனுமதிப்பது உண்டு. காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டு தோறும் இருபத்தெட்டு நாட்களுக்கு இந்திர விழா என்று ஒரு திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும் அதைப் பார்க்க உலகின் பற்பல நாடுகளிலிருந்தும் ஜனங்கள் வருவார்கள். விஞ்சையர்களும், தேவர்களுங்கூட அதைப்

பார்க்க வருவார்களாம். தேவர்கள் அப்போது மனித வுருவில் வந்து மனிதரோடு மனிதராய்ச் சேர்ந்து திரிவார்களாம். அந்த விழா இந்திரனைக் குறித்துச் செய்யப்படுவது. அந்த விழாக் காலத்தில் இலவந்திகைச் சோலையில் எல்லாரும் நாள் முழுவதும் போயிருந்து இனிமையாய்க் காலங்கழிக்கலாம்.

இளவரசன் சோலைக்கு வந்தபோது பொதுமக்கள் சோலைக்குள் வந்து இருத்தற்குரிய காலம் அப்போது தான் முடிவடைந்தது. சிறிது தூரத்தில் வரும்போதே அதை அறிவிக்கும் மணியோசையை அவன் கேட்டான். சோலைக்குள் பூப்பறித்துக் கொண்டிருந்த பெண்ணும் அதைக் கேட்டாள். அவளும் உடனே தன் வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் போவதற்காக உள்ளே யிருந்து விரைவாக வந்தாள். சரி, பொதுமக்களுக்கு உரிய காலம் முடிந்துவிட்டது. இனி நாம் சோலைக்குப் போகலாம் என்றெண்ணி உதயகுமரனும் சோலையை நோக்கி வந்தான். விதி குறுக்கே வந்து அப்பெண்ணை யும் உதயகுமரனையும் சந்திக்கச் செய்துவிட்டது.

சோலைக்குள் புகுந்த உதயகுமரன் நேராகத்தான் வழக்கமாக உட்காரும் இடத்தை நோக்கிச் சென்றான். இது அவன் வழக்கத்திற்கு நேர்மாறானது. அதாவது அவன் எப்போது அந்தச் சோலைக்கு வந்தாலும் அதன் அழகைக் கொஞ்சம் ரசித்துவிட்டுத்தான் தன் இருப் பிடத்திற்குப் போவான். அந்தப் பூந்தோட்டம் அவ் வளவு எழில் வாய்ந்தது. தினமும் புதிய புதிய அழகோடு பார்ப்பவர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுவது அது. ஒரு பக்கம் வானளாவிய மரங்கள். எக்காலத்திலும் பசிய இலைகளோடு கூடிக் கதிரவன் ஒளியையும் உஷ் ணத்தையும தம் கீழ் இருப்பவர்மேல் படாமல் தடுத்துக் கொண்டிருக்கும். ஒருபுறம் அழகிய மலர்ச்செடிகள். அச்செடிகளில்தான் எத்தனை வகை! மரங்களின்மீதும் பற்பல செடிகளின்மீதும் கொடிகள் படர்ந்து அழகிய காட்சிகளை அளிக்கும் ஒருபுறம். அப்படிப் படர்ந்ததனால் அதோ குகைபோலத் தோற்றமளிக்கிறது ஒரு புதர்.

இதோ மண்டபம்போலக் காட்சியளிக்கிறது மற்றொரு புதர். அங்கே மலையையும் அருவியையும்போலத் தோற்றம் அளிக்கிறது வேறொரு புதர். இங்கே கோபுரத்தை நினைவூட்டுகிறது இந்தப் புதர். இடையிடையே அழகிய கல் மேடைகள். அவற்றின் நடுவே அழகிய சிலைகள். மேடைகளையடுத்து அழகிய நீர்த்தொட்டிகள் ஆங்காங்குக் கொடி வீடுகள்! அவற்றில் மக்கள் உட்காருவதற்காக அழகிய ஆசனங்கள். இனிய வாசனையோடு மெல்லிய பூங்காற்று அங்கே எப்போதும் மெல்ல வீசிக்கொண்டிருக்கும்.

உதயகுமரன் இந்தக் காட்சிகளைக் கவனியாமல் சென்றான் என்றோம்! அப்போது அவனுக்கு இதெல்லாம் லட்சியமில்லை. அவனுடைய லட்சியமெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அவள் யார்? அவளைத் தான் அடைய முடியுமா? என்பதே அது! வேகமாக நடந்து சென்று உதயகுமரன் தன் வழக்கமான இருப்பிடத்தை அடைந்தான். அவனுக்கு இருக்கை கொள்ளவில்லை. கைவிரல்களைப் பின்பக்கமாகக் கோர்த்துக்கொண்டு, முன்னும் பின்னுமாக நடந்தான். சில நிமிஷங்கள் கழிந்தன. "என்ன! இன்னும் அவனைக் காணோம்!" காவலன்மீது இலேசான கோபம் உதயமாயிற்று. அவன் வருகிறானா என்று பார்க்க ஆவல் உண்டாயிற்று. கொஞ்சம் அந்தப் பக்கமாகப் போய் அவன் வரும் வழியைப் பார்த்தான். காவலன் கொஞ்ச தூரத்தில் வேகமாக வந்துகொண்டிருப்பதைக் கண்டான். இலேசான கோபம் இலேசான புன்சிரிப்பாக மாறிற்று. இளவரசனை எதிரில் கண்ட வேலைக்காரன் வேகமாக ஓடிவரலானான்.

உதயகுமரனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை "என்ன செய்தி? போனது என்னவாயிற்று?" என்று அவன் தன்னை அணுக இன்னும் சில அடிதூரம் இருக்கும்போதே அவன் அவ்வேலைக்காரனைவினவினான். ஆவலும் அதிகாரமும் அக்கேள்வியில் தொனித்தன. பாவம் அக்காவலனுக்கு ஓடிவந்ததனால் பெருமூச்சு வாங்குகிறது. ஆயினும் எசமான் கேள்விக்குப் பதில் சொல்லியாக

வேண்டும். "அவள்...நாடகக் கணிகை...மாதவியின் மகள் மணிமேகலை!'' என்ருன் அவன் பெருமூச்சு வாங்கிக்கொண்டே.

நாடகக் கணிகை என்னும் சொல்லைக் கேட்டதுமே உதயகுமரனுடைய முகம் அன்றலர்ந்த தாமரைபோல் ஆகிவிட்டது. உடனே கழுத்திலணிந்திருந்த நவமணி மாலை ஒன்றைக் கழற்றி அக்காவலன்மேல் தூக்கிப் போட்டான். அவனுடைய நல்வாக்குக்கு அது பரிசு. அது தன்மேல் விழுந்தவுடனே அவ்வேலையாளின் முகம் அன்றலர்ந்த தாமரையாயிற்று. அவன் பெரிய பெரிய கும்பிடுகளாகப் போட்டுக்கொண்டே பின்பக்கமாக நகரலானுன். மனம் ஒருவாறு ஒரு நிலை அடையப்பெற்ற உதயகுமரன் தன் ஆசனத்தை அடைந்து அதில் உட்கார்ந்தான்.

மணிமேகலை! நர்டகக்கணிகை! மாதவியின் மகள்! அதாவது வணிகன் கோவலனின் மகள். அவன் மதுரையில் கொல்லப்பட்டான் என்று கேள்வி! மாதவியின் தாய் நமது சித்திராபதி! அவளை வரவழைத்துப் பேசினுல் அரை நொடியில் மணிமேகலை என்னுடையவள் ஆகிவிடுகிருள்! நாடகக் கணிகை ஆனதால் நான் அவளை அடைவதற்கு என்ன தடை இருக்கப்போகிறது! பெட்டிக்குள்ளே பூட்டிவைத்திருக்கும் பணம்! திறவுகோல் என்னிடத்தில் இருக்கிறது! திறந்து எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே!

இவ்வாறு எண்ணமிட்ட அவன் கொஞ்சம் பக்கவாட்டில் திரும்பி, "யாரங்கே?'' என்ருன். உடனே அருகில் கொஞ்சம் மறைவில் இருந்த ஒரு காவலாளி அவன் முன் வந்து தலைவணங்கி வாய்புதைத்து, ஏவலைக் கேட்கத் தயாராய் நின்ருன். "நாளை மாலை சரியாக ஐந்து மணிக்கு நாடகக் கணிகை சித்ராபதியை இங்கே வந்து என்னைப் பார்க்கச்சொல்! போ! இப்போதே போ! என்ருன். காவலன் உடனே ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு விரைந்து நடந்தான். உதயகுமரன்

ஆவல் கொஞ்சம் அடங்கிற்று. எத்தனை சதவீதம் அடங்கிற்று என்பது தெரியாது! இது மணிமேகலையின் கதை. இது நாம் அறிந்ததே. இப்பழங்கதையை விட்டு இனி நாம் புதுமையில் புகுந்து பார்ப்போம்.

# 2. இரண்டு பெரியார்கள்

காஞ்சீபுரம் எங்கும் ஒரே பரபரப்பு! எங்கும் ஆனந்ததீர்த்தர் என்பதே பேச்சு! ஆஹா! என்ன தேஜஸ்! என்ன தேஜஸ்! அவருடைய வதனம் அப்படியே களையை அள்ளி வீசுகிறது! என்ன சாந்தம்! என்ன சாந்தம்! அவருடைய கடாட்சம் (கண்களின் நுனி) அப்படியே கருணையை அள்ளி வீசுகிறது! இது ஓரிடத்தில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்துச் சொல்வது!

புத்தகயாவிலிருந்து ஆனந்த்தீர்த்தர் என்னும் பௌத்தபிக்ஷு ஒருவர் வந்திருக்கிறார். பௌத்த பள்ளியில் தங்கியிருக்கிறார். அவருடைய மஹிமையை நான் என்னவென்று சொல்லுவேன்! ஸாக்ஷாத் அந்த புத்த பகவானுடைய அவதாரமே அவர்! அவர் தியானத்தில் இருக்கும்போது பார்த்தால் புத்தபகவான் சிலையிலே கண்கள் கீழ்நோக்கிய பார்வையாய் சாந்தஸ்வரூபியாய்க் காட்சியளிப்பது போலவே காட்சியளிக்கிறார். அவர் பார்வைபட்ட இடமெல்லாம் கருணை வெள்ளம் பாய்கிறது! அவரைக் கண்டதுமே வியாதிகள் பறந்து விடுகின்றன. நோயாளிகள் அவரைக் கண்டதும் வணங்குகிறார்கள்! நோய் தீரப்பெற்று மலர்ந்தமுகத்துடன் திரும்பிச்செல்கிறார்கள்! இது மற்றோரிடத்தில் மற்றொருவர் பேசும் பேச்சு!

எதற்கும் இந்த உலகிலே எதிர்ப்பு உண்டல்லவா? என்னமோ ஒரு சன்னியாசி! மடத்துலே வந்து உட்கார்ந்திருக்கிறான்! என்ன மூட ஜனங்கள்! (இவருக்கு உலகில் உள்ள எல்லாரும் மூடஜனங்கள். இவர் ஒருவர் தான் புத்திசாலி என்ற நினைப்பு). அந்தச் சன்னியாசி

யைச் சுற்றிக்கொண்டு பலாப்பழத்திலே ஈ மொய்த்திருப்பதுபோலக் காணப்படுகிறுர்கள்! அவனுக்குத்தான் எத்தனை உபசாரம்! என்ன வேண்டிக்கிடக்கிறது! அவன் என்ன அப்படிப் பிரமாதமாகச் சாதித்து விட்டான்! அத்தைப் பண்ணினுன், இத்தைப் பண்ணினுன் என்று பிரமாதமாக அளக்கிறுர்கள்! இது வேருெரு புறம் இன்னெருவர் பேசும் பேச்சு! இவற்றுக்கு இடையிலே நாமும் அவரை அணுகி அவர் செய்தியைக் கொஞ்சம் கவனிப்போம்.

தென்னுட்டில் அச்சமயத்தில் புத்தமதத்தின் பெருமை வேறு மதக்காரர்களால் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டு வரலாயிற்று. அந்தக் குறையைப் போக்கி அதை மேன்மைப்படுத்தவே அவர் வந்துள்ளார். மடத்தில் தங்கி மதப்பிரசாரம் செய்துவருகின்றுர். பஞ்சசீலக் கொள்கைகளை எடுத்து விளக்கி அக்கொள்கைகளைப் பின்பற்றுமாறு மக்களை வேண்டிக்கொள்கின்றுர்.

மடத்து வாசலில் கூட்டமாய்க் கூடியிருந்த ஜனங்களுக்கு உபதேசம் செய்தாகிவிட்டது. உள்ளே சென்றுர் ஆனந்ததீர்த்தர். ஸத்யாநந்தா! என்று கூப்பிட்டார். ஒரு பௌத்தபிக்ஷு மொட்டைத் தலையுடன் வந்து தலை வணங்கிக் கைகட்டி வாய்புதைத்து எதிரில் வந்து நின்றுர். "அந்தப் பூந்தை என்பவர்தம் மருமான் அறவணனைப் பற்றி என்னமோ சொன்னுரே, அந்தப் பாடசாலைக்குப் போய் அவனைக் கவனித்துவிட்டு வந்தாயா?" என்றுர். "ஆம் கவனித்துவிட்டு வந்தேன். அவன் வரருசியைப்போல ஏகசந்தக்கிராகி! ஆளவந்தாரைப் போலக் குருவுக்கு மிஞ்சின சிஷ்யன்!" என்றுர் ஸத்யானந்தர்.

இங்கே சொன்ன அறவணன், அறவணவடிகளைத் தவிர வேறில்லை. அறவணடிகளுக்குப் பூந்தை என்று ஒரு மாமன் உண்டா? "பூந்தை" என்று ஒரு பெயர் உண்டா? என்று ஆராய்ச்சியில் இறங்கி அவஸ்தைப்பட வேண்டாம். தமிழ் இலக்கணத்தைப் புரட்டிப் பார்த்தீர்

களானுல் "ஆதன் தந்தை ஆந்தை", "பூதன் தந்தை பூந்தை'' என்ற உதாரணங்கள் காணப்படும். ஆகையினுலே இந்தப் பூந்தை, பூதன் தந்தையாயிருக்கலாமல்லவா? பூதன் தந்தை அறவணருக்கு மாமனுயிருக்கலாகாதா? பூதன், பூந்தை என்பவை சுத்தமான தமிழ்ப் பெயர்கள். இந்தப் பெயர்களைச் சொன்ன மாத்திரத்தாலே இவர்கள் தமிழர் என்பது நிச்சயமாக வேண்டும். அதற்காகவே இந்தப் பெயர் குறிக்கப்பட்டது. காடன், மாடன் என்றவுடனே வேடன் என்பது ஞாபகத்துக்கு வரவில்லையா? "ஜான்புல்" என்றவுடனே இங்கிலாந்து ஞாபகத்திற்கு வருகிறதல்லவா? "அங்கிள்சாம்'' என்றவுடன் அமெரிக்கா ஞாபகத்திற்கு வருகிறதல்லவா? அப்படியே பூந்தை என்றதால் அறவணர் தமிழர் என்பது ஞாபகத்திற்கு வரும் என நாம் கருதுகிருேம்.

சரி. இப்போது மேலே செல்லுவோம். "நல்லது ஸத்யானந்தா, வாசலில் கூட்டம் கலைந்திருக்கும். பூந்தை தனியாக என்னைக் காணுவதற்காகக் காத்துக்கொண்டிருப்பார். அவரிடம் நாளை அவருடைய மருமானை அழைத்து வரும்படி நான் சொன்னதாக அவரிடம் தெரிவி! இப்போது எனக்கு வேலையிருப்பதால் நாளை என்னைச் சாவகாசமாகப் பார்க்கலாம் என்று சொல்!'' என்ருர் ஆனந்ததீர்த்தர். ஸத்யானந்தர் வணங்கி விட்டுப் போய்விட்டார்.

மறுநாள் காலை மடத்து வாசலில் ஆனந்ததீர்த்தருடைய உபந்யாசம். ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள். ஆசையே துக்கத்துக்குக் காரணம் என்பதை ஆனந்தர் அழுத்தந்திருத்தமாய் விளக்கினர். அவருடைய உபந்யாசம் அநேகமாக முடிந்துவிட்டது. அந்தச் சமயத்தில் பூந்தை அறவணரைக் கூட்டிக்கொண்டு வந்து சேர்ந்தார். கூட்டத்தின் நடுவே உபந்யாசகர் இருக்கும் இடத்திற்குப் போகும்படி ஜனங்கள் வழிவிட்டு உட்கார்ந்திருந்தனர். நேரங்கழித்து வருகிறவர்களுள் முக்கியமானவர் அருகில் வந்து அமருவதற்கு முன்னுல் கொஞ்சம் இடமும் விடப்பட்டிருந்தது. பூந்தை அந்த

வழியாக வந்தார். ஆனந்தர் முன்னிலையை அடைந்ததும் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். அறவணரையும் அப்படியே வணங்கச்செய்தார். முன்னல் இருந்த இடத்தில் மருமாேனாடு தாமும் அமர்ந்தார்.

ஆனந்தர் அவர் வந்ததும் மந்தஹாஸத்துடன் கையை அமர்த்தி அவர் உட்காருவதற்கான இடத்தையும் கையால் குறித்துக் காட்டினுர். பிரசங்கம் தங்குதடையில்லாமல் வாயின் வழியே சொற்களாக வெளிவந்துகொண்டிருந்தது. மாமனும் மருமானும் உட்கார்ந்ததும் கொஞ்சம் தமது பிரசங்கத்தை நிறுத்தினுர். அறவணரை இரண்டொரு விநாடி உற்றுப்பார்த்தார். "குழந்தாய், உனக்கு என்னிடம் வர இத்தனை காலம் ஏன் ? உன்னை நான் நீண்டகாலமாகத் தேடிக்கொண்டிருக்கிறேனே ! உனக்குத் தெரியாதா ?" என்ருர்.

அறவணருக்கு ஒன்றும் புரியவில்லை. என்னை இவர் தேடிக்கொண்டிருக்கிருரா ! அது எனக்கு எப்படித் தெரியும். நான் இதற்குமுன் இவரைப் பார்த்ததுமில்லை, கேள்விப்பட்டதுமில்லையே ! இவர் என்னமோ என்னை நன்ருகத் தெரிந்தவர்போல் பேசுகிருரே, இது என்ன புதுமை!'' என்று தமக்குள் எண்ணினுர். இப்படி இவர் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, ஆனந்ததீர்த்தர் தம் இருப்பிடத்தைவிட்டு எழுந்து வந்தார். அறவணர் பக்கத்தில் உட்கார்ந்தார். அவர் பக்கத்தில் உட்கார்ந்து ஒரு தாய் தன் குழந்தையைப் பாராட்டுவதைப் போல அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டே தம் ஒரு கையால் அவர் தலையைத் தடவிக்கொடுத்தார்.

அவ்வளவில் அறவணருக்குப் புதியதொரு உணர்ச்சி உண்டாயிற்று. அதற்கு முன் புத்தகயாவிலிருந்து பலர் அங்கே வந்து உபந்யாசங்களைச் செய்து மதப் பிரசாரம் செய்திருக்கிருர்கள். அறவணர் அவர்களில் இரண்டொருவரை அடைந்து அளவளாவியிருக்கிருர். அவர்களெல்லோரும் அவ்வளவு உயர்ந்தவர்களாக அவருக்குப் படவில்லை. இப்பொழுது இவரைப் பற்றி அவருக்கு

உள்ளூர ஒரு நல்ல எண்ணம் தோன்றிற்று. மிகவும் அன்புடையவர் இவர். எனக்கு இவரைத் தெரியாது; ஆனால் இவரோ தெரிந்தவர்போலப் பேசுகிறார். ஞானி களுக்கு அவர்களுடைய சீடர்கள் எல்லோரும் குழந்தை கள்தான்; குரு ஒரு பிதா அல்லவா? எப்படியிருந் தால் நமக்கென்ன; இவர் அன்பு என்னைக் கட்டுப் படுத்துகிறது. இவரிடம் எனக்கும் அன்பு தோன்று கிறது, என்று தமக்குள் எண்ணிக்கொண்டார்.

"குழந்தாய்! நீ தினமும் இங்கேவந்து போய்க் கொண்டு இரு! உன்னிடத்தில் கலைமகள் ஒளியை வீசு கிறாள்! உன்னுடைய சக்தியை வீணான வழிகளில் செலவிட்டுவிடாதே! அதற்கு ஒரு நல்ல உயர்ந்த வழி இருக்கிறது, சொல்லுகிறேன். பழுத்த மரம் ஊருக்கு நடுவில் எல்லாருக்கும் பொதுவாக இருப்பதுபோல நீ இருக்கவேண்டும். நீர் நிறைந்த ஊருணியைப் போல நீ எல்லாருக்கும் உதவவேண்டும்'. ஞானச் செல்வம் உன் மூலமாக இந்தத் தமிழ்நாட்டில் பரவ வேண்டும். அதற்கெல்லாம் வழிஇருக்கிறது! பல பிறப்புக்களில் நீ புண்ணியத்தைச் செய்து ஞானச் செல்வத்தைப் பெற் றிருக்கிறாய். அதை நீ சுயநலத்திற்குப் பயன்படுத்த மாட்டாய் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் அதைத் தக்கபடி பயன்படுத்த நான் உனக்குச் சொல்லவேண்டி யது ஒன்று உண்டு" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார். பிறகு தம் இடத்திற்குப் போய் அமர்ந்து உபந்யாசத்தை முடித்தார்.

ஆனந்ததீர்த்தருடைய குட்டிச் சொற்பொழிவு எல்லாருடைய கண்களையும் அறவணர்பேரில் திருப்பி விட்டது. அவர்களுடைய பார்வையில் அறவணர் உயர்ந்த மதிப்புப் பெற்றவரானார். ஆனந்ததீர்த்தருக்கு அடுத்தபடியாக ஒரு நொடியில் அவர் ஆகிவிட்டார். அவருடைய மாமன் பூந்தைக்குச் சந்தோஷமும் பெருமையும் இவ்வளவு அவ்வளவு இல்லை. அவர் உடல் பூரித்துப்போனார். உபந்யாசம் முடிந்து எல்லாரும்

எழுந்துபோனபோது ஆனந்தர் பூந்தையைப் பார்த்து "உமது மருமான் இணையற்ற பெருமையை அடையப் போகிறான். அந்தப் பெருமையில் உமக்கும் பங்கு உண்டு. போய்வாருங்கள்!" என்றார்.

பிறகு சிலநாள்வரை விசேடம் ஒன்றும் நிகழவில்லை. ஆனந்தர் உபந்யாசம் செய்யும்போது அறவணரும் பூந்தையும் போய் இருந்து அதனை முழுவதும் கேட்டு ரசிப்பது வழக்கமாயிற்று. அப்பால் இரண்டொருநாள் ஆனந்தர் அறவணரைச் சிற்சில கேள்விகள் கேட்டு அவருடைய கல்வியின் ஆழத்தைத் தெரிந்துகொண்டார்.

இடையில் வைகாசி மாதம் பௌர்ணமி நாள் வந்தது. அன்று புத்தரது பிறந்தநாள் விசேஷமான திருவிழாக்கள் நிகழலாயின. அன்று மாலை ஆனந்த தீர்த்தரின் உபந்யாசம். வழக்கத்திற்குமேல் மிக அதிக மாகக் கூட்டம் கூடியிருந்தது. வழக்கம்போல் முன்னணி யில் பூந்தையும் அறவணரும் இருந்தனர். அன்று உபந்யாசம் மிகச் சொற்பம்! அதை முடித்துக்கொண்டு "அறவண, ஞானச்செல்வா, இங்கே வா! என்றார். அறவணர் அருகில் போய், அங்கோர்புறம் கொஞ்சம் மறைவில் வைக்கப்பட்டிருந்த "பூமுடி" ஒன்றை எடுத்து அறவணர் தலையில் சூட்டினார். இன்று முதல் நீ இந்தத் தமிழ்நாட்டுப் புத்த பிக்ஷுக்களுக்குத் தலைவன். புத்தகயாவிலுள்ள நமது தலைமை மடத்திலிருந்து வந்திருக்கிற திருமுகமும் (கடிதம்), நியமனப்பத்திரமும் இதோ இருக்கிறது. இந்தக் கூட்டத்தார் முன்னிலையில் அவற்றை வாசிக்கிறேன்!" என்று சொல்லி இரண்டை யும் வாசிக்கலானார். கடிதத்தில் கண்டிருந்ததாவது,

"தங்களுடைய திருமுகத்தைப் பார்வையிட்டோம். வேறு சில குறிப்புக்களாலும் உங்கள் கடிதத்தில் கண்டவர் நமது காரியத்திற்குத் தகுதியானவர் என்று தெரிந்துகொண்டோம். அவரைத் தமிழ்நாட்டுப் புத்த சங்கத்திற்குத் தலைவர் ஆக்கிவிடவும்!" என்று இருந்தது. நியமனப்பத்திரத்தில், "இன்று முதல் காஞ்சியிலுள்ள

ஆனந்ததீர்த்தருடைய சீடர் அறவண அடிகள் தமிழ் நாட்டுப் பௌத்த சங்கத்திற்குத் தலைவர் என்பதற்கு இது நியமனப்பத்திரம்!" என்று இருந்தது.

கடிதம், பத்திரம் இரண்டையும் வாசித்தபின் ஆனந்தர் "அறவண அடிகள் வாழ்க!" என்றார். உடனே கூட்டத்திலிருந்து "அறவணவடிகள் வாழ்க!" என்ற சத்தம் வானைப்பிளந்தது. பிறகு ஆனந்தர் அறவணவடிகளைப் பார்த்து, "இப்பொழுது தமிழ் நாட்டில் பிற மதங்களாகிய களைகள் நிறையத் தோன்றி யுள்ளன. சமயத்திற்குள் சமயமாக ஒவ்வொரு சமயத் திற்கும் உட்பிரிவுகளாக உள்ள சமயங்களும் நிறைய ஏற்பட்டுள்ளன. அவையெல்லாம் தத்தம் கொள்கைகளை ஆடம்பரமான, விசித்திர விநோதமான, வர்ணஜாலங்கள் போல் அழகான பேச்சுக்களால் மக்களிடையே பரப்பு கிறார்கள். அவற்றில் உண்மை இருக்கலாம். ஆனால் அவர்கள் முக்கியமான ஒன்றை மறந்துவிட்டார்கள். மனித சமூகம் எந்த நிலையில் இருக்கிறது! அவர்கள் உய்வதற்கு எளிதான வழி என்ன? என்பதை அவர்கள் சிந்திக்கவில்லை. தங்கள் மதம் இன்னின்ன வகையில் உயர்ந்தது என்று ஏதேதோ சொல்லித் தாங்கள் கூறுவதே சரி என்று நிலைநாட்டப் பார்க்கிறார்கள். நீ செய்யவேண்டியது என்ன? மக்கள் எளிதாய்க் கடைப்பிடித்து நிர்வாணமடையும் மார்க்கத்தைப் போதிக்கவேண்டும். பஞ்சசீலக் கொள்கைகளைப் பரப்பு! பேதமை முதலான பன்னிரண்டு நிதானங்களையும் எடுத்துப் போதிப்பாய்! இவையே போதும்! பக்குவ மடைந்த அறிவாளிகளுக்கு நமது மதக் கொள்கைகளைச் சாங்கோபாங்கமாகக் கற்பிப்பாயாக! இன்னொன்றும் சொல்லுவேன். இந்த உலகில் சுத்த சாத்வீகமானது எதுவும் பிரகாசிக்காது! அதோடு சில தந்திரங்களையும் அளவாகக் கைக்கொள்ளவேண்டும்! அப்படிப்பட்டவை களைக் கையாள நீ கொஞ்சமும் பின்னடையவேண்டாம். அப்படிச் செய்யாவிட்டால் புறச் சமயக் களைகளால் நமது மதம் விரைவில் க்ஷீணித்துவிடும். உனக்குத் திறமையிருக்கிறது! நீ எல்லாவற்றையும் சமாளிப்பாய்!

என்று நான் நம்புகிறேன்!'' என்ருர். அறவணரும் "அப்படியே ஆகட்டும் குருநாதா!" என்ருர். பிறகு நியமனச் சடங்குகளாகச் சில நடைபெற்று முடிந்ததும் கூட்டம் கலைந்து சென்றது.

## 3. ஐக்கிய முன்னணி

"என்ன கௌதமரே இப்போது நமது தமிழ்நாட்டுப் பௌத்த சங்கத்துக்குப் புதிய தலைவர் ஒருவர் வந்திருக்கிருரே, அவரைப்பற்றி உமக்கு ஏதேனும் தெரியுமோ?

"அறவணவடிகளைப் பற்றித்தானே அறிமுகப் படுத்துகிறீர்கள் அகோரரே?''

"ஆமாம் அவரேதான்!"

"எவ்வளவோ பேர்வந்து பார்த்தாகி விட்டது! இவர் வந்து முடித்து விடப்போகிருர்!"

"ஓய் பரப்பிரம்ஹம்! உம்முடைய பரப்பிரம்ஹ வாதம் எல்லாம் அவனிடம் பலிக்காது! அவன் எத்தனையோ மாயாவாத வேதாந்திகளைத் திணறவடித்திருக்கின்ருன் என்ருர் அகோரத்திற்குப் பக்கத்தில் இருந்த பிரபாகர்!

"என்னுடைய மாயாவாதம் பலிக்காது. உம்முடைய "அஸ்தி நாஸ்தி" பலித்து விடுமாக்கும்!" என்ருர் கௌதமர் முருக்காக!

"நாம் இங்கே சண்டைபோடவா கூடியிருக்கிருேம் நமக்குள் ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்து அந்த அறவணனுடைய பிரசாரத்தையெல்லாம் சிதறவடித்து புத்த மதத்தையே நாஸ்தி செய்துவிட அல்லவா கூடியிருக்கிருேம். இதை மறந்து சண்டை போடுகிறீர்களே;" என்ருர் சமாதானக் கர்த்தாவாக முன்னே வந்த இளைய நம்பி!

வாசகர்கள் இப்போது கௌதமர், அகோரர், பிரபாகரர், இளையநம்பி என்னும் நால்வர் கூடிப் புத்த மதத்துக்கும் அதன் சார்பாக அறவணவடிகளுக்கும் எதிராக ஐக்கிய முன்னணி வகுத்துக்கொண்டிருக் கிறார்கள் என்பதை அறிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம். "எதற்கும் நாலுபேர்கூட வேண்டும்." அல்லவா ?

மேல்க்கண்ட நமது ஐயக்கிய முன்னணித்தோழர்கள் நால்வரும் புதுமைப் போக்குடையவர்கள். இவர்கள் நால்வரும் சேர்ந்து அப்போதைக் கப்போது என்ன புதுமை நடந்து வருகிறது என்பதை நமக்குப் புலப்படுத்துவார்கள்.

சமாதான அறிக்கை வெளியானதும் "நமக்குள் சண்டையா! வேடிக்கைக்குவேடிக்கை! பதிலுக்குப்பதில்!" அவ்வளவுதானே என்றார் கௌதமர்.

வேடிக்கையாவது வேடிக்கை! வேடிக்கைக்கு இதுவா சமயம்? வினையைக் கவனியுங்கள்! காரியத்தைப் பற்றிப் பேசுங்கள்! அந்த அறவணன் என்னென்ன செய்து வருகிறான் என்பதைக்கொஞ்சமாவது கவனித்தீர்களா?" இது அகோரத்தின் வார்த்தை.

"என்ன செய்து வருகிறான்? நீர் கவனித்தீரா?" என்றார் பிரபாகரர்.

"கவனியாமலா சொல்கிறேன்! வந்ததும் வராதது மாக அரசரிடம் போய் யாசகம் கேட்டு ஊர்ச்சுடுகாட்டை அடுத்துப் பக்கத்திலுள்ள பெரிய மைதானத்தை வாங்கி விட்டான். அங்கே என்னென்னமோ கட்டிடங்கள் எல்லாம் கட்டுகிறார்கள்!"

"பூ! இவ்வளவுதானா! ஏதோ ஒருநாள் சுடுகாட்டுக்கு ஜெபம் பண்ணப்போனீராக்கும்!பக்கத்திலேகட்டிடங்கள் கட்டப்படுவதைப் பார்த்து விட்டீர்! அதைப் பிரமாதமாக வந்து அளக்கிறீர்! நான் என்ன சும்மா இருந்தேன்

என்று நினைக்கிறீரா? உம்மைக் காட்டிலும் ஒருபடி அதிகம் போய்விட்டேன், தெரியுமா! அதாவது அவர்களுடைய மாயையை எல்லாம் அறிந்து விட்டேன். அந்தச் சுடுகாட்டுக் கோட்டத்தில் சம்பாபதிதெய்வத்திற்கு ஒரு கோவில் கட்டுகிறார்கள். உலக அறவி என்னும் பெயரோடு அங்கே ஒருஅன்ன சத்திரம் கட்டப்படுகிறது. பிக்ஷுக்கள் இருந்து தபஸ் பண்ணுவதற்காகப் பல விஹாரங்களைக் கட்டுகிறார்கள்!" என்று சொன்னார் கௌதமர்.

"நல்லது பிரபாகரரே, நீர் ஏதாவது கவனித்தீரா?" என்றார் இளைய நம்பி;

கவனிக்காமல் விடுவேனா? நீங்களெல்லாரும் இந்த காவிரிப்பூம்பட்டினத்தையேசுற்றிக்கொண்டிருக்கிறீர்கள் நான் வெளியூருக்குப் போய் அவர்கள் செய்தியை அறிந்து வருகிறேன்!''

"அப்படி என்ன கண்டீர்?''

"மணிபல்லவத்தீவு உங்களுக்குத் தெரியுமல்லவா? ஆள் நடமாட்டம் இல்லாத அந்தத் தீவில் கொஞ்ச காலமாகப் பௌத்த பிக்ஷுக்கள் போய்க் குடியேறி அத்தீவைத் தங்களுடையதாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஏதாவது விசேஷம் நடக்கிறதா என்று பார்க்க எண்ணி அங்கேபோனேன். எண்ணியபடியே ஆயிற்று! அங்கே பெரிய புத்த பீடிகை ஒன்றும், அதற்குப் பக்கத்தில் கோமுகி என்னும் குளம் ஒன்றும் ஏற்படுத்துகிறார்கள். குளத்தைக் சுற்றிலும் சில பாறைகள் உள்ளன. அவற்றைக் குடைந்து குகைகள் ஆக்குகிறார்கள். வெளியிலிருந்து பார்த்தால் நிர் மானுஷ்யம். ஆனால் குகைகளுக்குள் பிக்ஷுக்கள்! அது போகட்டும் நம்பிகளே, நீங்கள் ஏதாவது கண்டுபிடித்தது உண்டோ?"

"நான் மட்டும் என்ன சோப்பளாங்கியோ? உங்களுக்கு நான் குறைய மாட்டேன் என்பது நினைவில் இருக்கட்டும்! நீங்கள் ஊரைச்சுற்றிப் பார்க்கிறீர்கள்! நான் ஆளையே கவனித்தேன்! அவனிடத்திற்கு யார் யார் வருகிறார்கள்? என்னென்ன திட்டம் வகுத்திருக்கிறான்! எப்படியெப்படி வேலை செய்யப்போகிறான்? இதுவே என் ஆராய்ச்சி! மாருதவேகன் ஒருநாள் வந்து அவனை வணங்கினான். அவன் மூலமாக வித்யாதர நாட்டிலிருந்து எந்திரச் சிற்பிகள் வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள். அரசரிடம் சொல்லி ஊருக்குச்சற்று ஒதுக்குப் புறமாக உள்ள உவவனத்தைத் தங்கள் சொத்தாக ஆக்கிக் கொண்டுவிட்டார்கள் பௌத்தர்கள். அதில் ஒரு பளிங்குஅறை கட்ட ஏற்பாடாகியிருக்கிறது. அதில் அற்புதமான புத்த பீடிகை ஒன்று அமைக்கப்போகிறார்களாம். நமக்குள் அகோரம்தான் கொஞ்சம் மெதுவு!"

"மெதுவா! கண்டபடி வேடிக்கை செய்து கொண்டிருந்த உங்களைக் காரியத்தில் திருப்பினேனே! அது மெதுவா! நான் ஆரம்பத்திற்குக் கொஞ்சம் வெளியிட்டால் அதுவேதான் முழுவதும் என்று நினைத்துக் கொண்டுவிட்டீர்கள்! உலக்கைக் கொழுந்தும் குந்தாணி வேருந்தான் உங்கள் புத்தி!"

"சரி; அப்படிப் பெரிதாக என்ன கண்டுபிடித்துவிட்டீர்? அதைத்தான் சொல்லுமேன், கேட்போம்!"

"பௌத்த பிக்ஷுணிகளாகப் பெண்களும் சேர்வது உண்டு அல்லவா? அந்த வகையில் சில பெண்களைச் சேர்த்திருக்கிறார்கள். உள்ள நிலைமையைப் பார்த்தால் மதப் பிரசாரத்திற்காக அவர்கள் செய்யும் இரகசிய ஏற்பாடுகளில் இந்தப் பெண்களும் முக்கிய அங்கம் வகிப்பார்கள் என்று தெரிகிறது. பௌத்த சங்கத்தார்க்கு உரிய மடத்திலேயே ஒருத்தி வேலைக்காரியாக இருக்கிறாள். இன்னொருத்தி தெருவில் அரைப் பைத்தியமாக அலைபவள்போலக் காட்சியளிக்கிறாள். அவளுடைய தங்குமிடம் ஒரு தனி மடம். அவர்களுடைய பெண்

அங்கத்தினர்கள் எல்லாருக்கும் இருப்பிடம் அந்த மடந்தான். இன்னொருத்தி மணிபல்லவத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிருள். ஒருத்தி அப்பெண்களுக்குத் தலைமை வகிக்கிருள். அவள் அழகியவள். அவளை ஒருநாள் மிக நன்ருக அலங்கரித்து மணிமேகலா தெய்வம் போலவே காட்சியளிப்பதாகப் பாராட்டினுர்கள்!''

"சரிதான்; மாயையின் தொடர்பு இல்லாமல் உலக விவகாரம் நடக்குமா? அது கிடக்கட்டும். இப்போது நாம் செயலாற்ற வேண்டிய விதம் எப்படி?''

"அவர்களுடைய செய்கைகளை யெல்லாம் இன்னும் கூர்ந்து கவனிக்க வேண்டும், அவர்கள் உபந்யாசங்கள் நடக்குமிடங்களில் நாமும் அடுத்தநாள் அல்லது மறுநாள் உபந்யாசம் வைத்துக்கொண்டு அவர்கள் பேசியதை யெல்லாம் மறுத்துப் பேசவேண்டும். சமயம் நேர்ந்தால் அவர்களை வாதுக்கு அழைத்து மடக்க வேண்டும்!''

"இதெல்லாம் பழைய உளுத்துப்போன வழிகள்! ஜனங்களினுடைய மனத்தைக் கவரும்படி ஏதாவது செய்யவேண்டும்!''

"இப்போது அந்த அறவணவடிகளிடமும், அவனைச் சார்ந்தவர்களிடமும் ஜனங்கள் கொஞ்சம் அதிகப்பற்று உடைவர்களாயிருக்கிருர்கள். அதன் காரணம் என்னவென்று கவனித்து அப்படியே நாமும் நடந்து கொள்வோம்!''

"கொக்கின் தலையிலே வெண்ணெய் வைத்துப் பிடிக்கிறதுபோல இருக்கிறது இந்தப் பேச்சு!''

"நான் ஒன்று சொல்கிறேன் முடிவாக! அவர்கள் வித்யாதரச் சிற்பிகளை வைத்து ஏதோ வேலைசெய்வதால் யந்திர சாதனங்கள் ஏதோ செய்கிருர்கள். என்னென்ன செய்கிருர்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். அந்த

யந்திரசாதனங்களைத் தங்கள் பிரசாரத்துக்குப் பயன் படுத்தாமல் வேறு எதற்குப் பயன்படுத்தப்போகிறார்கள்? நான் ஊகிக்கிறேன், அந்த யந்திரசாதனங்களைக் கொண்டு சாதிக்கிற சில காரியங்களைத் தெய்வத்தால் நேர்ந்த அற்புதமாக மக்களுக்குக் காட்டுவார்கள். தங்கள் தெய்வம் சக்திவாய்ந்ததென்று பறைசாற்றுவார்கள். நாம் அந்த சக்தி யந்திரசாதனத்தால் உண்டான தென்று நிரூபித்துவிட்டால் அவர்கள் பேச்சில் ஜனங் களுக்கு உள்ள நம்பிக்கை போய்விடும். பிறகு நமது கொள்கைகளைச் சரியானதென்று ஜனங்கள் மதிப் பார்கள்!''

"ஏன்? நாமும் அவர்கள் மாதிரியே வித்யாதரர் களின் உதவியைக்கொண்டு தெய்வ மகிமையை மேம் படுத்துவதற்கான சாதனங்களைச் செய்து பயன்படுத்தக் கூடாது?''

"அது உபயோகமற்ற வேலை! நாம் அவர்களைப் பார்த்துக் காப்பியடிப்பதா? அதைவிட அவர்களுடைய அந்தச் சூழ்ச்சியை அம்பலப்படுத்துவதுதான் சரியான வழி!''

"சரி. அப்படியே செய்வோம். நன்றாக உளவு பார்க்கும் வேலையைச் செய்வோம். சந்தர்ப்பம் ஏற்பட்டால் அரசரிடமும் சொல்லி அவர்கள் சூழ்ச்சியைக் குலைப்போம். மாதம் ஒருமுறை இங்கு கூடுவோம். அவ்வப்போது உள்ள நிலைமைக்குத் தக்கபடி செய லாற்றுவோம்!''

கௌதமரது ஆச்சிரமத்தில் இரகசியமாக மேற் கண்ட கூட்டம் நடைபெற்றது. பேச்சு மேற்கண்ட கட்டத்தை அடைந்ததும் அவர்கள் பிரிந்து சென்றனர்.

## 4. மதயானையும் பளிங்கு அறையும்

"ஏய் சூரா, அதோபார்! குள்ள நரியும் தெள்ளு மணியும் ஓடிவருகிறார்கள்!''

“தம்பி தெள்ளுமணி திருட்டுக்கு நவமணி. அண்ணன் குள்ளநரி தந்திரம் ஏதாவது பண்ணி யிருப்பான். இரண்டுபேரையும் யாராவது கவனித்திருப் பார்கள். ஆபத்து வந்திருக்கும்! தப்பி ஓடிவருகிருர்கள்! ஏவீரா, எப்படி நம் ஊகம்?”

“புத்திசாலிக் கொக்கு! கேட்க வேண்டுமா என்ன உன்சாமர்த்தியத்தை! நீ சொன்னுல் சொன்னதுதான்! தெரிந்ததுதானே சங்கதி!”

“ஏய் குறுக்குச்சால் காமாலேக்கண்ணு, அதோபார்! கண்ணே வைத்துப்பார்! அவர்களுக்குப் பின்னுலே தூரத்திலே இரண்டுபேர் ஓடிவருகிருர்கள்! அவர்கள் இவர்களேத் துரத்திக்கொண்டு வருகிருர்கள் என்பது அப்படி அவர்கள் ஓடிவருவதிலிருந்தே தெரியவில்லேயா!”

“அடே! உன் ஊகமும் பலித்துவிடப் போகிறது போல் இருக்கிறதே! கட்டாயம் இன்றைக்கு மழைவந்து கொட்டப்போகிறது உன்தலேயில்!”

“இவ்வளவு என்ன! இதோ அவர்களும் பக்கத்தில் வந்துவிட்டார்கள்! அவர்களேயே கேட்டுவிடுவோம்!”

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே குள்ள நரியும் தெள்ளுமணியும் இவர்களுக்குச் சமீபத்தில் வந்துவிட்டார்கள். வந்தவர்கள் இவர்களேக் கண்டதும் ஏவீரா! சூரா! யானே வருகிறது! யானே வருகிறது! ஓடுங்கள்! ஓடுங்கள்! என்ருர்கள்.

“ஏய் குள்ளநரி! எங்கேடா யானே வருகிறது! ஒன்றுங்காணுமே! ஏன் வீணுய் ஓடுகிறீர்கள்? நில்லுங்கள்! நில்லுங்கள்!”

“ஏய்! புலிவருகிறது! புலி வருகிறது! என்று சொல்லி ஓடினுர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் யானை வருகிறது! யானை வருகிறது! என்று சொல்லி ஓடுகிறீர்களே! இதுஒரு புதுமை போலும்! யானை வந்தால் என்ன! வந்துவிட்டுப் போகட்டுமே! நில்லுங்கள்! நில்லுங்கள்! ஏய் குள்ளநரி! நீ என்ன தந்திரம் செய்தாய்? தெள்ளுமணியைத் திருட்டிலே மாட்டி விட்டுவிட்டாயா?''

"போடா தொடைநடுங்கி சூரப்புலி. யானை மதம் பிடித்து ஓடிவருகிறது! அதுவும் பட்டத்து யானை! உன்சூரத்தனம் அதனிடம் பலிக்காது! ஓடு! ஓடு!''

"பட்டத்து யானையா! மதம் பிடித்துவிட்டதா! எங்கே! எந்தத் தெருவில்!''

"எல்லாம் உங்கள் தெருவுதான்! காவற்காரத் தெருவு!''

ஐயோ என்வீடு என்ன ஆகிவிட்டதோ தெரியவில்லையே!''

"இரப்பா சூரப்புலி! குள்ளநரி தந்திரம் பண்ணும் என்று தெரியாதா உனக்கு! இவன் பேச்சைக்கேட்டுக் கொண்டு ஓடுகிறாயே! கொஞ்ச நேரத்திற்கு முன்னே நீதானே சொன்னாய்! இந்த இரண்டுபேரும் சேர்ந்து எங்காவது திருடி ஓடிவந்திருப்பார்கள் என்று! இப்போது நீயே குள்ளநரித் தந்திரத்தில் மாட்டிக் கொண்டுவிட்டாயே! யானையாவது! பூனையாவது! உன்னை ஏமாற்றிவிட்டான்பார் குள்ளநரி!''

"இல்லை! இல்லை! அதோ யானை! அதோ யானை!

மதயானை பிளிறும் சத்தம் கேட்கிறது! ஜனக் கூட்டம் ஓடிவருகிறது பின்னால் யானை ஓடிவருகிறது. வீரனும் சூரனும் ஒருபுறம் ஓடுகிறார்கள். வீரப்புலியும் சூரப்புலியும் ஓடுகிறார்கள்டோய்! என்று சத்தம் போட்டுக்கொண்டே குள்ளநரியும் தெள்ளுமணியும் வேறுபக்கமாக ஓடினார்கள்.

ஏறக்குறைய ஒருமணி நேரம் கழிந்தது. ஒரு பெரிய தெருவில் ஒரு சிறசில் ஒரு சந்தின் வழியாகக் குள்ள நரியும் தெள்ளுமணியும் வந்தார்கள். அவர்களுக்கு எதிர்ச் சிறசில் இருந்த ஒரு சந்தின் வழியாக வீரனும் சூரனும் வருவதை அவர்கள் கண்டார்கள். "ஏய் தெள்ளுமணி! சூரப்புலி என்ருல் சூரப்புலிதான்! யானையின் சத்தத்தைக் கேட்டதோ இல்லையோ சூரப்புலி பிடித்துவிட்டது ஓட்டம்!'' என்ருன் குள்ள நரி! வீரப்புலி என்ருல் வீரப்புலிதான்! யானையைப் பார்த்ததோ இல்லையோ பிடித்துவிட்டது ஓட்டம்!'' என்ருன் தெள்ளுமணி!

"ஓடிப்போனேமோ! நாங்கள் அப்படி ஓடி அந்த மதயானையை அடக்கியிராவிட்டால், உங்கள்பாடு என்ன ஆகியிருக்கும் தெரியுமா? நீங்கள் இருந்த இடம் புல் முளைத்துப்போயிருக்கும்!"

"யாரிடத்தில் இந்த அளப்பு! யானையை அடக்கினது இளவரசர் என்று எங்களுக்கு நன்ருகத்தெரியும்! அதோடு நீங்கள் ஓடின வழியில் யானை வந்துவிட நீங்கள் அங்கே பக்கத்தில் ஒரு வீட்டு வாசலில் இருந்த குதிருக்குள் ஏறிக் குதித்து ஒளிந்துகொண்டதும் எங்களுக்குத் தெரியும்! அந்த யானை அந்தக் குதிரில் ஒரு மோது மோதியிருந்தால் அப்போது தெரிந்திருக்கும் உங்கள்பாடு! நல்ல வேளையாக குதிர் இருந்து உங்களைக் காப்பாற்றியது! இல்லாவிட்டால் நீங்கள் இருந்த இடமே தெரியாது போய்விடும்!"

"நாங்கள் குதிர் இருந்தபக்கம் ஒதுங்கியதற்கு இவ்வளவு கதைகட்டுகிறீர்களே! நாங்கள் உங்களைக் கவனிக்கவில்லை என்ற எண்ணமோ! நீங்கள் அங்கே பக்கத்தில் இருந்த வண்ணுன் சாலுக்குள் பதுங்கியதை நாங்கள் பார்க்கவில்லை என்று நினைத்தீர்களோ! அந்த யானை கொஞ்சம் அந்தப்பக்கம் திருக்கண் சாத்தியிருந்தால் அல்லவா தெரியும் உங்கள்பாடு! நீங்கள் இப்போது இப்படிப் பேசுவது ஏது?"

சரிதான்! நமக்குள் சண்டை யென்ன! நமது செய்திதான் ஊர் முழுவதும் அறிந்துகிடக்கிறதே! வாருங்கள் போவோம்! அதோ யானையை அடக்கிய வீரர்! நமது இளவரசர்! நேரில் வருகிறார்! வாருங்கள் போய் வேடிக்கை பார்க்கலாம்!

இவ்வாறு அந்தச் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்தான் தெள்ளுமணி. யாவரும் இளவரசன் உதய குமாரன் தேரில் ஏறிச் சென்றுகொண்டிருந்த பக்கம் சென்று தேரின் பின்னால் வேடிக்கை பார்த்துக்கொண்டு செல்லும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இனி நாம் பழங்கதைக்குச் செல்வோம்!

அழகிய தேர் அசைந்தாடிக்கொண்டு மெதுவாக மனிதர் பின்தொடரும் வகையில் சென்றுகொண்டிருந்தது. அதன் முன்புறம் தாமரை மொட்டுப்போல அமைக்கப்பட்டிருந்த கொடிஞ்சியைப் பிடித்துக்கொண்டு சென்றான் உதயகுமாரன். மதயானையை வென்ற பெருமிதம் அவன் முகத்திலும் அவனுடைய பருத்த தோள்களிலும் பிரகாசித்தது. யானையை அடக்கிய விதத்தைப் பற்றிய எண்ணம் கொஞ்சநேரம் முதலில் மனத்தில் மேலோங்கியிருந்தது. அப்பால் திடீரென்று ஒரு புதிய எண்ணம். இந்த நம்முடைய வீரச்செயலை நமது மணிமேகலை பார்க்கவில்லையே! எந்த மூலையிலிருந்தாவது ஒருவேளை பார்த்தும் இருக்கலாம்! அவள் இப்போது எங்கேயிருப்பாள்! அவளை நான் இப்போதே பார்க்கவேண்டும்!

அன்றைக்குச் சித்திராபதியிடம் செய்தியைச் சொன்னதும் உடனே மணிமேகலையை என் வசப்படுத்தி விட்டு மறுகாரியம் பார்ப்பதாகச் சொன்னாள். அடுத்த விநாடியே தந்தையின் கட்டளை வந்து என்னை வெளியூருக்கு அனுப்பிவிட்டது வெளியூரிலிருந்து வந்ததும் வராததுமாக இந்த மதயானை அட்டகாசம்! கூம்பு முறிந்த மரக்கலம் கடலில் புயற்காற்றால் அலைவதுபோல

அது ஊரில் அலைந்து ஊரையே ஒரு கலக்கு கலக்கி விட்டது. இந்தச் செய்தி மணிமேகலைக்குத் தெரியாமலா இருக்கும்! அவள் பயந்து நடுநடுங்கி எங்காவது ஓடி ஒளிந்துகொண்டிருப்பாள். இப்போது நான் அதை அடக்கிவிட்ட செய்தியும் இதற்குள் அவள் காதிற்கு எட்டியிருக்க வேண்டும். சித்திராபதி அவளிடம் என் காதலைப் பற்றி அவசியம் அறிவித்திருப்பாள். நான் இப்போது அவளைப் பார்த்தால் போதும்! உடனே அவள் ஓடிவந்து என் கைகளில் விழுந்துவிடுவாள்! ஆ! நான் இப்போது அவளைப் பார்க்கவேண்டுமே! எங்கே பார்ப்பது?"

அவனுடைய எண்ணம் இந்த நிலையை அடைந்த போது அவன் நாடகக் கணிகையர் தெருவில் ஒரு பெரிய வீட்டின் எதிரில் போய்க்கொண்டிருந்தான். எண்ணம் கொஞ்சம் தடைப்பட்டு நின்றது! அந்த வீட்டு மாடியின் மேலிருந்து அபஸ்வர வீணை நாதம் அவன் காதில் விழுந்தது! "சிவ சிவ! யார் இப்படி யாழ் வாசிப்பது?" காதைப் பொத்திக்கொண்டே சத்தம் வந்த வழியாக மாடியைப் பார்த்தான். அங்கே! எட்டிகுமரன் என்னும் ஒரு வணிகனும் ஒரு நாடகக் கணிகையும் வீதியின் பக்கம் இருந்த பெரிய ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவன் உதயகுமாரனுக்கு நண்பன்! அவன் கையில் வீணை இருந்தது!

"நண்பா, என்ன இப்படி அபஸ்வரக் களஞ்சிய மாகிவிட்டாய்?"

"ஆ! இளவரசரா! இதோ வந்துவிட்டேன்!"

எட்டிகுமரன் கீழே இறங்கிவந்து உதயகுமாரனை வணங்குகிறான். "இளவரசே, இப்போது சற்றுமுன் ஒரு துயரக்காட்சியைக் கண்டேன்! என் மனம் பொறுக்க வில்லை! அதே நினைவில் வீணையை மீட்டினேன்! ஒன்று கிடக்க மற்றொன்று ஆகிவிட்டது. அபஸ்வரம் விழுந்து விட்டது!" என்றான் அவன்.

" அதென்ன துயரக் காட்சி ?"

" மாதவி மகள் மணிமேகலை ! துறவுக் கோலத்தில் கையில் பூக்குடலையுடன் சுதமதியோடு சென்றாள் ! எவ்வளவு அழகானவள் ! எவ்வளவு குதூகலமாய் இருக்க வேண்டியவள் ! தங்கள் தேரிலேறித் தங்கள் கூட வர வேண்டியவள் ! புத்த சங்கத்தில் சேரப்போகிறாள் ! அது மட்டுமல்ல ! அவளைக் கண்டதும் அவள் தந்தை ஞாபகம் வந்துவிட்டது ! அவள் தந்தை கோவலன் ! எங்கள் குலத்துக்கே திலகம் போன்றவன் ! மதுரைக்குப் போய் அநியாயமாய்க் கொலையுண்டான் ! இந்த எண்ணங்களி னாலேயே அந்த அபஸ்வரம் ஏற்பட்டது !"

" மணிமேகலையா ! இப்போது இப்படிப் போனாளா ? அவள் எங்கே போயிருப்பாள் ? உடனே சொல் ! போய்ப் பார்க்கிறேன் !"

" கையில் பூக்கூடையைக் கவனிக்கும்போது அவள் உவவனத்துக்குத்தான் போயிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது !"

" ஏய் தேர்ப்பாகா ! தேரைத் திருப்பு ! ஓட்டு உவ வனத்துக்கு ! ஒரு நொடிக்குள் உவவனத்தை அடைய வேண்டும் ! இறக்கைகட்டிப் பறக்கவேண்டும் ! தெரியுமா! ஓட்டு ! உம் !

இப்படிச் சொல்லுவதற்கு முன்பே தேர் திருப்பப் பட்டுவிட்டது ! வாயுவேக மனோவேகமாய் அது பறந்தது. வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்த ஜனங்கள் வாயைப் பிளந்துகொண்டு நின்றார்கள்.

நிற்க மணிமேகலை செய்தி என்னவென்று பார்ப் போம் அவள் தன் தாயுடன் சேர்ந்து புத்த சங்கத்தில் துறவோர்க்குரிய செயல்களைச் செய்துகொண்டிருந்தாள். இந்த நிலையில் இந்திர விழா வந்தது. இந்திர விழாக் காலத்தில் மாதவி தன் மகள் மணிமேகலையை அழைத்துக் கொண்டு அரங்குகளில் நாட்டியமாட வருவாள். அப்

போது அவளை வற்புறுத்தி மணிமேகலையை எப்படி யாவது உதயகுமாரன் வசப்படுத்திவிடலாம் என்று சித்திராபதி எண்ணியிருந்தாள். முன்னே அவள் அவனுடன் பேசிவிட்டு வந்ததும் அவன் அரசாங்க அலுவலாக வெளியூர் போய்விட்டான் என்பதை அறிந்தாளாதலால் மேற்கொண்டு உடனே மணிமேகலையை அவன் வசப்படுத்துவதற்கான ஏற்பாட்டை அவள் செய்யவில்லை. இந்திரவிழாக் காலத்தில் அவனும் தன் அலுவலை முடித்துக்கொண்டு வந்துவிடுவான். அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டாள். இந்திர விழாவும்வந்துவிட்டது. உதயகுமாரனும்வந்துவிட்டான். ஆனால் மாதவி அரங்குகளில் நாட்டியமாட வரவில்லை. அவள் புத்தசங்கத்திலேயே இருந்துவிட்டாள்.

மாதவி நாட்டியமாட வரவில்லை; புத்த சங்கத்தில் சேர்ந்திருக்கிருள் என்னும் செய்தி நாடகக் கணிகையர் எல்லாருக்கும் நன்ருகத் தெரிந்துவிட்டது. முன்னே கொஞ்சம் கசமுச என்று இருந்தது. கிசுகிசு என்று இரகசியமாகச் சித்திராபதியையும் மாதவியையும் தூற்றிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். இப்போது மாதவி நாடக வரங்கிற்கு வராமல்போகவே நன்ருக வெளிப்படையாகத் தூற்ற ஆரம்பித்துவிட்டார்கள். "நாடகக் கணிகை பத்தினி வேஷம் போடுகிருள். வான்கோழி மயில்வேஷம் போட்டதாம். முட்டிக்கால் கழுதை பட்டவர்த்தனப் பரி ஆகுமா? விரலுக்குத் தகுந்த வீக்கம் வேண்டும். நாம் என்னதான் நல்லவர்களாயிருந்தாலும், இந்த சமூகம் நம்மை அப்படி நினைக்குமா? தாலி கட்டின கணவன் இறந்துவிட்டான்; மகாபத்தினி கைம்மை நோன்பு கொண்டாடத் தொடங்கிவிட்டாள் மாதவி. எல்லாம் வெளிவேஷம்! புத்த சங்கத்தில் சேர்ந்திருக்கிருளாம்! யாரைக் கெடுக்கவோ!" என்ருர்கள் அவர்கள்.

சித்திராபதிக்கு ரோஷம் பொத்துக்கொண்டுவந்தது. மாதவியின்பேரில் அடங்காக் கோபம் வந்தது! ஆனுலும் பெற்ற மகள்! மிகவும் நல்லவள்! இதற்கு முன்னும் பல தடவைகளில் அவளுக்குக் கோபம் வந்தது உண்டு.

ஆனால் மாதவியை எதிரில் கண்டவுடனே அந்தக் கோபம் பறந்துவிடும். இப்போது அவளுக்கு முன்னைவிட நூறுமடங்கு அதிக கோபந்தான். ஆனாலும் அவள் முகத்தைக் கண்டால் அந்தக்கோபம் நிற்காது என்பதை அவள் உள்ளூற உணர்ந்திருந்தாள். ஆகவே தன் தோழி வசந்தமாலையை அழைத்தாள். "போய் மாதவி யிடம் நான் கண்டிப்பாய்ச் சொன்னதாகச் சொல்! நாமெல்லாம் குலப்பெண்கள் அல்ல; கணிகைமார். நமக்கும் பத்தினி வேஷத்துக்கும் வெகுதூரம்! உண்மை யிலேயே நாம் பத்தினிகளாக இருந்தாலும் இந்த உலகம் வேசிகள் என்றுதான் தூற்றும்! ஆகையால் புத்த சங்கத்தில் இருக்கவேண்டாம்! உடனே இங்கே வந்து நமது குலத்தொழிலைச் செய்துகொண்டிருக்க வேண்டும் என்று தெரிவி. மாதவி எப்படியாவது போகட்டும்! அவள் வயதுவந்தவள்! அவளிஷ்டப்படி நடக்கட்டும். மணிமேகலையைக் கெடுக்க வேண்டாம்! அரச குமாரன் அவளை விரும்புகிறான்! இது நல்ல வாய்ப்பு! இப்படிப்பட்ட வாய்ப்பு இனி ஒருபோதும் கிடைக்காது! இதைத் தெரிவித்து எப்படியாவது அவளை அழைத்து வா! அவள் வரவில்லையென்றால் மணி மேகலையையாவது அழைத்து வா!" என்று சொல்லி அனுப்பினாள்.

வசந்தமாலை மாதவியிடம் போனாள். சித்திராபதி சொன்னதை அப்படியே பாடமாக ஒப்புவித்தாள். அப்புறம் தானாகத் தன் புத்திமதியாகப் பலபல சங்கதி களைச் சொன்னாள். எல்லாம் மாதவி துறவுநெறியை விட்டு நாடகக் கணிகை ஆகவேண்டும் என்பது பற்றித் தான். அவள் சொன்னதெல்லாம் உண்மைதான். ஆனால் மாதவி ஒரே பிடிவாதமாக எல்லாவற்றையும் மறுத்து விட்டாள். கோவலனுக்குப் பின் வேறு ஒருவனை மணாள னாகக் கொள்ள அவள் மனம் கொஞ்சமும் ஒப்பவில்லை. "மணிமேகலை என் மகள்தான். ஆனால் அவள் கோவல னின் மகள்; கண்ணகியின் மகளுங்கூட. மகாபத்தினி யின் மகள்! வீர பத்தினியின் மகள்! உலகம் போற்றும் உத்தமியின் மகள். பத்தினிக் கடவுளின் மகள்! அப்படிப்

பட்டவள் வேசியாவதா? கூடாது! ஒருபோதும் கூடாது! நான் அவளை வேசியாகவிடமாட்டேன்! இதற்காகவே நான் நமது குலத் தொழிலாகிய ஆடல் பாடல் முதலிய வற்றை அவளுக்குக் கற்பிக்கவில்லை! அரச குமாரன் அவளை விரும்புவது உயர்வுதான்! ஆனால் அவள் பரத்தை ஆனால் அல்லவா அது உயர்வு! அவள் துறவி ஆவதற்கே உரியவள்! இல்லாவிட்டால் அவள் பத்தினிக் கடவுளின் மகள் என்று சொல்லும் வகையில் பிறந்திருக்க மாட்டாள்! போய் என் தாயிடம் சொல்! என்னோடு இந்தக் குலத்தொழில் ஒழியட்டும்! என் மகளுக்கு வேண்டாம்! அவளோடு குலத்தொழிலும் ஒழியட்டும்! இன்னும் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்து அது பரத்தையர் குலத்தைச் சார்ந்தது என்ற இழிவு அதற்கு வரவேண்டாம்! குலமே அதோடு நசிக்கட்டும்! மணி மேகலை புத்த சங்கத்தில் சேர்ந்து பேறுபெற்றால் அது நமது குலத்துக்கே பெருத்த நன்மை! குல மாசு ஒழியும். குலத்து முன்னோரும் நல்லகதி அடைவார்கள்! நான் ஒருபோதும் மணிமேகலையைவிடேன்! என்று தெரிவி!" என்று மாதவி ஆவேசத்தோடு சொன்னாள்.

வசந்தமாலை அவள் ஆவேசத்தைக் கண்டாள். தன் பேச்சு ஒன்றும் அவளிடம் பலிக்காது. அது மட்டு மல்ல! யார் பேச்சும் அவளிடம் பலிக்காது! பேசாமல் திரும்பிச் சென்று சித்திரா பதிக்குச் சமாதானம் கூறு வதே சரி என்று எண்ணினாள். வந்த வழியைப் பார்த் துக்கொண்டு பேசாமல் திரும்பிச் சென்றாள்.

வசந்த மாலையும் தன் தாயும் பேசியவைகளை எல் லாம் அருகில் பூத்தொடுத்துக்கொண்டு இருந்த மணி மேகலை கேட்டுக்கொண்டே இருந்தாள். தன் தந்தை யைப் பற்றியும் தாய் கண்ணகியைப் பற்றியும் தன் தாய் மாதவி குறிப்பிட்டதும் தந்தையைப் பற்றிய நினைவு அவளுக்கு வந்துவிட்டது. இதற்கு முன்னாலும் பல தடவைகள் திடீரென்று காரணமில்லாமலும், காரணத் தோடும் அந்த நினைவு அவளுக்கு வந்தது உண்டு. அந்த நினைவு வந்தபோதெல்லாம் அவள் மௌனமாய்க்

கண்ணீர் வடித்து அந்தத் துக்கத்தை ஆற்றிக்கொள்வது வழக்கம். அப்படியே இப்போதும் செய்தாள். கண்ணீர், தான் தொடுத்துக்கொண்டிருந்த பூக்களில் சொட்டுச்சொட்டாய் விழுவதை அவள் கவனிக்கவில்லை.

மாதவி வசந்தமாலையிடம் பேசிவிட்டுத் திரும்பினாள். மணிமேகலையின் கண்ணீர் அவள் தொடுத்துக்கொண்டிருந்த பூக்களில் சொட்டுவதைக் கண்டாள். அதற்குக் காரணமும் அவளுக்குப் புரிந்துவிட்டது. அவள் கண்களிலும் நீர் துளித்தது. அதை முன்தானையால் துடைத்துக்கொண்டாள். மணிமேகலையின் துக்கத்தைப் போக்கவேண்டும். அவள் கவனத்தை வேறு வழியில் திருப்பவேண்டும். ஒரு யுக்தி செய்தாள். "மணிமேகலை! பார்! உன் கண்ணீர் விழுந்து இந்த பூக்களின் தூய தன்மையைக் கெடுத்துவிட்டது; இது புத்த தேவருக்காகக் கட்டப்படும் மாலை இல்லையா! இது இப்படித் தூய்மை கெடலாமா? உடனே போ! ஏதாவது ஒரு நந்தவனத்திலிருந்து புதிய பூக்கள் கொஞ்சம் கொண்டு வா!'' என்றாள்.

பக்கத்தில் தானும் பூத்தொடுத்துக்கொண்டிருந்த சுதமதி இதைக் கேட்டாள் "மாதவியம்மா! இது இந்திர விழாக்காலம்! மணிமேகலை தனித்து எங்கும் செல்லக்கூடாது. முன்னே நான் அப்படித் தைரியமாய்ச் சென்றுதான் கெட்டேன். இப்படித்தான் பூப்பறிக்க வேண்டும் என்று தனியாகச் சண்பை நகரத்திலே நான் என் தந்தையோடு இருந்த காலத்திலே சென்றேன். அப்போது மாருத வேகன் என்னும் ஒரு வித்தியாதரன் என்னைக் கண்டு ஆகாசத்திலே தூக்கிச்சென்றான்; என்னைக் கெடுத்தான்; அப்போது இந்திர விழா இந்த நகரில் நடந்துகொண்டிருந்தது. இங்கே என்னைக் கொண்டுவந்து தனியே விட்டுவிட்டுப் போய்விட்டான். என் கதி என்ன? இந்த புத்த சங்கத்திலே புகலிடம் கிடைத்தது. இதில் சேர்ந்து இப்போது உங்களுடன் இருக்கிறேன். ஆகையால் நானும் இவளுடன் துணையாகப் போய்வருகிறேன்.

இந்த ஊரில் இலவந்திகை வனம், உய்யானம், கவேர வனம், சம்பாதி வனம், உவவனம் என்று ஐந்து பூந்தோட்டங்கள் இருப்பது உனக்குத் தெரியும். அவற்றுள் இவள் இப்போது போகத் தகுந்தது, துன்பத்திற்கிடமில்லாதது உவவனம்" என்னும் ஒரே பூந்தோட்டந்தான். மற்ற இடங்களில் இந்திர விழாவைப் பார்க்க வந்திருக்கும் அயல் ஊரார், அயல் நாட்டார், உருமாறித் திரியும் தேவர், வித்தியாதரர் முதலியவர்கள் இருப்பார்கள். போனால் அபாயந்தான். ஆகவே நான் அவளை உவவனத்திற்குக் கூட்டிக்கொண்டு போகிறேன். விரைவில் பூப்பறித்துக் கொண்டு திரும்பிவிடுகிறோம்!' என்றாள். மாதவியும் அதற்கு ஒப்புக்கொள்ளவே, மணிமேகலையும் சுதமதியும் பூக்குடலைகளை எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள்.

கிளம்பியவர்கள் வீதிகளில் பலவகையான வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டே நடந்து உவவனத்தை அடைந்தார்கள். உவவனத்திலும் பல அழகிய காட்சிகள் அவர்களுக்குத் தென்பட்டன. சுதமதி வேடிக்கையாக அந்தக் காட்சிகளை மணிமேகலைக்கு எடுத்துக் கூறிக்கொண்டே போனாள். உவவனத்தில் ஓரிடத்தில் ஒரு தாமரைக்குளம், அதில் நடுவில் ஒரு பெரிய தாமரைப் பூ! அதில் அழகான ஒரு அன்னம் உட்கார்ந்திருந்தது. குளத்தின் கரையில் ஒரு மயில் ஆடிக்கொண்டிருந்தது. கரையிலிருந்த ஒரு மாமரத்தின் மேல் ஒரு குயில் குக்கூ, குக்கூ என்று கூவிக்கொண்டிருந்தது. இன்னொரு பறவை சிறகடித்துச் சத்தஞ் செய்துகொண்டிருந்தது. இதைப் பார்த்த சுதமதி "இதோ பார்! இந்த அன்னந்தான் ராஜா. இங்கே உள்ள மற்ற பறவைகள், குரங்குகள் எல்லாம் சபையோர். இந்த மயில்தான் நாட்டியக்காரி. இந்தக் குயில்தான் பாடகி. சிறகடித்துக் கொள்கிறதே இந்தப் பறவைதான் மத்தளக்காரன்! எவ்வளவு பொருத்தம் பார்த்தாயா? என்றாள்.

அவர்கள் குளத்தின் மறு பக்கம் போனார்கள். அங்கே தாழை மரங்கள் நிறைய இருந்தன. தாழம்-

பூக்களும் பூத்திருந்தன. அதில் ஒருபூவின் கீழே ஒரு தாமரைப்பூ. அதில் தாழம்பூவின் மகரந்தப்பொடி சிந்தியிருந்தது. அதனுல் சிவந்த அந்தத் தாமரைப்பூ கொஞ்சம் நிறம் மங்கியிருந்தது. அதைப் பாரத்தாள் சுதமதி. கொஞ்சம் குரும்புத்தனம் வந்துவிட்டது அவளுக்கு. மணிமேகலையைக் கேலி செய்யலானுள். இதோ பார் இந்தத் தாமரையை. இதில் தாழம்பூவின் பொடி சிந்தி கொஞ்சம் ஒளி மழுங்கியிருக்கிறது பார். இது எதைப்போல் இருக்கிறது தெரியுமா? உன் முகத்தைப் போலத்தான். தெருவில் நீ வரும்போது தெருப் புழுதியெல்லாம் உன் முகத்தில் படிந்து இப்படித்தான் உன் முகம் ஒளி மழுங்கியிருந்தது", என்ருள். இப்படிப் பேசிக்கொண்டே உவவனத்தின் காட்சியைப் பார்த்து விட்டு அவர்கள் பூப்பறிக்கலானுர்கள்.

தூரத்தில் தேரொலிகேட்டது. அதுமணிமேகலையின் பல எண்ணங்களை எழுப்பிவிட்டது. தேரேறி இந்தப் பக்கம் யாரோ வருகிருர்கள். அது யாராயிருக்கக்கூடும். ஒருவேளை இளவரசரோ! அவரைப்பற்றி ஒருதடவை என்பாட்டி என்னிடம் பிரஸ்தாபித்திருக்கிருள். "என் கண்ணு! அதிர்ஷ்டக்காரி! இளவரசரே மயங்கும்படி செய்துவிட்டாய்!" என்றுசொல்லி கன்னத்தை வழித்துக் கைவிரல்களை நெற்றியில் மடக்கி திருஷ்டி கழித்தாள். என்குலத்தவர் சிலரும் என்னைக்குறித்து "எப்படியோ இவள்பாட்டி இளவரசருக்கு சொக்குப்பொடி போட்டு விட்டாள். அவர்இப்போதுவெளியூருக்குப்போயிருக்கிருர்; வந்ததும் இவளைக் கொத்திக்கொண்டு போய்விடப் போகிருர்!" என்றுசொல்லக் கேட்டிருக்கிறேன். நேற்று அவர் ஊரிலிருந்து வந்துவிட்டார் என்றும் பேசிக் கொண்டார்கள். ஒருக்கால் அவர் இங்கே நான் வந்திருப்பதை எப்படியோ தெரிந்து கொண்டு வருகிருரோ, என்னமோ!"

தேரொலி சமீபத்தில் வரவரச் சமீபித்துக்கொண்டு வருகிறது. சுதமதி காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டே பூப்பறிக்கிருள். அவள் மனத்திலும் அவ்வொலி சில

எண்ணங்களைக் கிளப்பிவிடுகிறது. இந்தப்பக்கமாக இச்சமயத்தில் தேரோட்டி வருபவர் யாராயிருக்கலாம். ஒருவேளை இளவரசரோ! இவள் பாட்டி சித்திராபதி செய்திதெரிவித்து அவரை இங்கேவரச்செய்திருக்கிருளோ இருந்தாலுமிருக்கலாம். மாதவிக்கோ அவளைக் குலத் தொழிலில்விட இஷ்டமில்லை. பாட்டியோ அவளைக்கெடுக்க தீவிரமாகப் பாடுபடுகிருள். நாம் கூடஇருக்கும்போது மணிமேகலைக்கு ஒன்றும் நேரக்கூடாது! ஒருவேளை வேறுயாராவது தேரேறி வரலாம்! தேரோசை உவவனத்தை நாடித்தான் வருகிறது! பெரும்பாலும் இளவரசராகத்தான் இருக்கவேண்டும். எதற்கும் மணிமேகலையை இங்கேயிருக்கும் பளிங்கு அறைக்குள் போகச்செய்து, அரசகுமாரன் வந்தால் அவளோடு பேசமுடியாதபடி செய்துவிடவேண்டும்.

இப்படிச் சுதமதி எண்ணியபோது தேர் உவவனத்தின் வாசலில் நிற்கும் சத்தம் கேட்டது. அச்சமயத்தில் மணிமேகலை இளவரசர் தேர்தான் வருகிறது! என்று சொன்னுள். உடனே சுதமதி மணிமேகலை! நீ சீக்கிரமாக இந்தப் பளிங்கறைக்குள் சென்றுவிடு! நான் பக்குவமாகப்பேசி அவரை அனுப்பி விடுகிறேன்! என்ருள். மணிமேகலைக்கு இளவரசன்மீது காதலிருந்தும் கூச்சத்தாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ விர்ரென்று போய்ப்பளிங்கறைக்குள் புகுந்துகொண்டாள். சுதமதி தாளைப்போட்டு விட்டாள். சுதமதி தூரத்தில் இளவரசன் அவசர அவசரமாக வருவதைக் கண்டுங் காணுதவளைப்போலப் பூப்பறிப்பதில் ஈடுபடலானுள்.

அவர்கள் நினைத்தது சரியே.எட்டிகுமாரன்மூலமாகச் செய்தியறிந்த உதயகுமாரன் வேகமாகத் தேரைச் செலுத்திக்கொண்டு உவவனத்தை வந்தடைந்தான். அந்த வனத்தின் அழகு அவன் கவனத்தை இழுக்க முடியவில்லை. அவன் கவனம் முழுவதும் உள்ளே மணிமேகலை எங்கிருக்கிருள் என்று ஆராய்வதிலேயே இருந்தது. அங்கே இங்கேஎல்லாம் போய் நாலாபக்கமும்

துருவித் துருவித்தேடினன். அவள் அகப்படவில்லை. அங்கே ஒருபுறம் சுதமதி நின்ருள் அவளண்டைபோய், "ஏ சுதமதி மணிமேகலை இங்குவந்தாள் என்று கேள்விப் பட்டேன். அவள் இங்கே எங்கிருக்கிருள் சொல்!" என்ருன்.

"இளவரசே, வணக்கம். தாங்கள் எல்லாம் அறிந்தவர்கள். தங்களுக்கு நான்சொல்வது என்ன விருக்கிறது! ஒரு பசுக் கன்றைக்கொன்ற குற்றத்திற்காக தன்மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்று முறைசெய்த சோழர் குடியில் பிறந்த தாங்கள் இப்படி ஒரு பெண்ணை விரும்புதல் தகாது. இந்த உடல் பாவபுண்ணியங்களாகிய வினையினல் உண்டானது; மீண்டும் அந்த வினைகளையே செய்யக் காரணமானது ஆடையணிகள், வாசனைப்பொருள்கள் முதலியன உபயோகிப்பதை நிறுத்திவிட்டால் புலால் நாற்றம் வீசுவது; மூப்பு, சாக்காடு இவற்றைஉடையது; நோய்க்கு இருப்பிடமானது; ஆசையால் விடாமல் பிடிக்கப்படுவது; குற்றங்கள் செய்வதற்கு ஏதுவானது. அழுகை, கவலை முதலிய துன்பங்களை அனுபவிக்க இடமானது; நீங்கள் இந்த ஆசையைக் கொஞ்சம் தூரத்திலே நிறுத்தி இந்த உடலின் உட்புறத்தை வெளிப்புறமாக எண்ணி உங்கள் மனத்தில் பாவனை செய்துபாருங்கள்!" என்ருள்.

அவள் பேச்சின் முதலிரண்டு வாக்கியங்களைக் கேட்டதுமே அரசகுமாரனுக்குப் புளிப்புத்தட்டிவிட்டது. அவள் பேச்சைக் கவனிப்பதைவிட்டு மணிமேகலைஎந்தப் பக்கமிருந்தாவது தன்கண்ணில் படுகிருளா என்று சுற்றிலும் கண்ணேட்டம் விடலானன். சுதமதியின் பேச்சும் முடிவடைந்தது. மணிமேகலையின் உருவமும் உதயகுமாரன் கண்ணில் பட்டது. அவள் பளிங்கு அறைக்குள்இருக்கிருள். உதயகுமாரன்அந்தஅறைக்குச் சென்ருன். அதனுள் புகமுயற்சித்தான். தாழ்ப்பாள் இருக்கிற இடம் தெரியவில்லை. அதன் நாலுபக்கச் சுவர்களையும் சுற்றிச்சுற்றி வரலானன்.

பளிங்கு அறை ஆதலால் உள்ளே யிருப்பவர் உருவம் வெளியில் நன்ருகத் தெரிந்தது. ஆனல் பேச்சு காதில்விழ ஏதுவில்லை என்பது தெரிந்தது. ஏனெனில் நாலுபக்கமும் அடைப்பு. உள்ளேயிருப்பவர் எப்படி மூச்சு விடுகிருர்கள் ஏதோ ஒருவழி இருந்துதாஞக வேண்டும். மணிமேகலை உள்ளே கொஞ்சநேரம் தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள். அப்பால் ஏதோ பேசுவதுபோல் தெரிந்தது. சத்தம் கேட்கவில்லை அவளால் தாளைத் திறந்துகொண்டு வெளியில் வரமுடியவில்லை என்பது தெரிந்தது. உதயகுமாரன் கொஞ்சம் நின்று யோசித்தான் இது புத்த முனிவர்களுக்குச் சொந்த இடம். இங்கே எந்தவிதமான பலாத்காரமும் கூடாது. இவள் எவ்வளவு நேரம் இந்தப் பளிங்கு அறைக்குள் இருக்கப்போகிருள்! நாம் இங்கே இருந்தால் இவள் வெளியில் வரமாட்டாள் என்று தோன்றுகிறது. வெளியில் போய்க் காத்திருப்போம். எப்படியும் இவள் இந்த வனத்தைவிட்டு வெளியில் தன் இருப்பிடத்திற்கு போய்த்தானே ஆகவேண்டும் வெளியில் வரட்டும் உடனே பிடித்துக்கொண்டுவிடுகிறேன், என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அந்த இடத்தை விட்டு வேகமாகச் சென்றுவிட்டான்.

அவன் அந்தப் பூந்தோட்டத்தின் வாசலைத்தாண்டி விட்டான் என்று அறிந்த பிற்பாடு சுதமதி தாளைத் திறந்து விட்டாள். மணிமேகலை வெளியில் வந்து, என்னமோ இவரைப்பார்த்தது முதல் என் மனம் இவரையே நாடுகிறது! "நான் உள்ளே போகாமல் வெளியிலேயே இருந்திருக்கலாம்!' என்ருள். "பேதைப்பெண்ணே, எவ்வளவுதான் அன்பிருந்தாலும் அவன் உன்னை மனைவி ஆக்கிக்கொள்வாஞ? நீ பரத்தை என்னும் இழிவு போய்விடுமா? இந்த அற்ப ஆசைக்கு இடம்கொடாதே! வா, போகலாம்!" என்ருள்.

இருவரும் அவ்விடத்தை விட்டுப் புறப்படலாயினர். ஆனல் அடியெடுத்து வைத்ததுமே ஒரு எண்ணம் தோன்றிற்று. ஒரு வேளை இளவரசன் வாசலில் காத்தி

ருந்தால் வந்ததுமோசம்! போகக்கூடாது! "மணிமேகலை, நில்! ஒருவேளை அவன் வாசலில் காத்திருக்கக் கூடும்! சற்றுப் பொறுத்துப்போவோம்!" என்ருள் சுதமதி. இருவரும் கொஞ்சம் தயங்கியபடி நின்று கொண்டிருக் கையில் அவர்களுக்கு அறிமுகமான ஒருத்தியைப் போல மணிமேகலா தெய்வம் வேடம்போட்டுக் கொண்டு அவர் களை வந்தடைந்தாள்.

"ஏன், தயங்கி இங்கே நிற்கிறீர்கள்?" என்ருள் அவள்.

இருவரும் அவளிடம் செய்தி சொல்லலாமா, வேண் டாமா என்பதைப்பற்றிச் சிந்தனை செய்து கொண்டிருக் கையில், "எல்லாம் எனக்குத்தெரியும்! அரசகுமாரன் கையில் சிக்கக்கூடாது என்றுதானே நீங்கள் இங்கே நிற்கிறீர்கள். அவன் வாசலில் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிருன். நீங்கள் வாசல் வழியாகப் போனுல் அவன் கையில் சிக்குவது நிச்சயம். ஆகையால் அந்தப்பக்கம் போகாதீர்கள்! நான் சொல்லுகிறேன் உங்களுக்கு வழி! நீங்கள் இவ்வனத்தின் பின்புறம் இருக்கிற திட்டிவாசலை திறந்து கொண்டுசெல்லுங்கள். சென்ருல் சக்கரவாளக்கோட்டம் இருக்கிறது. அங்கே யாதொருதுன்பமும் இல்லாமல் இராத்தங்கலாம். பிறகு விடியற்காலம் எழுந்திருந்து வீட்டிற்குப் போங்கள்!" என்ருள்.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுதமதிக்குக்கொஞ்சம் தூக்கம் வந்தது. அங்கே சற்றுப் படுத்து உறங்கினுள். மணிமேகலாதெய்வம் மணிமே கலையை மட்டும் ஆகாசத்தின் வழியாகத் தூக்கிக் கொண்டுபோய் மணிபல்லவம் என்னும் தீவில் வைத்து விட்டுத்திரும்பி வந்தாள். சுதமதி இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். மணிமேகலாதெய்வம் அவளை எழுப்பி "மணிமேலைக்கு நல்ல கதிஅடையும் நற்காலம் வந்து கூடிவிட்டது அதனுல் நான் அவளை மணிபல்லவத்தில் கொண்டுபோய் விட்டு விட்டு வந்திருக்கிறேன். நீ அவளுக்காகக் கவலைப்படவேண்டாம். அவள் தன்

பழைய பிறப்பு வரலாற்றைத் தெரிந்து கொண்டு புத்த தேவன் அருள்பெற்று இன்றைக்கு ஏழாம் நாள் இங்கே வருவாள். நீ நான் முன்னே சொன்னபடி சக்கரவாளக் கோட்டத்தில் போய் இருந்து இரவைக் கழித்துவிட்டு வீட்டுக்குப்போ. அங்கே மாதவிக்கு இந்தச் சங்கதியைச் சொல்லி அவளைத் தேற்று!'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள். சுதமதி தெய்வம் கூறியபடியே சக்கர வாளக்கோட்டத்துக்குப் போனாள்.

# 5. நால்வர் மாநாடு

''நமக்குள் முன்னே செய்துகொண்ட ஏற்பாட்டின் படி எல்லோரும் வந்து ஒன்று கூடிவிட்டோம்! இது சரி! எங்கே! அவரவர் என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று பார்க்கலாம்! ஒவ்வொருவராக மூட்டையை அவிழுங்கள்!'' என்றார் தலைமை தாங்கிய கௌதமர். ''ஏன் நீர் தான் முதலில் உமது மூட்டையை அவிழுமே!'' என்றார் அகோரம்.

''ஏனையா வாய் வார்த்தை வாயில் இருக்கும்போதே, உமக்கு மூக்குக்குமேல் கோபம் வருகிறது! ஆனாலும் உமக்கு இவ்வளவு கோபம் கூடாதையா!'' என்றார் பிரபாகரர்.

''அது அவர் சுபாவம்! விட்டுத் தள்ளுங்கள்!'' என்றார் இளைய நம்பி!

''அது கிடக்கட்டும்! நமக்குள் என்ன விவாதம்! நான்தான் முதலில் அவிழ்த்து விடுகிறேனே, சுடுகாட் டுக் கோட்டத்திற்குச் சக்கரவாளக் கோட்டம் என்று பெயரிடப்பட்டு இருக்கிறது. அங்கே எல்லா தெய்வங்க ளுக்கும் கோயில் உண்டு. அவற்றுள் முக்கியமானது சம்பாபதி கோயில். அங்கே பல பௌத்த முனிவர்களுக்கு இருப்பிடங்கள் உள்ளன. அவர்கள் எல்லாரும்சங்கத்தில்

முக்கிய அங்கத்தினர்கள். இரகசியத்தை வெளிவிடாமல் இருப்பவர்கள். அவர்களுடைய இருப்பிடங்களுக்கும் சம்பாபதி கோவிலுக்கும், உலக அறவிக்கும் சுரங்க இணைப்பு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. உலகஅறவியில் கந்திற்பாவை என்று தெய்வம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இங்கே தெய்வீகம் என்று பிறர் நம்பும்படியான சில செயல்கள் அங்குள்ள முனிவர்களால் செய்யப்பட விருக்கின்றன. என்ன செய்யப்போகிறார்கள் என்று இன்னும் தெரியவில்லை, இனித்தொடர்ந்து கவனித்து விரைவில் அதனையும் தெரிந்துகொண்டு விடுவேன்!

நல்லது அகோரம்! முன்னே கோபித்துக் கொண்டீரே! உம் இஷ்டப்படி முதலில் அவர் அவிழ்த்து விட்டார்! இப்போது உமது மூட்டையை அவிழும்!" என்றார் பிரபாகரர். அகோரம் பேசலானார்.

"கோவலன் இறந்தபிறகு குலத்தொழிலைச் செய்ய விரும்பாத மாதவி புத்த சங்கத்தில் சேர விரும்பினாள். அறவணவடிகளின் சந்நிதானத்தை அடைந்து தன் வரலாற்றைச் சொல்லித் தன்னைச் சங்கத்தில் சேர்த்துக் கொண்டு பிக்ஷுணி ஆக்கவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டாள். அறவணவடிகள்யோசித்தார். அதாவது யோசனை செய்பவரைப்போல் பாவனை செய்தார். பிறகு பதிதபாவனன் உங்கள் கடவுள். ஆனால் உங்கள் மதத்தாருக்கோ அந்த வார்த்தைக்கு அர்த்தம்கூடத்தெரியாது! தவறியவர்களைச் சீர்திருத்துவது என்பது அவர்களுடைய அகராதியிலேயே கிடையாது! நீ மனந்திருந்தி யிருக்கிறாய்: குலத்தில் நீ பரத்தை! ஆனால் குணத்திலோ பத்தினி! உங்கள் சமூகம் உன்னைப் பத்தினியாக ஏற்றுக்கொள்ளுமா? ஒருபோதுமில்லை! நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்! பதிதபாவனம் செய்வதே எனது முக்கியவேலை. முன்னம் மாருதவேகனால் கெடுக்கப்பட்ட சுதமதி என்னைத் தஞ்சம் அடைந்தாள்! இதோ பிக்ஷுணியாக மனநிம்மதியுடன் இருக்கிறாள். வா! நீயும் வா! பிக்ஷுணியாகு! மனஆறுதல் அடை! சுதமதியை உன்னுடன் சேர்ந்திருக்கச் செய்கிறேன்.

புத்ததேவனுக்குப் பணிசெய்துகொண்டு ஆறுதலுடன் காலங்கழியுங்கள்! இன்றைன்று! உன்மகள் மணிமேகலை யின் நன்மையையும் நீ கவனிக்கவேண்டும்! பத்தினிக் கடவுளின் மகள் பரத்தை ஆகலாமா? யோசித்துப்பார்! நீ விரும்பினுல் அவளையும் பிக்ஷுணியாக்கி உன் குலத்துக்கு நேர்ந்த இழிவையும் போக்கிக்கொள்ள லாம்!'' என்ருர்.

அதைக்கேட்டதும் மாதவி பரமகுருவே, கருணைக் கடலே, கிருபாநிதியே, அருட்பெருஞ் சோதீ! என் றெல்லாம் அவரைத் துதித்து வணங்கி, "அப்படியே செய்கிறேனையா சுவாமீ!'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டாள். இனி மணிமேகலை புத்தசங்கத்தின் சொத்து! அவள் விரும்பினுலும் விரும்பா விட்டாலும் அவர்கள் சொற்படிதான் நடக்கவேண்டும். விரும்பினுல் சரி; விரும்பாவிட்டால் கட்டாயப்படுத்தப் படுவாள். அவளை யாரேனும் விரும்பி ஏதாவது செய்தார்களோ, அவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்கள் சூழ்ச்சிக்குள் அகப்பட்டு மடிய வேண்டியதே! நல்லது பிரபாகர் என் னுடையதை அவிழ்த்தாயிற்று! எங்கே உன்னுடையது?''

ஓய் கௌதமரே, நீர்சக்கரவாளக் கோட்டத்திலுள்ள சுரங்கத்தைப் பற்றித்தானே கூறினீர். அதற்குமேல் ஒருபடி. உவவனத்திலுள்ள பளிங்கு அறைக்குள் ஒரு சுரங்கம். அந்தச் சுரங்கத்திற்கும் சக்கரவாளக் கோட்டத் திலுள்ள சுரங்கங்களுக்கும் சம்பந்தம் உண்டு. பளிங்கு அறைச் சுரங்கத்தில் ஒருஆள் உவவனம் பொது ஜனங்களுக்கு திறக்கப்படும் காலங்களில் இருப்பான். அவ்வறைக்குள் உள்ள புத்த பீடிகையின்மேல் எந்தத் தெய்வத்தையாவது நினைத்துப் பூக்களை இட்டால்அந்தப் பூக்கள் அந்தத் தெய்வத்தைப் போய் அடையும்; ஒரு தெய்வத்தையும் நினைக்காமல் இட்டால்பூக்கள் அங்கேயே இருக்கும்; காரியங்கள் எண்ணத்தோடு கூடினுல்தான் பலன் தரும்; இல்லாவிட்டால் தரமாட்டா என்பதைக் குறிக்க இந்த ஏற்பாடு. அதில்ஒருதெய்வத்தை நினைத்து இட்டபூக்கள் அந்தத் தெய்வத்தைப்போய் அடைகிறது

என்ருல், அந்தந்தத் தெய்வங்களினுடைய உலகங்களுக்கா அவை போகின்றன! இல்லை! சக்கரவாளக் கோட்டத்தில் அத்தெய்வங்களுக்குக் கோயில்கள் உள்ளன அல்லவா? அந்தக் கோயில்களிலுள்ள தெய்வ சந்நிதானத்தைப் போய் அடைகின்றன. இப்போது தெரிந்து கொண்டீர்களல்லவா ரகசியத்தை? என்மூட்டை அவிழ்த்தாயிற்று ஓய் நம்பியார் சுவாமிகள்: உங்கள் மூட்டைதான் பாக்கியிருக்கிறது!"

"வித்யாதரர்கள் உதவியால் சிலகாரியங்கள் செய்ய எண்ணியிருக்கிருர்கள் என்று முன்னே கண்டோம் அல்லவா? அந்தக்காரியங்கள் என்ன என்று கண்டு பிடித்துவிட்டேன். அவற்றுள் முக்கியமானவை மூன்று காரியங்கள். ஒன்று வேற்று வடிவம் எடுக்கும் உபாயம். ஒவ்வொருவரிடம் அவ்வப்போது ஒருமுகமூடி தரப்படும், அதை முகத்தில் போட்டு அதற்கென்று ஏற்பட்டுள்ள ஒருவகைப் பசையால் ஒட்டிக்கொண்டு விடவேண்டும். அதில் கண்களுக்கு, காதுகளுக்கு, மூக்கிற்கு, வாய்க்கு எல்லாம் திறப்புக்கள் உண்டு. அதைப்போட்டுக்கொண்டு சரியாக ஒட்டிவிட்டால் முகத்தோடு முகமாய் அதுஒட்டி ஒருஆளை வேறு ஆள் ஆகக் காட்டிவிடும். மிகச் சமீபத்தில் இருந்து பார்த்தாலும் முகமூடி அணிந்திருப்பது தெரியாது. அடுத்தது பசி எடுக்காதிருக்கும் மந்திரம். ஒவ்வொருவரிடமும் சிறிய அளவில் சில மாத்திரைகள் தரப்படுகின்றன. அவற்றில் இரண்டு மூன்றை உண்டு விட்டால் ஒரு நாள் முழுவதும் பசி தாகங்கள் ஏற்பட மாட்டா. மேனியும் வாட்டமடையாது. என்ன பிரபாகரரே, உமது மணிமந்திர ஔஷதாதிகளில் இது ஒன்று உண்டல்லவா?"

"ஆம் உண்டு. பசி எடுக்காதிருக்கும் மந்திரம் என்றவுடனேயே நான் இதுதான் என்று முன்னமேயே தீர்மானித்துவிட்டேன்!"

"நல்லது; அடுத்த மூன்ருவது செய்தி வானிற் பறக்கும் அதிசயப் பொறி ஒவ்வொருவரிடமும் நீண்ட

அங்கி போன்ற ஒரு உடை தரப்படுகிறது. அந்த உடையில் சிறிய இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டிருக் கிறது. அதை இயக்குவதற்கு உரிய முறுக்காணியும் அதிலே பொருத்தப்பட்டிருக்கிறது. மேலே அங்கி போலப் போர்வை இருப்பதால் உள்ளே உள்ள இயந் திரம் வெளியில் புலப்படாது. இந்த மூன்று சாதனங் களும் மிக முக்கியமானவர்களுக்கே தரப்படும். அவர் கள் தெய்வ மகிமை வாய்ந்தவர்களாக அவர்களுக்குள் ளேயே கௌரவிக்கப்படுவார்கள். ஆகையால் அவர் களைச் சோதிப்பவர் யார்? ஒருவருமில்லை! அவர்களை நிற்கவைத்துச் சோதனை போட்டால் இந்தக் குட்டு வெளிப்பட்டுவிடும். தெய்வங்களாகக் கருதப்படுகிறவர் களுக்கும், வானுலகில் சஞ்சரிக்கும் சாரணர் எனப்படும் சில முனிவர்களுக்கு மட்டும் இந்த மூன்று சாதனங்கள் தரப்படுகின்றன. அது போகட்டும்! இந்தத் தடவை நமது கௌதமர்தான் சோப்பளாங்கி ஆகிவிட்டார். அவருடைய முயற்சி இன்னும் கொஞ்சம் அதிகம் இருந்திருக்க வேண்டும்!"

"நீர் நினைப்பது பிசகு! நான் அறிந்தவற்றில் கொஞ்சம்தான் முன்னே கூறினேன். மேற்கொண்டு இப்போது சொல்லுகிறேன். சுதமதி மாதவியோடு சேர்ந்து இருக்குமாறு ஏற்படுத்தப்பட்டாள் அல்லவா? அவளுக்கு ஒரு வேலை. இந்த இந்திரவிழாக் காலத்திற் குள் ஒருநாள் எப்படியாவது தந்திரமாக மணிமேகலையை உவவனத்திற்குக் கூட்டிவரவேண்டும். நடப்பதை எல் லாம் பார்த்துக்கொண்டு மௌனமாய் இருக்கவேண்டும். அவ்வப்போது மேலிடத்திலிருந்து என்னென்ன உத் தரவுகள் கிடைக்கின்றனவோ அதன்படி நடக்க வேண்டும்.

அவர்கள் எதிர்பார்த்த சங்கதி நேற்றே கிடைத்து விட்டது. நேற்றே மணிமேகலை உவவனத்திற்குக் கொண்டு போகப்பட்டாள். பௌத்த பிக்ஷுகளின் மடம் போகும் வழியில் இருக்கிறது. சுதமதி அங்கு மடத் தலைவிக்குச் செய்தி அறிவித்து விட்டுப்போக

வேண்டும் என்று உத்தரவு. அப்படியே அவள் செய்து விட்டாள். மணிமேகலா தெய்வம் ஆக விளங்குபவள் முக்கியமான அங்கத்தினருள் ஒருத்தி. அவள் மணிமேகலையை உவவனத்திலிருந்து சக்கரவாளக் கோட்டத்தி லுள்ள இரகசிய வழியாகத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லவேண்டும். மயக்க மருந்து ஊட்டப்பட்ட கைக் குட்டையால் மணிமேகலையை மயக்கநிலையில் கொண்டு செல்லப்படும். அங்கே அவளுக்குத் தூக்கத்தைக் கொடுக் கும் ஊசி மருந்து ஏற்றப்படும். ஆகாயத்தில் பறக்கும் பொறியின் உதவியால் அவள் மணிபல்லவத் தீவிற்குக் கொண்டு செல்லப்படுவாள். இதற்குள் அந்தக்காரியம் நடைபெற்றிருக்கும். மணிமேகலா தெய்வம் மணிமேகலை யின் நன்மையை உத்தேசித்து அவளை மணிபல்லவத் திற்குக் கொண்டுபோயிருக்கிறது. அவள் அங்கேயுள்ள புத்த பீடிகையைத் தரிசித்துப் பழம் பிறப்பு உணர்ந்து கொண்டு ஏழுநாள் கழித்துத் திரும்பி வருவாள் என்று மாதவிக்குச் சமாதானம் சொல்லும்படிச் சுதமதிக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது.''

''அப்படியானுல் உதயகுமாரனுக்கும் அவளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள காதலைக் குலைத்து அவளைப் பிக்ஷுணி ஆக்கப் போகிருர்கள்!''

''அதுமட்டுமல்ல! அவளை முக்கிய பெண் உறுப்பி னருள் ஒருத்தி ஆக்கப்போகிருர்கள். அவளைக்கொண்டு சில காரியங்களைச் செய்யச் சொல்லப்போகிருர்கள். அத ஞல் புத்தமதம் வெகுவாகப்பரவும் என்று நம்புகிருர்கள்!''

''உடனே இதை இளவரசருக்குத் தெரிவிப்பது நல்லதல்லவா?''

''இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்தால் நலம். அவர்கள் ஏற்பாடுகளில் பல இன்னும் முடியவில்லை என்று தோன்றுகிறது. இன்னும் என்னென்ன பித்த லாட்டங்கள் நடக்கின்றன என்பதைக் கவனிக்கவேண் டும்! மேலும் மணிமேகலையைக் காணுததால் அரசகுமார னுக்குக் கோபம் ஏற்படவேண்டும். ஏழுநாள் கழித்து

அவள் திரும்பிவரும் போது அவள் மனம் அதிகமாக மாறிப்போயிருக்கும். அவள் இளவரசனுக்கு வசப்பட மாட்டாள். அப்போது இன்னும் அவன்கோபம் அதிக ரிக்கும்! அப்போது நாம் குட்டை உடைக்கவேண்டும்! ஒரே அடியாக இவர்களை ஒழிக்கவேண்டும்!''

''நல்லது; நாம் மேலும் ஆராய்வோம்! நமது அடுத்த கூட்டம் அடுத்த மாதத்தில் இதே நாள் இதே காலத்தில் நடக்கும்! சபைகலையலாம்!'' என்று மாநாட்டிற்கு முற்றுப் புள்ளி வைத்தார் பரபிரம்ஹமாகிய கௌதமர்.

இராவணன் சீதையைப் புஷ்பக விமானத்தில் ஆகாய மார்க்கமாகக் கொண்டு சென்றதாக இராமா யணம் கூறுகிறது. அதை சிலகாலத்துக்குமுன் யாரும் நம்ப இயலாதிருந்தது. அது தெய்வீகம் என்று கூறப்பட்டது. ஆனல் தற்சமயம் விஞ்ஞான முன்னேற்றத்தால் கண்டுபிடிக்கப்பட்டு நாம் காணும் ஆகாய விமானமே அக்காலத்தில் புஷ்பக விமானமாக இருந்திருக்கலாமல்லவா?

# 6. எடுக்களடுக்க குறையாததிருவோடு

பழங்கதை கூறுகிறதாவது :—

மணிமேகலாதெய்வம் மணிமேகலையை மணிபல்லவத் தீவிற்குக் கொண்டுசென்றது. அப்புறம் என்னஆயிற்று? அவள் இரவில் கொண்டு செல்லப்பட்டாள். மறுநாள் விடியலில் தூக்கம் நீங்கி எழுந்த மணிமேகலை தான் மணிபல்லவத்துக் கடற்கரையில்தனியாக விடப்பட்டதை அறிந்தாள். அச்சத்தால் அங்குமிங்கும் ஓடிப் பலவாறு புலம்பி அழுதாள். அப்போது அங்கிருந்த தீவதிலகை என்னும் தெய்வமாது அவள் முன்தோன்றினள். அங்கிருந்த புத்த பீடிகையை அவளுக்குக் காட்டினள். அது ஒன்பதுமுழ நீளம், ஒன்பதுமுழ அகலம், மூன்று

முழஉயரம் கொண்டது. தாமரைப்பூ வடிவமாகச்செய்யப் பட்டது. ஒளிவீசி விளங்குவது.

தாமரைப்பூவின் நடுவில் மஞ்சளான மேடை போன்ற ஒரு பாகம் இருப்பதைப் போலவே இதிலும் உண்டு. அதில் புத்த தேவனுடைய பாதங்கள் போன்ற பாதங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மணிமேகலைக்கு அது காட்டப்பட்டதும் அவள் அதை வலம் வந்து வணங்கினுள். உடனே பழம் பிறப்பை உணர்ந்தாள். அதாவது அவள் முற்பிறப்பில் ஒரு அரசகுமாரி. அவள் பெயர் 'இலக்குமி'. அவள் கணவன் 'இராகுலன்'. அவன் 'திட்டிவிடம்' என்னும் பாம்பு தீண்டி இறந் தான். அவளுக்குத் 'தாரை, வீரை' என இரு தமக் கையர் உண்டு. அவர்கள் மறு பிறப்பில் முறையே மாதவியும் சுதமதியுமாகப் பிறந்தார்கள். இராகுலன் பாம்பு தீண்டி இறக்கக் காரணம் அவன் செய்த ஒரு பாவத்தின் பயனே. அப்பாவமாவது :

ஒரு சமயம் இராகுலனும் இலக்குமியும் பௌத்த சாரண முனிவன் ஒருவனை வழிபட்டார்கள். அவனுக்கு உணவு சமைத்துக் கொண்டுவரும்படி தங்கள் சமையல் காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் அவ்வேலை யில் சிறிது கால தாமதப்பட்டுவிட்டான். அதற்காகக் கோபித்த இராகுலன் அவனைக் கொல்லக் கட்டளையிட்டு விட்டான், என்பதே.

மணிமேகலை முற்பிறப்பு வரலாற்றை அறிந்த பிறகு தீவதிலகை அவளுக்குக் 'கோமுகி' என்னும் பொய்கையை அவளுக்குக் காட்டினுள். அது 'புத்த பீடிகைக்குப் பக்கத்திலேயே இருந்தது. அதில் வைகாசி மாதத்துப் பௌர்ணமி தோறும் அமுதசுரபி என்கிற எடுக்க எடுக்கக் குறையாத திருவோடு ஒன்று தோன் றும். அது முன்னம் ஆபுத்திரன் என்னும் ஒருவனிடம் இருந்தது. அவன் தரும குணம் படைத்தவன். மதுரையில் தினம் பிச்சை ஏற்று, கிடைத்த வுணவைக் கொண்டு பல ஏழைகளைக் காப்பாற்றி வந்தான். அவ

னது அன்னதானச் செய்தி ஊரெங்கும் பரவியிருந்தது. ஒருநாள் இரவு அகால வேளையில் மதுரையை அடைந்த சிலர் பசியால் வருந்தி அவனை அடைந்து உணவு வேண்டினார்கள். அப்போது அவனிடம் உணவு இல்லை. அதனால் வருந்திய அவன் அருகிலிருந்த சிந்தா தேவி கோயிலை அடைந்து, அச்சமயத்தில் அங்கு உணவு வேண்டி வந்தவர்களுக்கு உணவளிப்பதற்காகத் தனக்கு உதவி செய்யும்படி வேண்டினான். அந்தத் தெய்வம் "அமுதசுரபி" என்னும் அந்த அட்சய பாத்திரத்தை அவனுக்குக் கொடுத்தது. "இதிலிருந்து உணவு எடுக்க எடுக்கக் குறையாது. இதைப் பெற்றுக்கொள்; ஏழைகளுக்கு உணவளித்துக் காப்பாற்றிவா", என்று சொன்னது. ஆபுத்திரனும் அப்படியே செய்துவந்தான்.

ஆபுத்திரனது தர்மத்தைத் தேவர்களுக்கு அரசனை இந்திரன் அறிந்தான். அவனுக்கு வரம் கொடுக்க எண்ணி அவனை அடைந்து, "உன் தரும குணத்தை மெச்சினோம். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள், தருகிறோம்", என்றான். ஆபுத்திரன் அவனை மதிக்க வில்லை. உன் வரம் எனக்கு ஒன்றும் தேவையில்லை!" என்றான். இந்திரனுக்குக் கோபம் வந்துவிட்டது. "நல்லது, நான் உன் அகந்தையை அடக்குகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

போனவன் எங்கும் காலாகாலத்தில் மழை பெய்யச் செய்தான். நாடு செழித்தது, ஏழைகள் இல்லாமற் போயினர். ஒருவரும் ஆபுத்திரனது அமுதசுரபியின் உணவை விரும்பி வரவில்லை. அட்சய பாத்திரம் உபயோகம் இல்லாமல் போயிற்று. ஆபுத்திரன் வருந்தினான். அச்சமயத்தில் 'சாவக நாட்டில்' பஞ்சம் என்று கேள்விப்பட்டான். அங்கே போய் அமுதசுரபியைப் பயன்படுத்தத் தீர்மானித்தான். சாவக நாடு செல்லும் கப்பல் ஒன்றில் ஏறி அந்நாட்டுக்குப் பயணமானான். வழியில் அந்தக் கப்பல் மணிபல்லவம் என்னும் தீவில் தங்கியது. பிரயாணிகள் இறங்கித் தீவைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டுப் போனார்கள். ஆபுத்திரனும்

போனான். எல்லாரும் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து கப்பலில் ஏறிக்கொண்டார்கள். ஆபுத்திரன் மட்டும் வேடிக்கை பார்க்கும் மும்முரத்தில் கப்பலை மறந்துவிட்டான். கப்பல் தலைவன், எல்லாரும் வந்து ஏறிக்கொண்டுவிட்டார்களா என்று விசாரித்தான். எல்லாரும் வந்துவிட்டோம் என்று கப்பலில் உள்ளவர்கள் சொன்னார்கள். ஆபுத்திரன் வராததை ஒருவரும் கவனிக்கவில்லை. கப்பல் தலைவன் கப்பலைச் செலுத்திக் கொண்டு போய்விட்டான்.

கப்பல் போனபிறகு ஆபுத்திரன் கடற்கரைக்கு வந்தான், கப்பல் போய்விட்டதை அறிந்தான். அந்தத் தீவில் மனித வாசம் கிடையாது. தான் மட்டும் தனியாயிருப்பதில் என்ன பயன்? மேலும் அமுதசுரபிக்கும் வேலை இல்லை. ஆகவே அதை அங்கேயிருந்த கோமுகப் பொய்கையில் போட்டுவிட்டு இறந்துபோய்விட்டான். இறப்பதற்கு முன் அவன், "இந்த அமுதசுரபி ஒவ்வொரு வருஷமும் புத்ததேவன் பிறந்த தினமாகிய வைகாசி மாதத்துப் பௌர்ணமியில் பொய்கைக் குள்ளிருந்து வெளிவரக்கடவது. அப்போது தக்கோர் யாராவது பொய்கைக்கு வந்தால் அவர்கள் கைக்குக் கிடைத்துப் பயன்படக்கடவது" என்று சொல்லிவிட்டு இறந்து போனான்.

இந்த வரலாற்றைத் தீவதிலகை மணிமேகலைக்குச் சொல்லி, "இன்று வைகாசி மாதத்துப் பௌர்ணமி! பாத்திரம் வரும் புண்ணிய நாள். நீ ஒருவேளை அந்தப் பாத்திரத்தை அடையத்தக்க புண்ணியவதியாக இருக்கலாம்! அதனாலேயே நீ இங்கே வந்து பீடிகையை வலம் வந்து வணங்கிப் பழம் பிறப்பை உணரும் பேறு பெற்றாய். வா, பொய்கைக்குப் போகலாம்! பாத்திரம் வெளிவரும் சமயம் ஆயிற்று!" என்றாள். இருவரும் பொய்கைக்குப் போனார்கள். பாத்திரம் வெளிவந்தது, அது மணிமேகலையின் கைக்கும் கிடைத்துவிட்டது.

மணிமேகலை அத்தீவில் ஏழு நாள் இருந்தாள். பிறகு மணிமேகலா தெய்வம் அவளிடம் வந்தாள். அவ

ளுக்கு வானிற் பறந்து செல்வதற்குரிய மந்திரம் ஒன்று, பசி எடுக்காதிருக்கும் மந்திரம் ஒன்று, வேற்று வடிவம் அடைவதற்குரிய மந்திரம் ஒன்று ஆக மூன்று மந்திரங் களை உபதேசித்தாள். காவிரிப்பூம் பட்டிணத்தில் போய் இருந்து அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தைக் கொண்டு ஏழைகளுக்கு அன்னதானம் செய்துகொண் டிருக்கும்படி சொல்லிவிட்டு மறைந்தாள்.

மணிமேகலை ஆகாயத்தின் வழியாகப் பறந்து காவி ரிப்பூம்பட்டினத்தை அடைந்தாள். அங்கே காய சண்டிகை என்னும் வித்தியாதரப் பெண் ஒருத்தியைக் கண்டாள். அவள் 'யானைத்தீ' என்னும் கொடிய வியாதியால் பீடிக்கப்பட்டவள். அந்த வியாதி வந்தவர் களுக்கு எப்போதும், எவ்வளவு சாப்பிட்டாலும் போதாது. அவளுக்கு அந்த வியாதி ஏற்பட்ட விதம் பின்வருமாறு:

அவளும் அவள் கணவன் 'காஞ்சனன்' என்பவ னும் ஒரு சமயம் ஒரு காட்டின் வழியாகப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் ஒரு குளக்கரையை அடைந்தார்கள். அந்தக் கரையில் ஒரு முனிவன் ஒரு நாவல் பழத்தை ஒரு இலையில் வைத்து விட்டுக் குளத்தில் இறங்கிக் குளித்துக்கொண்டிருந்தான். காய சண்டிகை அந்த நாவல் பழத்தைக் கண்டாள். அதைப் பற்றிய செய்தி ஒன்றும் அவளுக்குத் தெரியாது. அவள் அதைக் காலால் மிதித்துக் கெடுத்துவிட்டாள். அதைப்பற்றிய செய்தியாவது; அது பன்னிரண்டு வரு ஷங்களுக்கு ஒருமுறை பழுக்கும் ஒரு கனி. அதை வழக்கமாக ஒரு முனிவன் பறித்து உண்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பசியில்லாமல் தவம் செய்வான். அந்த முனிவனே அப்போது அங்கே குளித்துக்கொண்டிருந் தான். கனியைப் பறித்துவந்த அவன் குளித்துவிட்டு அதைச் சாப்பிட எண்ணி அப்படிச் செய்தான்.

இவற்றையெல்லாம் அறியாமல் காயசண்டிகை அதைக் கெடுத்துவிட்டாள். குளித்துக்கொண்டிருந்த

முனிவன் அதைக் கண்டான். கோபங்கொண்டு சபித்தான். "இந்தக் கனி இப்போது எனக்கு உபயோகப்படாததினுல் நான் இனி பன்னிரண்டு வருஷங்களுக்குப் பசியாய் இருப்பேன். அதற்கப்புறம் பழுக்கும் கனியைச் சாப்பிட்டே நான் பசி தீரவேண்டும். நான் பசியாயிருக்கும் காலம் வரையிலும் நீயும் பசியாய் இருந்து அதன் துன்பத்தை அறியவேண்டும். அதற்காக "யானைத்தீ" என்னும் நோய் உன்னைப் பிடிக்கக்கடவது! பன்னிரண்டு ஆண்டுகள் களித்து நான் கனியை உண்டு பசி தீரும் காலத்தில் உன் நோயும் நீங்கக்கடவது என்ருன். அதனுல் அந்த நோயை அடைந்த அவள், எந்த மகானுலாவது தன் நோய் அதற்குள் தீரக்கூடாதா என்னும் எண்ணத்தோடு ஊர் ஊராய்ப் பலநாள் அலைந்து கடைசியாகக் காவிரிப்பூம்பட்டிணம் வந்து அடைந்திருந்தாள்.

நிற்க, அமுதசுரபியைக் கொண்டு தருமம் செய்வதற்கு முன் அந்தப் பாத்திரத்தில் கற்பரசி ஒருத்தி பிச்சை போடவேண்டும் என்னும் நியதி ஒன்று ஏற்பட்டிருந்தது. அந்த நியதியைப் பற்றிய பேச்சு வந்த போது காயசண்டிகை, அந்த ஊரிலுள்ள 'ஆதிரை' என்னும் கற்பரசி ஒருத்தியின் வரலாற்றை எடுத்துச் சொல்லி, அப்பாத்திரத்தில் முதலில் அவளிடம் பிச்சை வாங்கும்படி மணிமேகலைக்குக் கூறிஞள். ஏனென்ருல் அந்தப் பாத்திரத்திலிருந்து பிச்சை வாங்கி உண்டால் தன் நோய் தீர்ந்துவிடும் என்று அவள் நம்பிஞள். இப்போது ஆதிரையின் வரலாற்றைப் பற்றிச் சொல்லுவோம்.

ஆதிரை, 'சாதுவன்' என்னும் ஓர் வணிகனது மனைவி. அவ்வணிகன் மிகுந்த பணக்காரன். அவன் 'வட்டு, சூது' என்னும் ஆட்டங்களை ஆடிப் பந்தயம் வைத்துத் தோற்றுத் தன் செல்வத்தை எல்லாம் இழந்துவிட்டான். அவன் பரத்தை ஒருத்தியைச் சேர்த்து வைத்துக்கொண்டு தன் மனைவியைக் கவனியாமல் இருந்தான். ஆனுலும் கற்பரசியாகிய அவள் தன் துயரத்தை ஆற்றியிருந்தாள். செல்வம் எல்லாம் போய்

விடவே பரத்தை அவனை வெறுத்துத் தள்ளிவிட்டாள். அவனுக்குப் புத்தி வந்தது. அவன் மறுபடியும் வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்க எண்ணினான். ஏதோ கொஞ்சநஞ்சம் மிகுந்திருந்த பணத்திற்கு ஏதோ கொஞ்சம் வியாபாரச் சரக்கை வாங்கினான். அப்போது பல வியாபாரிகள் தங்கள் சரக்குகளைக் கப்பல் ஒன்றில் ஏற்றிக்கொண்டு அயல்நாடுகளுக்கு வியாபாரம் செய்யப் புறப்பட்டார்கள். அந்தக் கப்பலில் சாதுவனும் தன் சரக்கை ஏற்றினான். அவர்களோடு தானும் வியாபாரத்திற்குப் புறப்பட்டான்.

கப்பல் கடலில் கொஞ்சநாள் அமைதியாகச் சென்றது. அப்புறம் பெரிய புயல்காற்று வந்துவிட்டது. கப்பலின் பாய்கள் கிழிந்தன. பாய்மரம் முறிந்து விழுந்தது. கடலில் அது அங்குமிங்கும் கண்டபடி சென்றது. முடிவில் ஒரு பாறையில் மோதிச் சுக்குநூறு ஆகிவிட்டது. சரக்குகள் எல்லாம் கடலுக்குள் அடக்கம் ஆகிவிட்டன. வியாபாரிகளில் சிலர் கடலில் விழுந்து முழுகி மாண்டு போனார்கள். சிலர் உடைந்த மரத்துண்டுகளைப் பிடித்து மிதந்து வந்து காவிரிப்பூம்பட்டிணத்தில் கரை சேர்ந்தார்கள். சாதுவன் ஒரு மரக்கட்டையைப் பிடித்து மிதந்துகொண்டே போய் நாகநாட்டுக் கடற்கரையை அடைந்தான். காவிரிம்பூம்பட்டினத்திற்கு வந்த வணிகர்களுக்குச் சாதுவனைப் பற்றிய சங்கதி தெரியாது. அவன் கடலில் முழுகி இறந்திருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அந்தச் செய்தியை அவர்கள் அவன் மனைவி ஆதிரையிடம் தெரிவித்தார்கள்.

அந்தச் செய்தியைக் கேட்ட ஆதிரை ஆருத்துயரம் அடைந்தாள். சிறந்த கற்பரசி ஆதலால், கணவன் இறந்த பிறகு உயிரோடு இருத்தலாகாது என்று எண்ணி தீப்பாய்ந்து இறக்கத் தீர்மானித்தாள். சுடுகாட்டிற்குப் போனாள். விறகை அடுக்கித் தீயை மூட்டினாள். குளித்து முழுகிப் புதுப்புடவை உடுத்தாள். உடம்பில் சந்தனம் பூசிக்கொண்டாள். நெற்றியில்

குங்குமம் இட்டுக்கொண்டாள். தீயை மும்முறை வலம் வந்தாள் "என் கணவன் இருக்கும் இடத்திற்கு நானும் செல்வேனாக!'' என்றாள். மூட்டிய தீயில் குதித்தாள். தீ அவளை ஒன்றும் செய்யவில்லை. தீயின் நடுவில் அவள் உட்கார்ந்திருந்தது செந்தாமரைப்பூவில் இலக்குமி தேவி உட்கார்ந்திருப்பதைப்போல இருந்தது. அவள் உடுத்தியிருந்த புதிய ஆடை கொஞ்சங்கூடக் கருக்காமல் புத்தம் புதிதாய் அப்படியே இருந்தது. அவள் உடம்பில் பூசிய சந்தனம் கொஞ்சமும் கெட வில்லை; அப்படியே இருந்தது. நெற்றிக் குங்குமமும் அப்படியே. "தீயும் சுடாத பாவியோ நான்'' என்றாள் அவள். அப்போது, "ஆதிரை! உன் கணவன் இறக்க வில்லை, அவன் நாகநாட்டில் இருக்கிறான். 'சந்திர தத்தன்' என்னும் வணிகனுடைய கப்பலில் ஏறிச் சீக்கிரத்தில் வந்து உன்னை அடைவான்!'' என்று அசரீரி வாக்கு உண்டாயிற்று. ஆதிரையும் ஆனந்தத்துடன் தீயிலிருந்து எழுந்திருந்து வீட்டுக்குப் போனாள்.

இப்போது சாதுவன் செய்தி என்னவென்று பார்ப்போம். நாகர் நாட்டுக் கடற்கரையில் அவன் ஒதுக்கப் பட்ட போது நாகர் பலர் அவனை வந்து சூழ்ந்துகொண்டு, அவனைக் கொன்று சுட்டுத் தின்னத் திட்டம் போட்டனர். அவனுக்கு அவர்களுடைய பாஷை தெரியுமாதலால், அவன் எழுந்து அவர்களோடு பக்குவமாய்ப் பேசினான். அவர்கள் அவனைத் தங்கள் தலைவனிடம் கொண்டு போனார்கள். தலைவனும் அவன் மனைவியும் ஆண் கரடியும் பெண் கரடியும்போலக் காணப்பட்டார்கள். அவர்களைச் சுற்றிலும் கட் குடங்கள், சுற்றிலும் எலும்புகள் சிதறிக்கிடந்தன. அவனைக் கண்டதும் சாதுவன் வணங்கித் தன் வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிவித்தான். அத் தலைவன் சாதுவன் மீது இரக்கங் கொண்டான். இவனுக்குத் தின்பதற்கு மாமிசமும், குடிக்கக் கள்ளும் நிறையக் கொடுங்கள். இவனுக்கு மனைவியாயிருக்கும்படி இளவயதுடைய அழகிய ஒரு பெண்ணைக் கொடுங்கள்! இவன் நம்மோடேயே இருக்கட்டும்!'' என்றான்.

அந்த வார்த்தையைக்கேட்ட சாதுவன் காதுகளைப் பொத்திக்கொண்டு சிவ சிவ! வேண்டாம்! வேண்டாம்! மாமிசத்தையும் கள்ளையும் உண்ணக்கூடாது என்று பெரியோர் தடுத்திடுக்கிருர்கள்! அவை எனக்கு வேண்டாம்! என்றனன். "மாமிசமும் கள்ளும் வேண்டாமா! பைத்தியந்தான்! அவை இல்லாமல் உயிர் வாழ்வது எப்படி?"

அவை இல்லாமல் உயிர் வாழ முடியும்! அவற்றை உண்டால் பாவம்! அதனுல் மறு பிறப்பில் மிகவும் கீழான பிறப்பை அடைவோம்!"

"மறு பிறப்பா! இறந்த பிறகு உயிர் மறுபடி பிறக்கவாவது! பொய்! உடல் இருக்க உயிர் எங்கேயாவது தனித்துப்போகுமா?"

"போகும். கனுவே அதற்கு அத்தாட்சி! நீ உன் வீட்டில் ஓரிடத்தில் படுத்துத் தூங்குகிருய். கனு உண்டாகிறது, நீ எங்கெல்லாமோ அலைகிருய்! என்னவெல்லாமோ செய்கிருய்! அப்போது உன் உயிர் தனித்துத் திரியாவிட்டால் அந்தக் காட்சி ஏற்படுமா? பிறகு விழித்துக்கொள்கிருய் அல்லவா? அப்போது உயிர் திரும்பிவந்து உடலுக்குள் புகுந்து கொண்டுவிடுகிறது!"

"சரிதான், சரிதான்! உண்மைதான்! நீ இன்று எனக்கு நல்ல உபதேசம் செய்தாய்! மேலும் நாங்கள் நன்மையடைய ஏதாவது வழி உண்டானுல் சொல்!

"நல்லது, சொல்கிறேன் கேள்! நீங்கள் இனிமேல் மனிதர்களை மட்டும் பிடித்துத் தின்னுதீர்கள்! இங்கே வருகிறவர்களுக்கு உங்களாலான உதவி செய்யுங்கள். அது போதும்! உங்களுக்கு நன்மை உண்டாகும்!"

"நல்லது அப்படியே! இதற்கு முன்னே நாங்கள் பல வணிகர்களைக் கொன்று அவர்கள் கப்பலில் இருந்த பொருளையெல்லாம் இங்கே வைத்திருக்கிருேம்! நீ எங்களுக்கு நல்லுபதேசம் செய்தாய்! ஆதலால் அவற்றை உனக்குக் காணிக்கையாகக் கொடுக்கிருேம். அவற்றை

எடுத்துக்கொண்டு நீ சந்தோஷமாக உன் ஊருக்குப் போய்ச்சேரலாம்!"

நாகர்தலைவன் சாதுவனிடம் அந்தப் பொருள்களை ஒப்படைத்தான். அந்தச்சமயத்தில் சந்திரதத்தனுடைய கப்பல் அந்நாட்டுக் கடற்கரைக்கு வந்தது. சாதுவன் அதில் தன் பொருள்களை ஏற்றிக்கொண்டு ஊர் வந்து சேர்ந்து மனைவியோடு இனிமையாக வாழ்ந்து வரலானான்.

காயசண்டிகை சொன்னபடி ஆதிரையாகிய கற்பரசியிடம் முதல் முதலாக மணிமேகலை அமுதசுரபியில் பிச்சை ஏற்றாள். பிறகு அதைக் குருடர், செவிடர், முடவர், நோய் கொண்டவர்கள், வயதானவர்கள், திக்கற்றவர்கள், ஏழைகள் முதலிய எல்லோருக்கும் தருமம் செய்தாள். பிறகு காயசண்டிகை அவளை சக்கரவாளக் கோட்டத்திலுள்ள உலகஅறவி என்றும் அறச்சாலையில் போய் இருந்து அறஞ்செய்து கொண்டிருக்கச் சொன்னாள். தானும் அப்பாத்திரத்திலிருந்து மணிமேகலையால் எடுத்துக் கொடுக்கப்பட்டவுணவை உண்டாள். யானைத் தீ என்னும் தீராதநோய் தீரப்பெற்று அவ்வூரைவிட்டுச் சென்றாள். அவள் அமுதசுரபியிலிருந்து கிடைத்தவுணவை உண்டகாலத்திற்கும் அவள் சாபவிமோசன காலமாகிய பன்னிரண்டு ஆண்டுகள் கழிவதற்கும் சமயம் சரியாக இருந்தது. மணிமேகலையும் அவள் சொற்படியே உலகவறவியில் போய் இருந்து அமுதசுரபியின் உதவியால் அன்னதானம் செய்துகொண்டு இருந்தாள்.

# 7. மீண்டும் நால்வர் மாநாடு

நமது ஐக்கிய முன்னணித் தோழர்கள் மாநாடு முன்னேற்பாட்டின்படி, நமக்குப் புதுமையை எடுத்துரைப்பதற்காக மீண்டு கூடியது. அகோரம் பேச்சில் முந்திக் கொண்டார்.

"போன தடவை என்னை முதலில் மூட்டையை அவிழ்க்கச்சொன்னீர்கள்! இப்போது நீங்கள் சொல்லாமலே நான் முதலில் மூட்டையை அவிழ்க்கிறேன். நீங்களெல்லாரும் திடுக்கிடத்தக்க செய்தி ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறேன்! கேட்பதற்குத் தயாராக மனதைத் திடப் படுத்திக் கொள்ளுங்கள்!" என்ருர் அவர்.

"ஏது பெரிய வெடிகுண்டாய்த் தூக்கிப் போடப் போகிறீர்கள் போலிருக்கிறது"

"பெரிய வெடிகுண்டா! ஆட்டம் பாம் போடப் போகிருர்!"

"சந்தேகமென்ன ஹைட்ரஜன் குண்டுதான் நான் இப்போது கொண்டுவந்திருக்கும் சங்கதி!"

"மெல்ல பாம்பைப் பெட்டிக்குள்ளிருந்து எடுத்து விடுங்கள்! ஊதுங்கள் மகுடியை!"

"சரி, கேளுங்கள்! மணிமேகலையை மணிபல்லவத் திற்குக் கொண்டுபோனுர்கள் அல்லவா? அங்கே நடந்த விசேஷத்தைச் சொல்கிறேன். தீவில் விடியற்காலத்தில் கடற்கரையில் மணலில் அவள் கிடத்தப்பட்டாள். அருகில் சற்றுதூரத்தில் தீவதிலகை என்றும் ஒருத்தி நிறுத்தப்பட்டாள். அவள் முக்கிய அங்கத்தினருள் ஒருத்தி. மணிமேகலை விழித்து எழுந்து தன் தனிமையை உணர்ந்து பயந்து கூச்சலிட்டுக்கொண்டு அங்குமிங்கும் ஓடும்போது மெதுவாகத் தீவதிலகை அவள் முன் வந்தாள். இனிய சொற்களைப் பேசினுள். வா, இங்கே பௌத்தமடம் ஒன்றிருக்கிறது அங்கே போகலாம் என்று அவளைக் கூட்டிக்கொண்டு மரமடர்ந்த ஒருதோப்பிற்குள் போனுள். அங்கே ஒரு பெரிய குகை காணப்பட்டது. அதற்குள் கூட்டிச்சென்று ஓரிடத்தில் உட்காரவைத் தாள். ஏதோ கொஞ்சம் உணவு கொடுத்தாள்.

உடனே படார் என்று ஒரு சத்தம் கேட்டது. அங்கே இருந்த பெரிய பாறை ஒன்று மெதுவாக

நகர்ந்தது. உள்ளே சிங்கத்தின் வாய் போல காணப்பட்ட ஒரு பெரிய உருவம் காணப்பட்டது. அது உள்ளேயிருந்து மெதுவாக முன்னே நகர்ந்து, பாறை நகர்ந்ததால் உண்டான திறப்படத்தில் வந்து நின்றது. உடனே அதன் வாய்திறந்தது! மணிமேகலை பயத்தால் அலறினாள். பக்கத்தில் திரும்பித் தீவதிலகை இருக்கிறாளா என்று பார்த்தாள். அவள் ஏன் இருக்கிறாள்! படார் என்றதுமே அவள் மறைந்துவிட்டாள். அவள் மறுபடி திரும்பிச் சிங்க முகத்தைப் பார்த்தபோது அதில் பிக்ஷு ஒருவர் உட்கார்ந்தார். அவர், "பெண்ணே, பயப்படாதே! நான் சொல்லுகிறபடி கேட்டால் உனக்கு நன்மை உண்டாகும். இல்லாவிட்டால் துன்பந்தான்! உதயகுமரன்மேல் நீ கொள்ளை ஆசை வைத்திருக்கிறாய்! அவனை மறந்துவிடு! ஆம்! நீ கட்டாயம் அவனை மறக்கத் தான் வேண்டும்! பௌத்த சங்கத்திலே முக்கியமாயிருக் கிற பெண்களுள் நீ ஒருத்தி ஆவாய்! அவர்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் எல்லாம் உனக்குத்தரப்படும்! அப்போதைக்கப்போது மேலிடத்திலிருந்து உத்திரவுகள் வரும். அதன்படிதான் நீ நடக்கவேண்டும்! உன்னை எப்போதும் சங்கம் கண்காணித்துக்கொண்டுஇருக்கிறது. உன்னைப் பிறர் கவனிப்பது உனக்குத் தெரியாது. ஆனால் உன்னுடைய ஒவ்வொரு உறுப்பின் அசை வையும் அவர்கள் கவனித்துக்கொண்டு இருப்பார்கள்! இரகசியம் எதையாவது வெளியில் விட்டாயோ, உடனே உன் உடல் வேறு, தலை வேறு ஆகிவிடும்! பத்திரம்! இங்கே உனக்கு ஒரு பிச்சைப்பாத்திரம் கொடுக்கப்படும்! அதைவைத்துக்கொண்டு காவிரிப்பூம் பட்டினத்தில் நீ அன்னதானம் செய்யவேண்டும்! அங்கே உன்னிடம் ஒருத்தி வந்து பாத்திரத்தை உபயோகிக்கும் விதத்தை உனக்குச் சொல்லிகொடுப்பாள்!" என்றார்.

உடனே மறுபடியும் படார். சிங்கமுகம் உள்ளே நகர்ந்தது. பாறை மறுபடியும் வந்து திறப்படத்தை மூடிக் கொண்டது! உடனே மணிமேகலை பின்னால் திரும்பிப் பார்த்தாள். என்ன ஆச்சர்யம்! அங்கே தீவதிலகை புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு நின்றாள். "பிக்ஷு

சொன்னதைக் கேட்டாயல்லவா? எல்லாம் உன் நன்மைக்குத் தான். சங்கம் எல்லாரிடமும் இப்படி நடந்துகொள்வது இல்லை. தக்க சிலரிடமே இப்படி நடந்துகொள்கிறது! நீ மிகவும் பேறுபெற்றவள்! அவர் சொன்னபடி உதய குமரனை மறந்துவிடு! சிற்றின்பத்தை விடு. பேரின்பபம் கிடைக்கும். அப்படியில்லாமல் சிற்றின்பத்தை விரும்பினாயோ, இங்கே நரகர் உலகு ஒன்றிருக்கிறது! அதுதான் உனக்குப் கிடைக்கும்! பார் அந்த நரகலோகத்தை!'' என்றாள்.

உடனே படார்! எதிரில் மற்றொருபுறம் இருந்த பாறை விலகியது! தீவதிலகை மறைந்து விட்டாள். பாறை விலகியதால் உண்டான திறப்பில் மனித எலும்புக்கூடுகள் இருட்டில் அங்குமிங்கும் நடமாடின. மேலே கூரையிலிருந்து பாம்புகள் தொங்கின. நடுவில் ஒரு சிறிய பிளவிலிருந்து நெருப்பு பெருத்த ஜ்வாலையுடன் மூண்டெழுந்தது. இரண்டு எலும்பு உருவங்கள் ஒருமனிதனை இழுத்துக்கொணர்ந்தன. கீழே உள்ள நெருப்புக்கு நேராக மேலே அவன் படுக்கை வசத்தில் கட்டப்பட்டான். அவன் உடலில் உணர்வு இல்லை. ஒரு எலும்பு உருவம் ஒரே வெட்டில் அவன் தலைவேறு உடல் வேறு ஆகும்படிச் செய்தது. உடனே மேலே கட்டப்பட்டிருந்த கயிறுகள் துண்டிக்கப்பட்டன. தலையும் உடலும் எரியும் நெருப்பில் விழுந்தன! உடனே படார்! காட்சி மறைந்தது. தீவதிலகை அருகில் புன் சிரிப்புடன் நின்றாள்!

''ஐயோ! வேண்டாம்! வேண்டாம்! சொன்னபடி செய்கிறேன்! சிற்றின்பத்தை விட்டு விடுகிறேன்! இளவரசரை மறக்க முயற்சிக்கிறேன்! அம்மா! கருணைகாட்டு! ஒரு தடவை அவரைப்பார்த்துப்பேச அனுமதிகொடு! ''என்று தீனக்குரலுடன் மன்றாடினாள் மணிமேகலை.

''என் கையில் ஒன்றும் இல்லையம்மா! எதற்கும் மேலிடத்திலிருந்து உத்திரவு வந்தாகவேண்டும். உன் பேரில் கருணைகாட்டி ஏதாவது செய்வார்கள். புத்தி

சாலித்தனமாக நடந்துகொள். உத்திரவுகளுக்குக் கீழ்ப் படிந்து நட! ஒரு கெடுதியும் நேராது. இவ்வளவுதான் நான் சொல்லமுடியும். நல்லது, நீ மிகவும் பயந்து போயிருக்கிறாய். கொஞ்சம் உணவுண்டுதூங்கு, எல்லாம் சரியாகிவிடும், வா, போகலாம் என்று அவளைக் கூட்டிக் கொண்டு பக்கத்திலுள்ள ஒரு குடிசைக்குப்போனாள். இதுதான் என் செய்தி எப்படி இருக்கிறது!'' இது.

''மணிமேகலை கட்டாயம் உதய குமரனை மறக்க வேண்டும். அப்படித்தானே!''

''சந்தேக மென்ன? வேறேவழி!''

'' சரி; இந்தச்சங்கதிகளை எப்படித் தெரிந்து கொண்டீர்?''

''ஏது! என்னையே ஆழம்பாப்பீர்கள் போல் இருக் கிறதே! எப்படிக்கண்டு பிடித்தால் உங்களுக்கென்ன? செய்தியைச் சொல்லிவிட்டேன்!''

''அதுகிடக்கிறது கௌதமரே, உங்கள் மூட்டை யிலுள்ள சாமான்கள் வெளியே வரட்டும்!''

''சரி; கேளுங்கள் பாத்திரம் கொடுக்கப்படும் என் பதை அவர் தெரியப்படுத்தினர். நான் அது எப்படிக் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கிறேன்! கோமு கிப்பொய்கை பசுவின் தலைபோன்ற உருவமுடையது. அதில் பசுவின்வாய் இருக்குமிடத்தில் ஜனங்கள் இறங் கிக் குளிக்கக்கொள்ள, படிக்கட்டு அமைந்திருக்கிறது. அந்தப் படிக்கட்டுகளுக்குக்கீழ் மறைவான மடை. அது மின்சார சக்தியால் இயங்கும் கதவையுடையது வேண் டும்போது அதன்வழியாக நீர் பாய்ந்து வெளிச்செல்லும் படிச் செய்யலாம். இதற்கு நேர்புறம் கடலிலிருந்து நீர் உட்புகுவதற்கு ஏற்ற வழியும் மறைந்துள்ளது.

வைகாசி மாசம் பௌர்ணமி நடு இரவுதான் பாத்தி ரம் வருவதற்குரிய காலம். அப்போது தீவதிலகை மணி மேகலையை அழைத்துக்கொண்டு பொய்கையில் படிக்

கட்டு இருக்குமிடத்திற்குச் சென்றாள். துணைக்கு இரண்டு பிக்ஷுக்கள் கூடச்சென்றார்கள். நடு இரவில் மறுபுறமிருந்து ஒரு சிறிய நீர்மூழ்கிக்கப்பல் பொய்கையின் நடுவிடத்தை நீரில் மூழ்கிய நிலையிலே வந்து அடைந்தது. அங்கே வந்ததும் அது தலையைத் தூக்கிற்று. அதன் தலைப்பாகம் தாமரைப்பூப்போன்றது. அதன்வழியாகக் கப்பலுக்குள்ளிருந்து ஒரு பிக்ஷு அமுதசுரபியைக் கொண்டுவந்து மிதக்கவிட்டார். பிறகு நீர்மூழ்கிக்கப்பல் போய்விட்டது இதே சமயத்தில் படிக்கட்டுகளின் கீழ் உள்ள மதகு திறக்கப்பட்டது. அதன் வழியாய் ஜலம் பாயத்தொடங்கவே நடுவிடத்திலிருந்து நீரோட்டம் படிக்கட்டுப்பக்கம் ஏற்பட்டது. அதன் வழியாகப் பாத்திரம் மிதந்து கரைப்பக்கம் வந்தது. கரைக்கு அருகில் வந்ததும் மதகின் கதவு மூடப்பட்டுவிட்டது. பாத்திரம் படிக்கட்டுக்குப் பக்கத்தில் வந்து நின்றது. தீவதிலகை மணிமேகலையைப் பார்த்துப் பாத்திரத்தை எடுத்துக்கொள். உனக்குத்தான்! நீ புண்ணியம் செய்தவள்! என்றாள். மணிமேகலை இரண்டு படிக்கட்டுக்கள் இறங்கிப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டாள். பிறகு நான்கு நாட்கள் அவள் தீவதிலகையுடன் தங்கியிருந்தாள் விசேஷம் ஒன்றும் ஏற்படவில்லை. ஐந்தாவது நாள் காலை மணிமேகலா தெய்வத்தின் வேடம் பூண்ட பெண் அங்கே வந்தாள். ஆகாசத்தில் பறப்பதற்குரிய உடை, பசியெடுக்காதிருக்கும் குளிகை, வேறு ஒரு பெண் போன்ற முகமூடி ஆகிய மூன்று பொருள்களைக்கொடுத்தாள். அந்த உடையை அணிந்து பறக்கும் பயிற்சி கொஞ்சநேரம் நடந்தது அன்று மாலை இரண்டு மணிமேகலைகளும் அந்தத் தீவைவிட்டுப் புறப்பட்டுக் கைரேகை மறையும் நேரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தை வந்து அடைந்தார்கள். எப்படியிருக்கிறது, என் செய்தி!

"ஆகா அற்புதம்! அற்புதம்! உப்பில்லாமல் கலகஞ்சியைக் குடித்துவிட்டீர்!"

"அது போகட்டும் பிரபாகரரே, உமது செய்தி என்ன?"

"என் செய்தியா? இதோ! கேளுங்கள்! சக்கரவாளக் கோட்டத்தில் பல இடங்களில் மனித உருவங்கொண்ட பதுமைகள் பெரிது பெரிதாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானது கந்திற்பாவை இதற்கும் இன்னும் பல பதுமைகளுக்கும் அவற்றிற்கு அடியில் வைக்கப்பட்டுள்ள சுரங்க வழியாகப்போய் உள்கூடாக உள்ள அந்தப்பதுமைகளுக்குள் தங்கியிருக்கலாம். உள்ளே இருக்கிற சில விசைகளைத் திருப்பினுல் அவற்றின் கண்கள் திறந்து ஒளிவீசும்! வாய்பேசுகிற மாதிரி மூடி மூடித் திறக்கும் உள்ளே இருக்கிற ஆள் பேசினுல் பதுமை பேசுகிறமாதிரி இருக்கும்! உள்ளே இருப்பவன் தனக்குக் கற்பிக்கப்பட்டபடி பேசுவான். அதுவரப் போகும் செய்திகளைப் பதுமையாகிய தெய்வம் எடுத்துச் சொல்லுவதுபோல அமையும். குறிகேட்க வருகிறவர்களை அங்குள்ள ஒரு பிக்ஷு அங்குள்ள ஒரு மேடைமேல் வணங்கவேண்டிய விதத்தைக்கற்பித்து அந்தவகையில் இருந்து வணங்கச் சொல்லுவான். அப்போது வரம் கேட்போர் கைரேகை அங்குள்ள ஒரு சாதனத்தின் மூலமாகப் பதிவாகும். அந்தக் கைரேகையைப் பார்த்துக் கைரேகை நிபுணன் ஒருவன் பதுமைக்குள்ளிருந்து வருங்காலச் செய்திகளை அறிவிப்பான் இதுதான் கந்திற்பாவை அற்புதம்! இதே போன்ற அமைப்பு அங்குள்ள சம்பாபதி தெய்வமாகிய பதுமையிலும் உண்டு. என்ன! என் செய்தி மெச்சத்தகுந்ததுதானு?

"பரவாயில்லை! ஓய் நம்பிகளே, உமது சங்கதி என்ன?"

"என் சங்கதி உலகவறவியைப் பற்றிய செய்தி. மணிமேகலை அங்கேவந்து இருந்துகொண்டு தருமம் செய்யவேண்டும் வேறு இடங்களில் இருந்தால் இளவரசன் அவளை எப்படியாவது கொண்டுபோய் விடுவான் என்று அவர்கள் பயப்படுகிருர்கள். அங்கே வந்து அவன் ஏதாவது செய்தால் அவனை ஒழிக்கவும் ஏற்பாடு செய்திருந்தார்கள்: மணிமேகலையை அங்கே எப்போதும் கண்காணித்துக்கொண்டே யிருப்பார்கள். அங்கே இரண்டு

பேர் அவ்வப்போது அவளுக்குக் கட்டளைகளைக் காகிதத்தில் எழுதிக்கொண்டுவந்து கொடுப்பார்கள் "ஏழைகளுக்கு உணவளிக்கிறோம்; எல்லாரும் வாருங்கள்" என்று பலகை தொங்க விடப்பட்டிருக்கும். உச்சிப் போது வரையில் மக்கள் உள்ளே விடப்படுவார்கள். உள்ளே இரகசிய இடத்தில் சமையல் நடந்துகொண்டிருக்கும். சங்கப்பணத்தில்தான் இந்தச்செலவு. சங்கத்திற்கு நன்கொடை நிறையக்கிடைப்பதால், இப்படிச் செய்ய முடிகிறது. மணிமேகலை சோறிடும் இடத்தில் ஒரு சிறிய மேடை இருக்கின்றது. முதலில் அவள் ஊரிலுள்ள சில வீடுகளுக்குச் சென்று அமுத சுரபியில் பிச்சைவாங்கி வருவாள். அந்த உணவைக்கொண்டு அவள் வந்திருக்கிற அத்தனை பேருக்கும் உணவு அளிப்பதாகப் பாவனை. அமுதசுரபியிலுள்ள உணவு ஒவ்வொரு முறையும் தீர்ந்ததும், அந்த மேடையில் அந்தப்பாத்திரத்தை எல்லாரும் பார்க்கக்கூடிய நிலையில் வைப்பாள். அப்போது பாத்திரத்தின் அடிப்பக்கத்தில் செய்யப் பட்டுள்ள இரகசிய யந்திர ஏற்பாடு ஒன்றால் பாத்திரத்தில் உணவு தானாகவே நிறையும் பாத்திரம் நிறைந்ததும், உணவு வருவதும் நின்று விடும். அவள் உணவு நிறைந்த பாத்திரத்தை எடுத்துவந்து மறுபடியும் பிச்சையிடுவாள். இதனால் அமுதசுரபியில் உணவு எடுக்க எடுக்கக் குறையாதிருப்பதாக மக்கள் நம்பும்படி செய்யப் படுகிறது.

இன்னொரு செய்தி, விஞ்சையர்களைப் பற்றியது. அவர்களில் பலர் பிக்ஷுக்களாக வேடம் பூண்டிருக்கிறார்கள். இந்த ஊரின் சுற்றுப்புறங்களில் பல இடங்கள் அவர்கள் இருக்கும் இடங்கள். அவர்கள் ஏதோ பெருத்த வேலை செய்வதாகத் தெரிகிறது. அவர்கள் நம்மைப் போல் தங்களுக்குள் இரகசியக்கூட்டம் கூடுவதாகவும் தெரிகிறது. அவர்கள் கூடிப்பேசுவது என்ன? நடக்கப் போகிற காரியம் என்ன? இதை நமது அடுத்த கூட்டத்திற்குள் அறிந்து அந்தக்கூட்டத்தில் தெரிவிக்கக்கூடும் என்று நினைக்கிறேன் இதுதான் என் செய்தி."

“நல்லது; இவற்றை உடனே இளவரசருக்கு அறிவித்து ஏதாவது எதிர் நடவடிக்கை எடுக்கலாமா?” என்ருர் கௌதமர்.

“விஞ்சையர் செய்தியையும் தெரிந்துகொண்டு பிறகு சொல்லலாம்!” என்ருர் நம்பிகள்.

“மணிமேகலைக்கு ஏற்பட்டுள்ள கட்டுப்பாட்டையும் இளவரசருக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தையும் குறித்து மட்டும் செய்தி தெரிவிப்போம்!”

“சரி, செய்யலாம்! இருங்கள்! இருங்கள்! அந்தக் கடிதத்தை ஒரு போக்காக எழுதுவோம். தேதி, கையெழுத்து, செய்தி விளக்கம் ஒன்றும் இல்லாமல் மொட்டைக்கடிதமாக, எச்சரிக்கைக் கடிதமாக எழுதுவோம். இதனுல் இளவரசர் அக்கடிதம் புத்தசங்கத்தாரால் தமக்கு எழுதப்பட்டதாக எண்ணிக்கொள்ளுவார். அவர்கள் மேல் கோபங்கொள்ளுவார். பிறகு அடுத்துக் கொஞ்சம் செய்தியை விளக்கி ஒரு கடிதம் எழுதுவோம். அப்புறம் அவர் ஒற்றர்களை வைத்து வேவுபார்ப்பார். அடிக்கடி நாமும் நமது உளவுகளைக் கடிதமூலம் கொடுத்துக்கொண்டிருப்போம். சீக்கிரத்தில் குட்டு வெளிப்படும். அவர்கள் கட்டுக்கோப்பும் குட்டிச்சுவர் ஆகிவிடும்!”

“பலே பலே! நல்ல ஏற்பாடு! அப்படியே செய்வோம். கடிதத்தின் வாசகம் என்ன?”

“இளவரசே, வணக்கம்.

மணிமேகலைமேல் கொண்ட காதலை நீக்கிவிடுங்கள்! அவளை முற்றிலும் மறந்துவிடுங்கள்! ஆம்! மறக்கத்தான் வேண்டும்! அவள் உலகவறவியில் இருப்பதாக உங்களுக்குச் செய்திகிடைத்திருக்கும். அங்கே வந்து ஏதாவது செய்தால், அப்புறம் நடப்பவைகளுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல. இது எச்சரிக்கை!”

''பேஷ்! பேஷ்! நன்ருக இருக்கிறது! இந்தக் கடிதத்தை யார் இளவரசரிடம் கொண்டு சேர்ப்பது?''

''போடுங்கள் திருவுளச்சீட்டு!''

''திருவுளச்சீட்டு பிரபாகரருக்கு!''

''சரி! நான் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்'' என்று தன் தோழர்களைக் கூட்டிச் செல்கிருர் இனி நாம் காப்பியக்கதைக்குச் செல்வோம்.

# 8. காதலர் கூடிப்பேசுதல்

பளிங்கு அறையில் மணிமேகலையைக்கண்டு பேச முடியாமல் திரும்பிய உதயகுமரன் உவவனத்தின் வாசலில் சில காவலரை நிறுத்திவிட்டு அரண்மனைக்குப் போனுன். மணிமேகலை அந்தப்பூந்தோட்ட வாயிலைக் கடந்ததும் அவளைப்பிடித்துத் தன்னிடம் கொண்டுவர வேண்டும் என்பது அவர்களுக்கு அவன் இட்டிருந்த கண்டிப்பான உத்திரவு. ஆனுல், பாவம்! அந்தக்காவலர்கள் அங்கே காத்திருந்து காத்திருந்து பார்த்தார்கள். மணிமேகலை உள்ளேயிருந்து வெளிவருவதாகக் காணவில்லை. அஸ்தமனம் ஆயிற்று. கொஞ்சம் இருட்டியும் விட்டது! பூந்தோட்டத்தின் வாசல் மூடப்படவேண்டிய வேளையும் வந்துவிட்டது. ''எப்படியாவது ஆகட்டும். உள்ளே சென்று அவள் இருக்கிருளா, இல்லையா? சென்றிருந்தால் எங்கே சென்ருள்? என்று பார்த்துவிட்டு வருவோம் என்று காவலர் உள்ளே சென்றனர். அங்குமிங்கும் துருவித் துருவித் தேடினர். ஒருவரையும் காணவில்லை பூந்தோட்டத்தினின்று எல்லாரும் வெளியே போய்விடவேண்டும் என்பதற்கு அறிகுறியான மணியும் அடிக்கப்பட்டு விட்டது ''எங்கே போயிருப்பார்கள்? வெளியே வரக்காணுமே அரைப்பைத்தியமாகிய காஞ்சனமாலை உள்ளே போனுள். அவளையும் காணும். அந்த அரைப்பைத்தியம் அந்த இருவரையும் எங்காவது கூட்டிச் சென்று விட்டதோ? அந்த பைத்தியத்தின்

பேச்சை அவர்கள் கேட்பார்களோ? வாசல் வழியாய் வரவில்லை. வேறேவாசலும் கிடையாது! சுவரேறிக்குதித்தல் முதலியன அவர்களால் செய்யமுடியாது. போயிருந்தால் பின் பக்கத்திலுள்ள திட்டிவாசலைத் திறந்து கொண்டு சுடுகாட்டுக் கோட்டத்துக்குள் போயிருக்கவேண்டும். பெண்பிள்ளைகள், இருட்டுவேளையில் சுடுகாட்டுக் கோட்டத்துத்துக்குள் போவார்களா? எல்லாம் மாயமாய் இருக்கிறது. சுடுகாட்டுக்கோட்டத்தில் சில முனிவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவேளை அவர்களுக்கு ஏதாவது உதவி செய்திருக்கலாம். இதைத் தவிர வேறுவழி இருப்பதாகத் தெரியவில்லை, உடனே போய் இளவரசரிடம் தெரிவித்துவிடுவோம்!” இப்படித் தங்களுக்குள் பேசிக்கொண்டு அவர்கள் அரண்மனைக்குப் போனார்கள்.

அரண்மனையில் உதயகுமரன் காவலர்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான் நேரம் ஆகிக் கொண்டே வந்தது. காவலர் வந்தபாடில்லை. இந்தக் காவலர்க்கு வந்த கேடென்ன! இந்த வேலைக்கு இவ்வளவு நேரமா? மடையர்கள் தூங்குமூஞ்சிகள் காவலர்மேல் வைந்திருந்த கவனத்திற்கு இப்படி ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, அந்த கவனத்தை வெளியுலகத்துக்குத் திருப்பினான்! ஆ ! அஸ்தமனமாய்க் கொஞ்சநேரம் ஆகிவிட்டது! காவலர் வந்து செய்தி தெரிவிக்காமலா போகிறார்கள்! அப்போது பார்த்துக்கொள்வோம்! என்று சொல்லிக்கொண்டு தன் அலுவலைப் பார்க்கச் சொன்னான்.

இரவு அவன் போசனத்தை முடித்து நிலாமணி முற்றத்தில் வந்து ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்தான். அதுவரையில் கொஞ்சம் அடங்கியிருந்த மணிமேகலையினுடைய ஆசை. அப்போது எல்லாவற்றையும் சேர்த்துவைத்துப் பதின் மடங்கு அதிகமாய் அவனைத் துன்புறுத்தத் தொடங்கியது. நீர்ப்பாசியை ஒதுக்கித்தள்ளத்தள்ள அது மறுபடியும் வந்து ஒன்று கூடி நீர்ப்பரப்பை மூடிக்கொள்வதைப்போல, அவன்

தனக்குள்ள வேறு அலுவல்களின் காரணமாக அந்த ஆசையை மறந்திருக்க முயல முயல, அது அந்த அலுவல்கள் முடிந்ததும் உடனே முன்னிலும் அதிகமாக அவனைத் தொந்திரவு செய்வதாயிற்று. இரண்டு மூன்று நொடிகள் அந்தக் கவலையால் உண்டான ஆயாசத்தால் கொஞ்சம் தலையை அசறவிட்டான். பிறகு தலையை ஒரு அங்குலம் உயர்த்தி எதிரே பார்த்தான். ஒரு காவலன் ஐந்தாறடி தூரத்தில் உருவிய கத்தியை உயர்த்திப் பிடித்தவனாய் நின்றிருந்தான். ஏ, காவலா நமது வசந்த மண்டப வாசலுக்குப் பக்கத்தில் நமது காவலர் யாராவது என்னைத்தேடி வந்திருக்கிறார்களா, பார்! வந்திருந்தால் அழைத்துவா!'' என்றான். அக்காவலன் உடனே அங்கிருந்து போனான். இப்போதாவது வந்திருக்கிறார்களோ, இல்லையோ! அங்கே என்னதான் நடந்திருக்கிறதோ! கடவுளுக்குத்தான் வெளிச்சம்! நாடகக் கணிகை பெட்டியில் வைத்திருக்கிற பணம் போல! என்று எண்ணினேன்! இப்போது அது களவாடப்பட்ட பணம் போல ஆகிவிடுமபோல் இருக்கிறது!'' என்று இந்த ரீதியில் அவன் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

சில நிமிஷங்கள் கழிந்தன. போனவன் சில காவலரைரை அழைத்துக்கொண்டு வந்தான். அவர்கள் முன்னம் மணிமேகலையைப் பிடித்துவருவதற்காக உவவனத்தின் வாயிலில் நிறுத்தப்பட்டவர்கள்தான். அவர்கள் தங்கள் செய்தியை உள்ளது உள்ளபடி தெரிவித்தார்கள். ‘‘சுடுகாட்டுக் கோட்டத்து முனிவர்கள்! அதாவது சக்கரவாளக்கோட்டத்து முனிவர்கள்! அவர்களுக்கும் மணிமேகலைக்கும் என்ன சம்பந்தம்? அவர்கள் முற்றுந்துறந்த முனிவர்களாயிற்றே! புத்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள்! ஆ! அறிந்தேன்! அந்தச் சுதமதி! நான் மணிமேகலையைக் காணவேண்டும் என்று சொன்னபோது எனக்கு வேதாந்த உபதேசம் செய்தவள்! அவள் ஏதோ தில்லுமுல்லு செய்திருக்கிறாள். அவள்தான் மணிமேகலையை அந்தபக்கமாகக் கூட்டிக்கொண்டு போய் முனிவர்களின் உதவியால் அவளை அவளுடைய

இருப்பிடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்க வேண்டும்! அவளும் அவள் தாய் மாதவியும் புத்த சங்கத்தைச்சேர்ந்த மாதர் மடத்தில் இருக்கிறுர்கள். இப்போது அங்கே ஆட்களை அனுப்பி ஏதாவது செய்வது அனுசிதம்! விடியட்டும்! முதல் காரியமாக அந்தச் சித்திராபதியை அங்கே அனுப்பி அவளை இழுத்துவரச் செய்கிறேன்!" இப்படித் தன்மனதை ஒரு விதமாகச் சரிப்படுத்திக்கொண்டான்.

பௌர்ணமிக்குச் சமீபம். நல்ல நிலா. நிலாமணி முற்றம். மெல்லிய பூங்காற்று. பக்கத்தில் இருக்கும் மல்லிகை முதலிய பூங்கொடிகளினின்று வீசும் இனிய மணம்! எல்லாவற்றிற்கும் மேலாக இளமைப்பருவம்! இந்த எல்லாம் ஒன்று கூடி விரக வேதனையைத்தூண்டி அவனைத் துன்புறுத்தி வேடிக்கை பார்க்கலாயின. மணி மேகலையைப்பற்றி அப்போது அவன் என்னென்ன எண்ணினுன்! உங்கள் மனசிலேயே பாவனை செய்து பார்த்துக்கொள்ளுங்கள். வேண்டுமானுல் ஒரு உதார ணம்; இது எவ்வளவு தூரம் பொருத்தமாயிருக்குமோ! ஒன்றும் சொல்லாமல் விட்டுவிட முடியவில்லை. அதற் காகக்குறிக்கிறேன். பொருத்தமோ, இல்லையோ நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். "கண்ணே மணிமேகலை! நீ பளிங்கு அறைக்குள் போனது வலுக்கட்டாயத்தினுல் தான்! எனக்கு நன்ருகத்தெரியும்! நீ அதற்குள்ளிருந்து தலை குனிந்து கண்ணீர் சிந்தினதை நான் இதே என் இரு கண்களாலும் பார்க்கவில்லையா! நீ யாரால் எவ்விதத் துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிருய் என்று என்னிடம் ஒருவார்த்தை சொல்லலாகாதா! என்னுல் அவர்களை அடக்கமுடியாதா! நான் அரசகுமாரன் அல்லவா? எனக்கென்ன வலிமையில்லையா? தைரியமில்லையா? ஒருவராலும் அடக்கமுடியாமற்போன மதயானையை நான் ஒரு நொடிக்குள் அடக்கவில்லையா? இல்லையில்லை! ஒருவரும் உன்னைக் கட்டாயப்படுத்தியிருக்க முடியாது! எனக்கு எதிரிடையாக வேலைசெய்ய எவ்வளவு துணிச்சல் வேண்டும். அவ்வளவு துணிச்சல் உள்ள

வர்களும் இருக்கிறார்களா? பின்னே என்னதான் மர்மம் இதில் அடங்கியிருக்கிறது.

நீயாகத்தான் துறவுபூணத் துணிந்து விட்டாயோ? என்மேல் உனக்குக் காதல் இருப்பதை உன் கண் எனக்கு அறிவித்து விட்டது. நீ பளிங்கு அறைக்குள் இருந்து தீனமாகப்பார்த்த அந்த ஒரு பார்வை! அது தெள்ளத்தெளிய விளக்கிவிட்டதே! நீ என்னை மறந்து விட எப்படித் துணிந்தாய்? உன்னைக் கட்டுப்படுத்துவது எது? சொல்! உடனே சொல்! அது எதுவாயிருந்தாலும் வெட்டியெறிகிறேன்!

அவன் எண்ணம் இந்தக்கட்டத்தை அடைந்த போது உடல் படபடத்தது! ஆவேசம் வந்வன்போல் சாய்வு நாற்காலியிலிருந்து உடலை உதறிக்கொண்டு எழுந்தான். பக்கத்தில் காவலிருந்த இரண்டு காவலர் கள் பதைபதைத்து ஓடிவந்தார்கள்! என்ன எசமான்! என்ன இப்படி? ஏன் இப்படிப் பதறுகிறீர்கள் என்றார் கள். வெட்கத்தால் அவன் மனம் குன்றியது! "ஒன்று மில்லை! போங்கள்" என்று வெட்கத்தை மறைத்துக் கொண்டு மெதுவாகச் சொல்லிவிட்டு மறுபடியும் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

ஐயோ! கண்ணே! உன்னை மறக்க முடியவில்லையே! எந்தக்காரியமும் ஓடவில்லை! நான் இப்படித் துன்பப்படு கிறேனே! நீ எப்படி இருக்கிறாயோ! உனக்கு என்மேல் காதல் இருப்பது உறுதி! நீ எப்படி இந்தப் பிரிவைப் பொறுத்துக் கொண்டு இருக்கிறாய்! இல்லை! இல்லை! உனக்கும் பொறுக்க முடியாதுதான்! எந்தப் பாவியோ நம் இருவரையும் பிரித்துவைக்கப் பார்க்கிறான்! அவன் மட்டும் இன்னான் என்று தெரிந்தால்! யாருக்கு இதில் என்ன அக்கரை! எங்கள் காதலுக்கு குறுக்காக ஏன் நிற்கவேண்டும்? ஐயோ! ஒன்றும் புரியவில்லையே!"

நேரம்போவது தெரியாமல் அவன் எண்ணங்கள் மேற்கண்ட ரீதியில் சென்றுகொண்டிருந்தன. எப்போது தூங்கினானோ தெரியாது. தூங்கி விழித்தது போன்ற

தொரு உணர்ச்சி விடியற்காலத்தில் அவனுக்கு ஏற்பட்டது. காலைக்கடன் முடித்துக்கொண்ட அவன் முதற் காரியமாக சித்திராபதி வீட்டிற்கு ஆளனுப்பினான். அந்த ஆள் கொஞ்ச நேரங்கழித்துத் திரும்பி வந்து, "அவள் மாதவியிடம் போயிருக்கிறாள் என்று வீட்டிலுள்ளவர்கள் சொன்னார்கள். வந்தவுடன் இங்கே வரும்படி செய்தி சொல்லிவிட்டு வந்தேன்!" என்றான். "அதுவும் நல்லதே! வந்தவுடனே சங்கதி தெரிந்து போகும்! பெரும்பாலும் அவள் அழைத்துக்கொண்டே வந்து விடுவாள்! இல்லாவிட்டால் நான் ஆள் அனுப்பிக் கொண்டு வந்து விடச் செய்கிறேன்!" என்று தனக்குள் எண்ணிக்கொண்டான்.

கொஞ்ச நேரங்கழித்துச் சித்திராபதி வந்தாள். சேவகன் சங்கதி தெரிவித்ததற்கும் அவள் வந்து சேர்ந்ததற்கும் இடையில் ஒரு மணிதான் சாவகாசம்! அந்த ஒரு மணி நேரத்தை அவன் எப்படிக் கழித்தான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது என்று சொல்லுவது வழக்கம்! ஆனால் உதயகுமாரன் விஷயத்தில் அந்தக்காலம் இன்னும் ரொம்ப ரொம்பப் பொல்லாதது ஆகிவிட்டது! ஒன்றுக்கு ஒன்பது பண்ணுகிறேன் என்று சொல்லி ஒவ்வொரு விநாடியும் ஒன்பது யுகமாக ஆகிவிட்டது அது! எப்படியோ ஒரு மணிநேரம் கழித்து விட்டது! சித்திராபதியும் வந்து விட்டாள்.

அவள் தன் கண்ணில்பட்டதுமே அவன் அவள் முகத்தைக் கூர்ந்துகவனித்தான். அதில் உற்சாகத்தைக் காணவில்லை! குதூகலத்தைக் காணவில்லை! கவலைக்குறி சொற்பமாகத் தென்பட்டது. ஏன் இப்படி யிருக்கிறது இவள் முகம்? என்ன தான் நடந்திருக்கும்? சித்திராபதி பக்கத்தில் வந்து வணங்கினாள். இளவரசே, என்னவென்று சொல்வேன்! அவளுக்குப் பாவம் நீங்கும் காலம் வந்து விட்டதாம்! அவள் மேன்மையடைவதற் குறிய காலம் நெருங்கிவிட்டதாம்! அவளைப் புத்த பிக்ஷுணி ஆக்குவதற்காக எங்கள் குலதெய்வம் அவளை மணிபல்லவத்தீவிற்குக் கொண்டு சென்றிருக்கிறதாம்! அங்கே

யுள்ள புத்த பீடிகையை அவள் தரிசித்துப் பழம் பிறப்பு உணர்ச்சியை அவள் அடைவாளாம்! அப்புறம் துறவு பூண்டு அறம் புரிந்து நோம்பு நோற்று நிர்வாணம் அடைவாளாம்!" என்று துக்கம் நெஞ்சை யடைக்கத் திக்கித் திக்கிச் சொன்னாள். அவள் கண்களினின்று நீர் தாரை தாரையாய் வழிந்தது.

உதயகுமரனுக்கும் நெஞ்சையடைத்தது. அவன் கண்களிளின்று நீர் தழும்பியது "மணிமேகலா தெய்வமா கொண்டு சென்றது" இது உண்மையாயிருக்குமா? தெய்வ சக்திக்கு முன் என் வல்லமை, மனித வல்லமை எம்மாத்திரம்! இருக்கட்டும்! ஏழு நாள்கழித்து வருவாளல்லவா? அப்போது பார்த்துக்கொள்கிறேன்! நேரில் அவளை எப்படியாவது கண்டு பேசாவிட்டால் நான் உதயகுமாரனல்ல! இளவரசனல்ல! எந்தச் சக்தி என்னை என்ன செய்கிறதென்று பார்க்கிறேன்! அவளைக்கண்டு பேசுகிறேன். அவள் புத்தி சுவாதீனமாக இருந்து அவளாகத் துறவு பூணத் தீர்மானித்திருந்தால் நான் ஒன்றும் செய்யவில்லை. மனப்பூர்வமாக விட்டு விடுகிறேன். அப்படியில்லாமல் யாராவது அவளைக் கட்டாயப் படுத்தியிருந்தால், அவர்களைக் கண்ட துண்டமாக வெட்டி எறிகிறேன்! என் கண்மணியை என்னிடத்திலிருந்து பிரிப்பதா! பிரித்து விட்டு அவர்கள் உரிர் வாழ்வதா! ஒரு போதுமில்லை!" இப்படித் தன் மனதிற்குள் எண்ணினான். வெளியில் ஒன்றும் சொல்லவில்லை. கொஞ்சம் மௌனம்! பிறகு, 'சரி, நீ போகலாம்! எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்று சித்திராபதியைப் பார்த்துச் சொன்னான். அவளும் தன் முன்தானையால் கண்களினின்று பெருகும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே போய்விட்டாள்.

ஏழு நாட்கள் ஒருவாறுகக் கழிந்தன. உதயகுமரனுடையஉள்ளம் முன்னம் அடைந்ததுபோல் அவ்வளவு துன்பம் அடையவில்லை. ஆனால் மணிமேகலையைப் பார்க்கவேண்டுமென்று துடித்துக் கொண்டுதான் இருந்தது. எட்டாநாள் காலை சித்திராபதி ஓடோடியும் வந்

தாள் "இளவரசே, இளவரசே, மணிமேகலை வந்து விட்டாள்! மணிமேகலை வந்து விட்டாள்!" என்று 'பரபரப்போடு சொன்னாள் அப்புறம் பரபரப்பு நின்று விட்டது! அமைதியாக நின்று கண்ணீர் விட்டபடி "அவள் சுடுகாட்டுக்கோட்டத்திலுள்ள "உலக அறவி" என்னும் அம்பலத்தில் கையில் பிச்சைப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு எல்லாருக்கும் தருமம் செய்கிறாளாம்!" என்றாள்! எங்கே! உலக அறவியிலா? இப்போதே போகிறேன்!" இருந்த இடத்தை விட்டு எழுந்தான். எழுந்ததும் தெரியவில்லை! நடந்ததும் தெரியவில்லை! அடுத்த நொடியில் அவன் அரண்மனை வாசலைக்கடந்து சென்று கொண்டிருந்தான். கண்களில் கண்ணீர்த்துளி தவழ, வாயில் புன்னகை தவழச் சித்திராபதி அங்கிருந்து மெதுவாகத் தன் வீடு நோக்கி நடந்தாள்,

இளவரசன் வாசலைக்கடந்து நாலடி நடந்த பிறகு தான் தனக்குக் குதிரை வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தான். ஒரு காவலன் குதிரையொன்றைப் பிடித்துக் கொண்டு பின்னால் வேகமாகவந்து கொண்டிருந்தான். அவன் அருகில் வருவதற்காகச் சற்றுக் காத்திருந்து அவன் கொண்டு வந்த குதிரையின் மேல்ப் பாய்ந்தேறினான். அவசர அவசரமாகத் தன் கழுத்திலுள்ள ஒரு மணி மாலையைக் கழற்றிக் குதிரை கொண்டு வந்தவனிடம் வீசினான் அது என்ன மாலை 'என்ன விலையுள்ளது? ஒன்றும் அவனுக்கு அக்கரையில்லை. ஏறியதுதான் தாமதம் குதிரை காற்றாய்ப் பறந்தது.

இரண்டு வினாடி கூட ஆக வில்லை சக்கர வாளக் கோட்டம் வந்து சேர்ந்தாயிற்று. குதிரையை விட்டு ஒரே தாவு பூமியை அடைந்தான். அவன் வேகமும், மிடுக்கும் கொண்ட நடை. ஒரே நொடி உலக அறவியை அடைந்தாயிற்று. ஆ! மணிமேகலை இருக்கிறாள்! அவள் கையில் பிச்சைப்பாத்திரம்! துறவிகளுக்குரிய எளியவுடை அலங்காரத்திற்குரிய பொருள் அவள் உடம்பின் மேல் ஒன்றுமில்லை. ஆனாலும் அவள் என்ன அழகு! அழகு

தேவதை அவள் மேல் தன் முழு ஒளியையும் வீசி யிருக்கிறாள்.

இளவரசனை எதிரில் கண்டாள் மணிமேகலை. அவளையும் அறியாமல் பாசம் அவன் பக்கம் அவளை இழுத்தது. இளவரசனோடு போய் அவனுடைய ஆசைநாயகியாக இருப்பதா? அல்லது தனது நன்மைக்காக என்று பெரியோர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற துறவு மார்க்கத்தில் இருப்பதா? இரண்டில் ஒன்று தீர்மானித்து விடவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. இருக்கிற சாவகாசமோ மிகவும் சொற்பம். இளவரசன் உடனே தன்னோடு வந்துவிடும்படி இதோ வற்புறுத்தப் போகிறான். எதிரில் கொஞ்சதூரத்தில் வருகிறவன் தன்னைவந்து அடைவதற்கு முன்னே தீர்மானித்துவிட வேண்டும். அவள் உறவைக் கைவிட்டுவிடும்படி பலர் அவளிடம் பல நியாயங்களைக் காட்டி வற்புறுத்தி ருக்கிறார்கள். ஆனால் உலகப்பற்று என்ன விரைவில் விடக்கூடியதா? அவன்மனத்தில் சதா போராட்டம் நடந்தவண்ணம் இருக்கிறது. இப்போது இரண்டி லொன்று தீர்மானிக்கவேண்டிய சமயம். ஒரே கணத் திற்குள் பல செய்திகள் அவள் மனக்கண்ணின் முன்னேவந்து நின்றன. அவற்றில் இரண்டு எல்லா வற்றையும் தள்ளிக்கொண்டு முன்னணிக்கு வந்தன. ஒன்று அவள் மாற்றாந்தாய் ஆகிய பத்தினிக் கண்ணகி. பத்தினிக் கண்ணகியின் மகள் பரத்தை ஆவதா? இரண்டாவது தான் பற்றை உதறித்தள்ளித் துறவியானால் தன் குல மாசு ஒழியும் என்னும் கருத்து. தன் ஒருத்தியின் இன்பத்தைப் பார்ப்பதா, குல மேன்மையைப் பார்ப்பதா? இளவரசன் வந்து அவளை அடைந்து விட்டான். அவள் மனப்போரட்டமும் ஒரு விதமாக முடிவடைந்து விட்டது. அதாவது தான் தன் இன்பத்தைத் தியாகம் செய்ய வேண்டியதுதான் என்பதே!

இளவரசன் வந்ததைக் கண்டு கூட்டம் விலகி நின்றது. அவன் நேராக மணிமேகலையிடம் சென்றான். "மணிமேகலை! என்ன கோலம் இது! இந்த இளவய

தில் இந்தக் கோலமா? என்னைப்பார்! என் கண்களைப் பார்! அதில் என் அன்பின் தன்மை எப்படி இருக்கிறதென்று பார்! அது உண்மை அன்பா, போலி அன்பா என்று பார்! உனக்காக நான் எப்படிப்பட்ட தியாகத்தையும் செய்வேன் என்று அந்தக் கண்கள் சொல்லுகிறதா, இல்லையா என்றுபார்! என்னைத் தவிக்கவிட்டு நீ இந்தக் கோலம் கொள்ளலாமா? என்ருன். மணிமேகலைக்கு அவன் கண்களை ஏறிட்டு பார்க்கத் துணிவு வரவில்லை, அவன் கண்களைப் பார்த்தால் தன் மனவுறுதி கெட்டுவிடும் என்பதை உணர்ந்தாள். அவள் பாசம் அவனுடைய கண்களைப் பார்க்கும்படி அவளைத் தூண்டிற்று. அந்த ஆசையை அவளால் மறுக்க முடியவில்லை. ஒரு நொடி அவள் அவன் கண்களைப் பார்த்தாள். உடனே பின் தங்கித் தன் கண்களை மூடிக்கொண்டாள். உள்ளேயிருந்து பீறிட்டுக்கொண்டுவந்த துக்கத்தை மிகவும் சிறமப்பட்டு ஒருவிதமாக அடக்கிக்கொண்டாள். "இந்த உடம்பு பிறக்கும்போதே துன்பத்தைக் கொண்டது. பிறகு வளர்ந்து இளமைப்பருவ மடைந்து இன்பத்திற்கு இட மாகக் காணப்பட்டாலும் அந்த இன்பம் நிலையானது அல்ல; உடனே கிழப்பருவமடைந்து எல்லையற்ற துன்பங்களை அடைந்து பிறர் அருவருக்கத்தக்க நிலையை அடைவது. இடையில் உண்டாகும் நோய்களோ பல! தனது உற்ருர், பொருள் இவைகளின் இழப்பினல் ஏற் படும் துன்பம் வேறு இடையிடையே. கடைசியில் எல்லா வற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல சாவுத்துன்பம். இப்படி இது துன்பங்களாகிய சரக்குகளை ஏற்றப்பட்ட கப்பல்போல இருக்கிறது. இதன் இந்தத் தன்மைகளையெல்லாம் கண்டு நான் துறவு பூண்டு அறஞ்செய்வதை மேற்கொண்டேன்!" என்ருள்.

"மணிமேகலை, இந்த வித்தைகளையெல்லாம் எங்கே கற்ருய்? யாரிடம் கற்ருய்? எப்போது கற்ருய்? இது எல்லாருக்கும் எல்லாராலும் எப்போதும் சிலரால் கற்பிக்கப்படும் பாடந்தானே! இதில் புதுமை என்ன இருக்கிறது? இந்தப்பாடத்தைக் கேட்டு எவரும் உன்

போல் செய்ததாகத் தெரியவில்லை? உலகிலுள்ள இத்தனைபேரும் நீ சொல்லிய எல்லாச்செய்திகளையும் அறிந்தவர்கள் தானே! அவர்கள் எல்லாரும் துறவிகள் ஆகிவிட்டார்களா? துறவிகள் என்று சொல்லிக் கொண்டு இப்போது இருக்கிறவர்கள் எல்லாரும் உண்மையில் துறவிகள் என்று சொல்ல இயலுமா? பார்! என்னைப்பார்! என் துன்பத்தைப்பார்! என் அன்பைப்பார்! இந்த அர்த்தமற்ற துறவை விட்டுவிடு!''

உதயகுமாரன் பேசிக்கொண்டே இருப்பவன்போல் அவளுக்குத் தோன்றிற்று. அவனுடைய சொல் ஒவ்வொன்றும் அவளுடைய மனவுறுதியாகிய கயிற்றின் ஒவ்வொரு இழையை அறுத்து வருவது போன்றவுணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. மனவுறுதி குலைந்து விடுமோ என்று பயந்தாள்! அவன் வார்த்தைகள் மேற்கண்ட கட்டத்தை அடைந்தபோது அவள் ''கொஞ்சம் இருங்கள்! இதோ உள்ளே போய்விட்டு வந்து விடுகிறேன்!'' என்றாள். உள்ளே போனாள், என்ன செய்வது என்று கைகளைப்பிசைந்து கொண்டு சில விநாடிகள் நின்றாள். பிறகு சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று காயசண்டிகை நினைவு வந்தது! அவள் உருவத்தை எடுத்துக்கொண்டு, அவனுடைய தொந்தரவு இல்லாமல் அவன் எதிரிலேயே இருக்கலாம் என்று தோன்றிற்று! உடனேமந்திரம் சொல்லிகாயசண்டிகையின் உருவத்தை அடைந்தாள். மறுபடியும் வெளியில் வந்து உதயகுமாரனைக் கவனியாமல் அன்னதானம் செய்வதில் ஈடுபட்டாள்.

உள்ளே போனவள் வரவில்லை என்று கவலையுடன் எதிர்பார்த்து நின்றான் உதயகுமாரன் கொஞ்சநேரம் கழித்து, வேறொருத்தி மணிமேகலையின் கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வருகிறாள். தன் வார்த்தைகள் அவளுக்கு நன்மையாகப் படவில்லை. தன் பிச்சைப் பாத்திரத்தை வேறொருத்தி கையில் கொடுத்து விட்டுத்தான் ஒளிந்துகொண்டு விட்டாள். இனிமேல் அவள் வெளியே வரமாட்டாள். பௌத்த

முனிவர் இருப்பிடமாகிய அதற்குள் தான் நுழைந்து ஒன்றும் செய்யமுடியாது. நிலைமையை உணர்ந்தான் அவன். பேசாமல் திரும்பிச்சென்றான். செல்லும்போது சற்றுத்தயங்கி நின்றான். "இவளுக்கு என்பேரில் அன்பு இருக்கிறதா, இல்லையா? தெளிவாகத் தெரியவில்லையே! அவள் நடத்தைகளைப் பார்த்தால் அன்பு இருப்பது போலப் புலப்படுகிறது. அவள் சொற்களைப் பார்த்தால் அன்பு இல்லை போலப் புலப்படுகிறது. எதைத்துணிவது? அன்பில்லை என்பது உண்மையானால் விட்டு விடலாம்! ஆனால் நான் அப்போது உயிரற்ற சவம்தான். அன்பு இருப்பது உண்மையானால் ஏன் விடவேண்டும்? அவள் செய்கைகள் சிலவற்றைக் கவனித்தால் அவள் யாரோ சிலரது கட்டுப்பாட்டுக்கு அடங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது! இன்றிரவு ஒருவருமறியாமல் இங்கே வருகிறேன். எப்படியாவது இவளை எடுத்துச்செல்கிறேன். இவளைக் கட்டுப்படுத்தும் சக்தி இவளிடம் வராத இடத்திற்கு இவளைக் கொண்டு செல்லுகிறேன்! உண்மையைக் கேட்கிறேன். தெளிவாக அவள் கருத்தை அறிகிறேன்! பிறகு தக்கபடி நடக்கிறேன். ஆ! உண்மையில் அவள் துறவு பூணத் தீர்மானித்து விட்டாலோ! நான் இவ்வுலகில் இருந்து பயன் இருப்பதாகத் தோன்றவில்லை! இறந்து விட வேண்டியதே! மறு பிறப்பிலாவது அவளை அடைகிறேன்!" என்று தனக்குள் எண்ணிக்கொண்டான். பிறகு வேகமாகச் சென்றுவிட்டான்.

அவன் செல்லத் தொடங்கியது, சற்றுத் தயங்கி நின்றது, மனம் ஓர் முடிவைக் கண்டதும் மறுபடி சென்றது ஆகிய இந்தச் செயல்களைக் கண்டவர்கள் அவன் அவளை விடப்போவதில்லை. விரைவில் எப்படியாவது அவளைக் கொண்டுசெல்லவே தீர்மானித்துக்கொண்டு செல்கிறான் என்று நினைக்கும்படியாக இருந்தது.

# 9. அவசரக் கூட்டம்

"என்ன இளைய நம்பிகள்! மாதம் ஒருமுறை கூட வேண்டும் என்பது அல்லவா நமது ஏற்பாடு! நமது முந்திய கூட்டம் நடந்து இன்னும் பத்துநாள்கூட ஆக வில்லையே! அதற்குள் அவசரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறீரே, காரணம் என்னவோ?'' என்றார் நமக்கு புதுமையைப் புலப்படுத்தும் ஐக்கிய முன்னணித் தோழர் பிரபாகர்.

"அதைக் கொஞ்சம் நிதானமாகச் சொல்லவேண் டும். அதைப் பிறகு சொல்கிறேன். அதற்குள் நீங்கள் கண்டறிந்தது ஏதாவது உண்டானால் சொல்லுங்கள்! என்ன பிரபாகர் உமது சங்கதி ஏதாவது உண்டா?''

"மிகவும் சொற்பந்தான். ஆனால் அடுத்த கூட்டத் திற்குள் ஏதாவது அறிந்து கொஞ்சம் அதிகமாகச் சொல்லக்கூடும் என்று நினைக்கிறேன்!

"அது கிடக்கட்டும்! நீர் நம்முடைய கடிதத்தை இளவரசரிடம் கொண்டு சேர்த்தீரா? அங்கே என்ன நடந்தது?"

கொண்டு சேர்த்தேன், இளவரசர் பார்த்தார், மணி மேகலையை மறக்கவேண்டுமா? யார் உத்தரவு இது? மொட்டைக்கடிதம்! எச்சரிக்கை! மிரட்டல்! இதெல் லாம் யாரிடம்? இந்த உதயகுமாரனிடமா? தொடை நடுங்கிகள்! வீரமுண்டானால் நேரில் வரமாட்டார்களோ! கோழைகள்! உலகவரவிக்குப் போனால் ஆபத்தா? போகிறேன்! எந்த ஆபத்து வருகிறதோ, பார்க்கி றேன்!'' என்று இரைந்தார். இந்தச் சமயத்தில் பல்லை யிளித்துக்கொண்டு சித்திராபதி வந்தாள். மணிமேகலை வந்துவிட்டாள், உலக அறவியில் இருக்கிறாள் என்று சொன்னாள். பிறகு அவள் குடும்பத்துக் குலதெய்வமாம் மணிமேகலா தெய்வம்; அந்தத்தெய்வம் அவள் பேர்த்தி மணிமேகலையை நல்வழிப்படுத்துவதற்காக மணிபல்ல

வத்துக்குக் கொண்டு சென்றது என்று சொன்னுள். பேர்த்தியின் துறவுக் கோலத்தை மாற்றி எப்படியாவது கொண்டுவந்துவிடுங்கள்!'' என்று கெஞ்சினுள். ஆகட்டும் என்று சொல்லி அவளைப் போகச்சொல்லி விட்டு உடனே விரைந்து புறப்பட்டார். அவர் உலக வறவியை நோக்கித்தான் போனுர். அப்புறம் நான் கவனிக்க வில்லை. எனக்குத் தெரியும் அவர்கள் மணிமேகலையை இலேசில் விடமாட்டார்கள் என்று! அங்கே போய்ப் பார்ப்பது என்ன இருக்கிறது? அவர்கள் விடப்போவ தில்லை! அவருக்கு அவர்கள்பேரில் கோபம் அதிகமாகப் போகிறது, அவ்வளவுதானே நமக்கு வேண்டியது!''

இந்தச் சமயத்தில் நான் உலகவறவிக்குச் சென்று அங்கே நடந்ததைக் கவனித்தேன். அதைப்பற்றிச் சொல்லுகிறேன், கேளுங்கள்! என்று தொடங்கினுர்.

"மணிமேகலை பிச்சைப் பாத்திரத்திலிருந்து எல்லா ருக்கும் உணவு எடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தாள். இளவரசர் வந்தார். தன்னேடு வரும்படி ஏதேதோ பேசினுர். மணிமேகலை பயந்து அடிக்கடி அங்கிருந்த கந்திற்பாவையைப் பார்த்தபடி இருந்தாள். அந்தப் பாவையில் என்ன இருக்கிறது என்று அந்தப் பக்கம் கண்ணேட்டம் விட்டேன், அதன் கண்கள் கொடூரப் பார்வையாய் மணிமேகலையைப் பார்த்தபடி இருந்தது. உருட்டு விழிகள்! என்ன பயங்கரம்! சுடுகாட்டில் பேய் பிசாசுகளை எல்லாம் என்ன சங்கதி என்று கேட்கிற எனக்கே கொஞ்சம் அச்சமாய்த்தான் இருந்தது. சந் தேகமில்லாமல் அதற்குள் அப்போது ஒரு பிக்ஷு ஒளிந்துகொண்டு அப்படிப்பார்த்தான்!''

ஏன் உடனே நீர் அதை இளவரசனிடம் சொல்லி யிருக்கப்படாது?

என்ன பயன்? நான் சொல்லி அவர் அந்தப் பாவையைப் பார்ப்பதற்கு முன்னே அவன் பாவைக் குள்ளிருந்து போய்விடுவான், என் பேச்சுப் பொய்யாகும்!

ஏன் இளவரசர் பாவையைச் சோதித்துப் பார்க்க மாட்டாரா!

என்ன தெரியப்போகிறது? அதை அடியோடு பெயர்த்து எடுத்து உடைத்துப் பார்த்தால்தான் குட்டு வெளிப்படும்! அவ்வளவுதூரம் அப்போது அவன் செய்வானு? மேலும் எல்லாம் கண்டறிந்த பிறகு எல்லாக் குட்டையும் உடைக்கலாம் என்று முன்னமே நாம் நமக்குள் தீர்மானிக்கவில்லையா?''

சரிதான் மறந்துவிட்டேன் மேலே சொல்லும்!

மணிமேகலேக்கு உள்ளூர இளவரசன் மேல் கொள்ளே ஆசை! கந்திற்பாவையோ உருட்டிப் பார்க்கிறது. தன்னேப்பற்றி அவளுக்கு விசாரமில்லே. இளவரசனுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டால் என்ன செய்வது? இளவரசன் சூரன்தான்! எதிர்த்து வந்தால் ஆயிரம் பேராளுலும் சமாளிப்பான்! இந்த வகையான ஆபத்து நேரில் எதிர்த்தா வரும்? மறைந்து இருந்து ஒரே போடாகப் போடும்! இதையெல்லாம் அவள் நினேத்திருக்கவேண்டும்! அவள் உடல் நடுங்கிக்கொண்டே இருந்தது. அவளால் இளவரசனே ஏறிட்டுப் பார்க்க முடியவில்லே. தலே குனிந்தபடியே பேசத் தொடங்கிஞள். என்ன பேசவேண்டும் என்பதை அவர்கள் கற்பித்து மனப்பாடம் செய்வித்திருப்பார்கள் என்று தோன்றுகிறது! அவள் பேசியதெல்லாம் வேதாந்தம்! அதில் உயிர் இல்லே! எல்லாம் உடம்பு நிலேயாமை! உலக நிலேயாமை! இளமை நிலேயாமை! எல்லாம் நிலேயாமை! இவைதான். ஆனுல், நான் உன்னே விரும்பவில்லே! நீ என்னே வந்து தொந்தரவு செய்யவேண்டாம் என்று ஒரு வார்த்தைகூட சொல்ல வேண்டுமே! கிடையாது! பிறகு திடீரென்று இதோ வருகிறேன் என்று சொல்லி உள்ளே போனுள். திரும்பி வரவேயில்லே! அவளுக்குப் பதிலாகக் காயசண்டிகை அவள் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு எல்லாருக்கும் பிச்சைபோட வெளியில் வந்தாள்! பிறகு இளவரசர் போய்விட்டார். போகும்போது அவர் இருந்த நிலேமை

அன்றைக்குள் அவர் இரண்டிலொன்று பார்த்துவிடுவார் போலக் காணப்பட்டது. பிறகு நமக்கென்ன வேலை என்று நான் வந்துவிட்டேன்!

"என்ன சொன்னீர்? காயசண்டிகை வந்தாளா?" என்று அப்புறம் பேச்சைத் தொடங்கினர் கௌதமர் "நான் இன்று அந்தக் காயசண்டிகையைப் பற்றி அறிந்த விஷயங்களைச் சொல்ல இருந்தேன்! இப்போது காயசண்டிகை பிச்சைப்பாத்திரத்தோடு வந்தாள் என்ருல், நான் அறிந்ததற்கும் இதற்கும் விஷயம் மாறுபடுகிறதே! என்ருர் அவர்.

"நீர் என்ன அறிந்தீர்? அதை முதலில் சொல்லும் பிறகு இதைப்பற்றிக் கவனிப்போம்!

அந்தக்காய சண்டிகை சங்கத்துப்பெண் அங்கத்தினர்களுள் ஒருத்தி. காஞ்சீபுரத்துப்பக்கம் இருப்பிடம் அமைத்துக் கொண்டிருக்கும் சில வித்யாதர குடும்பங்களில் அவள் குடும்பமும் ஒன்று. மணிமேகலை கையிலுள்ள பிச்சைப் பாத்திரத்துக்கு ஒரு மகிமையை ஏற்படுத்துவதற்காக அவள் வரவழைக்கப்பட்டாள். அவள் யாரோ ஒரு முனிவனது உணவாகிய நாவற்பழத்தைக் கெடுத்து விட்டதாகவும் அதற்காக அவள் பன்னிரண்டு வருஷம் யானைத்தீ என்னும் நோயால் கஷ்டப்பட வேண்டும் என்று சாபம் பெற்றதாகவும் ஒரு கதை கூறப்படுகிறது. மணிமேகலை கையிலிருக்கிற அட்சயபாத்திரத்திலிருந்து உணவுண்டாள்; தீராத நோய் தீர்ந்தது என்ருல் பாத்திரத்திற்கு எவ்வளவு மகத்துவம்! பாத்திரத்தை வைத்திருப்பவளுக்கு எவ்வளவு மகத்துவம்! இந்த மகத்துவத்தை ஏற்படுத்துவதற்காகவே அவள் வரவழைக்கப்பட்டாள். அவளைக்கொண்டு பாத்திரத்துக்கு மற்ருெரு மகிமையும் உண்டாக்கப்பட்டது. அதாவது அதில் முதல் முதல் கற்பரசி ஒருத்தி பிச்சையிட்டாள் என்பதே. காயசண்டிகை ஆதிரை என்னும் கற்பரசியிடம் மணிமேகலை முதலில் பிச்சை பெறும்படி ஏற்பாடு செய்தாள். பிறகு பாத்திரத்திலுள்ள சோற்

றைச் சாப்பிட்டு நோய் தீர்ந்தவள் போல நடித்தாள். வந்த காரியம் முடிந்தது. போய்விட்டாள்! அவள் போனதை நானே நேரில் பார்த்தேன். இப்போது அவள் பிச்சைப்பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வந்தாள் என்றால், மறுபடி ஒரு வேளை திரும்பவும் அழைக்கப்பட்டிருப்பாளோ என்னவோ! போய் அதை ஆராய வேண்டும்!''

''நீர் ஒன்றும் அதை ஆராயவேண்டாம்! அவள் போனவள் போனவள்தான். இங்கே நடந்திருப்பது வேறே விஷயம் என்று இறுதியாகத்தன் பேச்சைத் தொடங்கினர் இளைய நம்பிகள்

'' நடந்திருப்பது வேறு? என்ன அது?

''மணிமேகலையே காயசண்டிகை வேஷம்போட்டுக் கொண்டுவந்து விட்டாள்! முன்னே குறிப்பிட்டதல்லவா வேற்றுரு எடுக்கும் மந்திரம், அதுதான் மாற்று உருவத்திற்கு உரிய முகமூடி! அதை உபயோகித்துக் காயசண்டிகை ஆகிவிட்டாள்.''

''அப்படியானால் இந்தச் செய்தியை அவசியம் இளவரசருக்குத் தெரியப்படுத்தவேண்டும்!''

''இதை தெரியப்படுத்தாமலா! இதை நானே கடித மூலம் அவருக்குத் தெரியப்படுத்துகிறேன் !''

''நல்லது மேலே சொல்லும் !''

''மணிமேகலை இதோ வருகிறேன் என்று உதயகுமாரனிடம் சொல்லிவிட்டு உள்ளே போனாள் அல்லவா? அது அவள் தானாகச் செய்ததல்ல. அங்கே கந்திற்பாவையின் பக்கம் சங்கத்துப் பெண் அங்கத்தினருள் ஒருத்தி இருந்து ஒரு விசித்திர சமிக்ஞை செய்தாள். உடனே மணிமேகலை உள்ளே போய் அவளிடம் நின்றாள். அவள் ஓலைநறுக்கு ஒன்றை அவளுக்கு மட்டும் தெரியக் காண்பித்தாள் அதில் ''பேசியது போதும், காயசண்டிகை வேடமணிந்து வெளியே போய் அன்ன

தானம் செய்து கொண்டிரு'' என்று எழுதப்பட்டிருந்தது. மணிமேகலை அப்படியே செய்தாள்.

''நல்லது இதைப்பற்றிய விஷயம் இவ்வளவுதானு?

''இவ்வளவுதான்!''

''சரி, நீர் என்னமோ புதுச் செய்தி, நிதானமாய்ச் சொல்லவேண்டும் என்று சொன்னீரே! அதற்காக அவசரக் கூட்டமும் கூடச் செய்தீரே! அந்த விஷயம் என்ன?

அதுவா! சொல்லுகிறேன்! சொல்லாமல் விட்டு விடுவேனு? அதற்காகத்தானே இந்தக்கூடமும்! இதோ சொல்லுகிறேன். கேளுங்கள்.

அறவணவடிகள் முதல் முதல் சில அதிசயக்கட்டிடங்களைக் கட்டுவதற்கும், சுரங்கப் பாதைகளை ஏற்படுத்துவதற்கும், சில இயந்திர சாதனங்களை அமைப்பதற்கும் உதவியாக வித்தியா விநோதன் என்னும் வித்தியாதரனை வித்தியாதர நாட்டிலிருந்து வரவழைத்தார். நமது நாட்டிலுள்ளவர்களும் அந்தவேலைகளைச் செய்யக்கூடுமானுலும் நமது செயல்மறைவாய் நடக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் அவனை வரவழைத்தார். அவனுடன் சில ஆயிரக்கணக்கான வித்தியாதரர்கள் வேலையாட்களாக வந்தார்கள். அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருக்கவில்லை. நாட்டில் அங்கங்கே சிறு வித்தியாதர கிராமங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். காவிரிப்பூம் பட்டினத்தைச் சார்ந்து இருந்தவர்கள் பௌத்தபிக்ஷுக்களின் வேஷம்போட்டுக்கொண்டார்கள். சிலர் பிக்ஷுக்களாகவும் ஆனுர்கள். வேலைகள் நடந்து கொண்டு வந்தன. அந்த வித்யாவிநோதன் மிகவும் நல்லவன், நாணயமானவன்; நன்ருக வித்தைகளை அறிந்தவன். ''சச்சந்தனுக்குக் கட்டியங்காரன் ஏற்பட்டது போலவும், ஜீவகவழுதிக்குக் குடிலன் ஏற்பட்டது போலவும் அவனுக்குத் துன்மந்திரி ஒருவன் ஏற்பட்டான். மகானுபாவன் அந்த மகானுபாவன் கூழைக்கும் பிடுபோடுவதில் கைதேர்ந்தவன். ஏறக்குறைய வித்யா

விநோதனுக்குச் சமமான தொழில் நுட்ப அறிஞன். அவனுடைய ஆஷாட பூதித்தனத்தை அறியாமல் வித்யாவிநோதன் தன் தொழிலுக்கு அவன் உதவியாயிருப்பான் என்னும் நோக்கத்துடன்தான் தன் நாட்டிலிருந்து வரும்போதே அவனேயும் கூட்டிவந்தான்.

சில ஆண்டுகள் ஒழுங்காக எல்லாம் நடைபெற்றன. மகானுபாவன் தன் வாலே ஆட்டவில்லே. ஆனல் எத்தனே நாளேக்குத்தான் வாலே ஆட்டாமல் இருக்க முடியும்? வேலேத்தொந்தரவாலும், சந்தர்ப்பம் கிடைக்காததாலும் அவன் வாலே ஆட்டாமல் வைத்திருந்தான். ஒருநாள் வாய்ப்புக்கிடைத்தது. வாலே ஆட்டத்தொடங்கி விட்டான்.

"ஏது! ரொம்ப சுவாரசியமாயிருக்கிறதே! எப்படி வால் ஆட்டத் தொடங்கினன்?" சில வருஷங்களுக்கு முன்னல் நாக நாட்டரசன் மகள் பீலிவளே என்பவள் காவிரிப்பூம் பட்டினத்துச் சிறப்புக்களேப்பற்றிக் கேள்விப் பட்டு, அந்த நகரத்தைத் தான் பார்க்க விரும்புவதாகத் தன் தகப்பனரிடம் அறிவித்தாள். இந்தப்பிரமாத காரியத்துக்கு "ஊர்கூடி செக்குத்தள்ளுவதுபோல," அரசாங்க அலுவல் ரீதியில் தான் தன் குடும்பத்தோடு செல்லவிரும்பாத அவ்வரசன், இரகசியமாகத் தன் மந்திரிகளுள் ஒருவனேத் துணேக்குச் சிலகாவலருடன் அனுப்பிச் சாதாரணப் பணக்காரக் குடும்பத்தார் சுற்றுப் பிரயாணம் செய்யும் பாவனேயில் அவளே இவ்வூருக்கு அனுப்பிவைத்தான். அவள் இவ்வூரில் விடுதி ஒன்று ஏற்படுத்திக்கொண்டு, சிலநாள் தங்கி ஊரைச் சுற்றிப் பார்த்துவரலானுள். அப்போது அவள் ஒருநாள் மாலேப் போதில் இவ்வூரில் கடற்கரையை அடுத்துள்ள பூந் தோட்டத்தின் அழகைப்பார்க்கச் சென்ருள். துணேக்குப் பெண் ஒருத்தியும் இருகாவலரும் சென்றனர், அதே நேரத்தில் மகானுபாவன் தன் நண்பன் ஒருவனுடன் அந்தச்சோலேயில் கொஞ்சநேரம் தங்கியிருந்து விட்டுச் செல்லும் நோக்கத்துடன் வந்தான். அவன் பீலிவளே யையும் அவளுடன் வந்தவளேயும் கண்டான். மகானு

பாவன் அவனிடம் பீலிவளையைக் காட்டி அவள் எனக்கு! இன்னொருத்தி உனக்கு! என்ன சொல்லுகிருய்? என்ருன் "ஓகே!" என்ருன் மற்றவன்.

பீலி வளையோடு வந்த காவலாளிகள் மரியாதைக் காகக் கொஞ்சம் தூரத்திலிருந்துகொண்டு தங்கள் ஒரு கண்ணை அவள்பேரில் வைத்துக்கொண்டும், மற்ருெரு கண்ணைத் தங்கள் சொந்த அலுவல்களுக்கு உபயோகித் துக் கொண்டும் இருந்தனர். அப்போது அவர்களுக்குத் தெரியாமல் பூச்செடிகளின் பின்னே மறைந்து மறைந்து சென்று அவர்களுக்குப் பின்புறமாக வந்து மகானுபா வன் ஒருவனுடைய தலையிலும், அவன் நண்பன் மற் ருெருவனுடைய தலையிலுமாகத் தங்கள் கையில் தயா ராக வைச்சிருந்த சிறு கட்டைகளால் ஓங்கி அடித்தார் கள். உடனே இரண்டு காவலாளிகளும் மூர்ச்சையாகி விட்டார்கள். அப்படியே அவர்களை அங்கிருந்த கொடி களால் கட்டி ஒரு மூலைக்கு இழுத்துக்கொண்டு போய் அங்கே இருந்த இலைதழைகளால் அவர்களை மூடினர்கள். பிறகு பெண்களைக் கவனிக்கலானர்கள். அவர்கள் அங் கிருந்து கொஞ்சதூரம் அப்பாற் சென்றதும், அங்கே பீலி வளையோடு வந்திருந்த பெண் தனியாய் ஓரிடத்தில் பூப்பறிப்பதை இருவரும் கண்டார்கள். மகானுபாவன் "இதுவும் நல்லதே! நண்பா, உன் காரியத்தை நடத்து! நான் என்னுடையவளைத் தேடிப்பிடித்துக்கொள்ளு கிறேன்!" என்ருன். நண்பன் தன் புள்ளியை நோக்கிப் போய்விட்டான். மகானுபாவன் பீலிவளையைத் தேட லானன்.

அங்கே இங்கே தேடி ஒரு கொடி வீட்டை அடைந் தான். அங்கே அவள் நின்றுகொண்டு மறைவில் யாரோ ஒருவனுடன் பேசுவதுபோலப் புலப்பட்டது! இன்னும் கொஞ்சம் பக்கத்தில் போய்ப் பார்ப்போம் என்று அங்கே போகப்புறப்பட்டான். அவன் இரண்டடி எடுத்து வைத்ததும், அங்கே புதர் மறைவில் இருந்த காவலர் இருவர் தங்கள் ஈட்டிகளைக் குறுக்கே நீட்டித் தடுத்து, "போகாதே! அரசர் இருக்குமிடம்! யாரையும்

வரவிடக்கூடாதென்று உத்தரவு!" என்றனர். இடி விழுந்தது போலாயிற்று அவனுக்கு! அவளோடு பேசுப வர் அரசர் கிள்ளிவளவரா! இனித் தன் ஜம்பம் அங்கே ஒன்றும் சாயாது! என்று பேசாமல் திரும்பிச் சென்றான் அவன். அதே சமயத்தில் அவன் நண்பனும் ஏமாற்ற மடைந்து அவனிடம் வந்து சேர்ந்தான்.

மகானுபாவனுக்குக் கோபம் மூக்குக்கு மேல் வந்தது. அவன் நண்பனுக்கு அதற்கு மேலும் வந்தது. சினத் தைப் பயன்படுத்த முடியாத அந்த நிலை அதை மேலும் பல மடங்காக விருத்திபண்ணி விட்டது! இருவரும் உறு மிக்கொண்டே தங்கள் இருப்பிடம் போனார்கள். வேலை யில் கொஞ்சம் கிடைத்த சாவகாசம் அவர்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டது, உணவு இருக்கிற இடத்தை எலிமோப்பம் பிடித்து விட்டது. பிறகு அது சும்மா இருக்குமா, அதைத்தின்ன வேண்டும் என்று ஆசை. யாராவது வந்து விடுவார்களோ என்று அச்சம், அடிக்கடி வளையிலிருந்து உணவு இருக்குமிடத்தை நோக்கிப்போவது! யாருடைய காலடிச் சத்தமாவது கேட்டால் உடனே வளைக்குத்திரும்பி ஓடிவிடுவது! இப்படிச் செய்யுமல்லவா அந்தஎலி' அப்படியே மகானு பாவனும் செய்தான். அவள் விடுதியை மோப்பம்பிடித்து அறிந்தான். அங்கேசென்று அவளைப்பிடிக்க நோட்டம் போட்டான் அங்கே ஊர்ப்பட்ட காவற்காரர்கள்! தன் பாச்சா பலிக்காது என்று கண்டான். அவள் வெளியே போகுமிடங்களுக்கு இரகசியமாகப் பின்பற்றலானான். ஆனால் அவள் அன்று சோலையில் அரசனைக்கண்டு பேசியதிலிருந்து அந்தச் சோலையைத்தவிர வேறு இடங் களுக்கு அவள் செல்லுவதில்லை! சோலையில் அரசர் அவளுக்காகக் காத்திருக்கலானார். இருவரும் காதலர்கள் ஆகிவிட்டனர். அவளுடன் இருந்த மந்திரியும் அந்தக் காதலை அனுமதித்து விட்டார். ஒருமாத காலம் அந்தக் காதல் விநோதம் நடைபெற்றது.

ஒருமாதம் வேவுபார்த்தும் ஒன்றும் பலிக்கவில்லை. இனி எப்படியாவது முயன்று, அரசர் விரோதம் ஏற்பட்

டாலும் பரவாயில்லை அவளைக் கடத்திச்சென்றுவிட வேண்டும் என்று திட்டமிட்டான். அவன் இதைப் புத்தபிக்ஷு ஒருவன் எப்டியோ அறிந்து அறவணவடி களிடம் போய்ச்சொல்லிவிட்டான். அவர் இரகசியமாக இதை எப்படியாவது அடக்கிவிடவேண்டும் என்று தீர்மானித்தார். இரண்டாம் பேருக்குத் தெரியாமல் நாகநாட்டுமந்திரியைத் தம்மிடம்வரவழைத்தார். இரகசிய மாக மகானுபாவன் சங்கதியைத் தெரிவித்தார். "வீண் கலாட்டாவுக்கு இடமில்லாமல் பீலிவளையை நாகநாட் டுக்கு உடனே கொண்டுசென்று விடுங்கள்! அரசனுக்கு நான் சமாதானம் சொல்லிக்கொள்ளுகிறேன்,'' என்றார். பிறகு வித்தியாவிநோதனை அழைத்தார். நீ கொஞ்ச நாள் மகானுபாவனுக்கு விடுமுறை கொடுத்தது தவருக முடிந்து விட்டது. உடனே அவனைக் காரியமிருக்கிற தென்று உன்னிடம் வரவழைத்துக்கொள். ஏதாவது வேலை கொடு!" என்றார். அவனும் அப்படியே செய்ய, வேறு வழி இல்லாமல் மகானுபாவன் காஞ்சிக்குப்போக நேர்ந்தது. அவன் அங்கேபோய்ச் சேருவதற்குமுன்பே பீலிவளை நாகநாட்டுக்குப் போய்விட்டாள் என்னும் சங்கதியும் அவன் காதுக்கு எட்டிவிட்டது. என்ன செய்வான் அவன். அடிப்பட்டபுலியைப்போலச்சீறினன். வெறிபிடித்தவன்போல் இந்த அறவணவடிகளை என்ன செய்கிறேன் பார்! இந்த அரசன் கிள்ளிவளவனை என்ன செய்கிறேன் பார்! இந்தப் பீலிவளையை என்ன செய்கிறேன் பார்! இந்த வித்யாவிநோதனை என்ன செய் கிறேன் பார்! என்று உறுமினன். எல்லாம் தனக்குள்ளே இரகசியமாகத்தான்! வெளிப்படையாக அல்ல! அவன் வஞ்சினம் அவன் நண்பனுக்குக்கூடத் தெரியாது. இந்தக்காரியத்தை எப்படியாவது சாதிக்கவேண்டும். பூனைபோலப் பதுங்கிப் புலியைப்போலப் பாயவேண்டும். வலதுகை செய்வது இடதுகைக்குத் தெரியாமல் காரி யத்தை முடிக்கவேண்டும், என்று தனக்குள் உறுதி செய்துகொண்டான். சிலவருஷங்களாக அதற்காகப் பாடுபட்டு பல வேலைகள் செய்திருக்கிருன். தன்கருத்து இன்னதென்பதை யாருக்கும் அறிவிக்காமல், அறவண வடிகளுக்காகச்செய்யும் வேலைகளோடு வேலைகளாய்த்

தன் கருத்தை முடிக்கவும் சிலகாரியங்களைச் செய்திருக்கிறான். அவனுடைய நண்பன் அவனுக்காக இதில் பல வேலைகளைச் செய்திருக்கிறான். ஆனால் பாவம்! அவன் அறவணவடிகளுக்காகவே அந்தவேலைகள் என்று நம்பியிருக்கிறான். முந்தாநாள் அவர்கள் இரகசியக்கூட்டம் ஒன்று நடந்தது. அதில் அவன் மேற்கூறிய வரலாற்றைத் தன் அந்தரங்க நண்பர்களுக்கு அறிவித்துத் தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளத் தனக்கு உதவிபுரியவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். தான் அதற்காகச் செய்துள்ள ஏற்பாடுகளையும், அவர்கள் எப்படித் தனக்கு உதவிசெய்யவேண்டும் என்பதையும் தான் அடுத்த கூட்டத்தில் தெரிவிப்பதாகச் சொன்னான். கூட்டம் முடிவடைந்தது. நானும் அதைவிட்டு வந்துவிட நேர்ந்துவிட்டது!''

''இதையெல்லாம் எப்படி ஐயா கண்டுபிடித்தீர்கள் இளைய நம்பிகளே!''

''உம் ஞாபகமிருக்கட்டும். நான் மகானுபாவனுடைய அந்தரங்க நண்பர்களுள் ஒருவன். என்னிடம் வாலாட்டினீர்களோ, பத்திரம்! காவிரிப்பூம்பட்டினத்தை அழிக்கும் போது உங்களையும் அதோடு!''

''ஐயா நம்பியார் சுவாமிகளே! வேண்டாம்! வேண்டாம்! அபயம்! அபயம்! எங்களைக் காப்பாற்றும்!''

''பக்தர்களே, எழுந்திருங்கள்! அபயம் தந்தோம்!''

எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ''சரி, அறவணடிகள் அரசருக்கு என்ன சமாதானம் சொன்னார்?'' என்று கௌதமர் வினவினர்.

''என்ன சொல்லுவார்? ஒன்றும் சொல்லத்தோன்றவில்லை போலிருக்கிறது. ஒரு சாரணனை விட்டு அரசன் அவளுக்காக வந்து காத்திருந்து அவளைக் காணமல் துன்பமடைந்தபோது, என்ன காரணமோ தெரியவில்லை. அவள் திடீரெனத் தன் நாட்டிற்குப் போய்விட்டாள்.

அவள் இனி உமக்கு உதவமாட்டாள். ஆனால் அவளுக்கு ஒரு மகன் பிறப்பான். அவன் இன்னும் சில காலங் கழித்து உங்களிடம் வந்துசேருவான் !'' என்று சொல்லச் செய்தார் !''

''சரி, இப்போது இந்தச் சங்கதியை அரசனிடம் தெரிவிப்பதா, வேண்டாமா?''

''தெரிவித்துப் பயன் என்ன? அந்தக் குள்ள நரி மகானுபாவன் எப்படியாவது தப்பித்துக் கொண்டுவிட்டால் வந்தது நமக்கு ஆபத்து ! தவிர அவன் செய்துள்ள ஏற்பாடுகள் இவை என்று நமக்குத் தெரியவில்லை. அவற்றை தெரிவித்தால்தான் ருசு ஏற்படும்! அடுத்த கூட்டத்தில் போயிருந்து அவற்றை அறிந்துகொண்டு வந்து விடுகிறேன். ருசுவைக்காட்டுவோம் ! அபாயத்தை தவிர்ப்போம் மகானுபாவனையும் பிடிப்போம் ! எல்லாம் செய்வோம் !

''நல்லது, வணக்கம் ! எல்லாரும் பிரிந்து போவோமா !''

'' ஆகா ; அப்படியே ! நேரமாகிவிட்டது ! இனி நாம் பழமையைக் காண்போம்.

## 10. மிகவும் இரங்கத்தக்க செய்தி

உலக வறவியிலிருந்து உதயகுமரன் திரும்பிச் சென்றதிலிருந்து அவன் மனநிலை சரியாக இல்லை. ''அவள் தன்னைக் கண்டு பதறுகிறாள். அவளுடைய துடிப்பு அவளுக்குத் தன்னிடம் உண்மை அன்பு உண்டு என்பதைக் காட்டுகிறது. ஆனால் பேச்சு வேதாந்தமா யிருக்கிறது. இரண்டு வார்த்தை பேசினாள். இதோ வருகிறேன் என்று உள்ளே போனாள். வரவில்லை. அவளுக்குப் பதிலாக வேறொருத்தி வந்தாள். இதன் மர்மம் என்ன?'' இந்தக் கருத்து சும்மா பலதடவை அவன் மனத்துக்குள் எழுந்து அவனை அலைக்கழித்தது. சுய

மான மணிமேகலையின் தோற்றமும் காயசண்டிகையாக மாறிய மணிமேகலையின் தோற்றமும் மாறி மாறி அவன் மனக்கண்களுக்கு முன்வந்து நின்றன.

திடீரென ஒரு எண்ணம்! அப்போது வானத்தின் ஒரு மூலையில் கொஞ்சமாகக் காணப்பட்ட மேகக் கும்பலின் மத்தியில் ஒரு மின்னல் தோன்றிற்று. அந்த மின்னலைப் போலவே அந்த எண்ணமும் தோன்றியது. அடுத்தடுத்து மின்னிக்கொண்டிருந்தது அந்த மேகக் கும்பலில்! அதுபோல் அந்த ஆலோசனையும் அடுத் தடுத்துத் தோன்றிக்கொண்டிருந்தது. இப்படித் தோன் றியதனால் அந்த ஆலோசனை வலுப்பட்டது. அது என்ன ஆலோசனை? மணிமேகலையே காயசண்டிகை யாக மாறி வந்திருக்கவேண்டும். வேற்று வடிவம் எடுக் கும் மந்திரம் கற்றவள் அல்லவா அவள்! எண்ணம் நிலைத்தது.

"பார்த்துவிடுகிறேன்! போய்ப்பார்த்துவிடுகிறேன்! அரண்மனையில் தன் இருப்பிடத்தில் ஒரு மனையில் உட் கார்ந்திருந்த அவன் துள்ளி எழுந்தான். அவன் என் றைக்கு உலக அறவியில் அவளைக் கண்டானே, அதன் பின் மூன்றுநாள் கழித்து அவன் நிலை இப்படியாயிற்று. அந்த மூன்று நாளும் மேலே குறித்த இரண்டுங்கெட் டான் நிலைமைக்கு ஒரு முடிவு. மனம் கொஞ்சம் நிம்மதி யடைந்தது ஆனால் அது உடனே உலக வறவிக்குச் செல்லும்படி அவனைத் தூண்டியது. சீக்கிரமாக ஒரு குதிரையின்மேல் ஏறிக்கொண்டு அவன் உலக வறவியை அடைந்தான்.

உதய குமரன் தன்னை மறுபடியும் பார்க்க வருவான். அவன் எப்போது வருவான் என்று சொல்ல முடியாது! எப்போது வேண்டுமானாலும் வரக்கூடும். ஆகையால் எப்போதும் காயசண்டிகையாகவே இருந்துவிடுவது நல்லது என்று மணிமேகலைக்குப்பட்டது. ஆகவே அவள் திரும்பவும் சுயஉருவம் கொள்ளவில்லை. இடையில் ஒரு நாள் அரண்மனையைச் சார்ந்து இருந்த சிறைச்சாலை ஒன்றை அடைந்தாள். அங்கே சிறைப்பட்டிருந்த கைதி

களின் தீனமான நிலைமையைக் கண்டாள். உண்ணப் போதுமான உணவு இல்லாமலும், உடுக்கப்போதுமான உடை இல்லாமலும் அவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுவதைக்கண்டாள். அவள் மனம் இளகிவிட்டது." கையில் தான் அமுதசுரபி இருக்கிறதே! பின்னே ஏன் தயக்கம்? இதிலிருந்து இவர்களுக்கு நிறைய உணவு எடுத்துக் கொடுக்கலாமே!' என்று ஒரு எண்ணம் திடீரென்று அவளுக்கு உண்டாயிற்று. "அண்ணன்மாரே, தம்பி மாரே! பாவம்! போதுமான உணவு இல்லாமல் கஷ்டப் படுகிறீர்கள்! ஏன் இப்படிக் குற்றம் செய்தீர்கள்? பாவம் வயிற்றுக்கில்லை! திருடினீர்கள்! ஏதோ செய்தீர்கள்! இனிமேல் நீங்கள் உணவு இல்லையே என்று வருந்த வேண்டாம்! உலக அறவிக்கு வாருங்கள்! உங்களுக்கு வேண்டிய சாப்பாடு தருகிறேன்! இந்தாருங்கள்! இப் போது இதைச் சாப்பிடுங்கள்!" என்று சொல்லி அமுத சுரபியிலிருந்து உணவை எடுத்து எடுத்து எல்லாருக்கும் கொடுத்தாள். அங்கே இருந்த வாசல் காவலாளிகள் அதைப் பார்த்தார்கள்! சிறைச்சாலையிலிருக்கும் கைதி களுக்கு மற்றவர் வந்து உதவி செய்யலாமா? இந்த எண்ணம் அவர்களுக்குத் தோன்றவில்லை. அவள் அமுத சுரபியிலிருந்து உணவை எடுத்து கொடுத்துக்கொண்டே இருக்கிறாள். அதில் கொஞ்சமும் குறையாமல் உணவு அப்படியே இருக்கிறது. இந்த அற்புதம் அவர்களுக்கு அளவுகடந்த ஆச்சரியத்தை உண்டாக்கி விட்டது. இந்தாருங்கள் காவலாளிகளே! நீங்களும் சாப்பிடுங்கள் என்று அவள் அவர்களுக்கும் கொடுத்தாள். "ஆஹா! இந்த உணவு எவ்வளவு ருசியாய் இருக்கிறது!" என்று அந்தக் காவலாளிகள் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள்.

எல்லாருக்கும் உணவு கொடுத்து முடிந்துவிட்டது! இந்தச் சமயத்தில் ஒரு காவலாளிக்கு இந்தச் செய்தியை அரசரிடம் போய்ச்சொல்லாவிட்டால் என்ன நேருமோ!" என்ற எண்ணம் உதயமாயிற்று. உடனே அவன் ஓடோடியும் அரசனிடம் போனான். இரைக்க இரைக்க செய்தியைச் சொன்னான் " அரசே வாழ்க! உலக அறவி

யில் இருக்கும் வித்தியாதரப் பெண்ணொருத்தி கையில் பிச்சைப் பாத்திரம் ஒன்றை வைத்திருக்கிருள்! என்ன ஆச்சரியம்! அதிலிருந்து சோற்றை எடுக்க எடுக்க அது குறையாமல் வளர்ந்துகொண்டே இருக்கிறது! அவள் இன்று நமது சிறைச்சாலையிலுள்ள கைதிகள் எல்லா ருக்கும், எங்களுக்கும்கூட அந்தப் பாத்திரத்திலிருந்து உணவை எடுத்துக் கொடுத்தாள். இன்னும்கூடப் பாத் திரத்தில் உணவு இருக்கிறது!'' என்ருன் காவலாளி.

அரசன், "அப்படியா! நல்லது, அவளை இங்கே கூட்டிவா!'' என்ருன். காவாலாளி ஓடிப்போய் மணி மேகலையிடம், "அம்மா புண்ணியவதி! அரசர் உன்னை அழைக்கிருர். வாருங்கள் போகலாம்!'' என்ருன். மணி மேகலை ஒன்றும் பேசாமல் அவன் பின் நடந்தாள். அரசனை அடைந்தாள். அரசன் அவளை உட்காரச் சொல்லி மரியாதை செய்து அம்மா! இந்தப் பாத்திரத் தின் பெருமையைக் கேள்விப்பட்டேன்! உங்கள் அன்ன தானத்தைப் பற்றியும் கேள்விப்பட்டேன். இந்தப் பாத் திரம் உனக்கு எப்படிக் கிடைத்தது?'' என்ருன். அவள் கதையை யெல்லாம் அளப்பதில் பயன் என்ன என்று எண்ணிச் சுருக்கமாக, உலக அறவியிலுள்ள ஒரு தெய் வம் எனக்கு இதைக் கொடுத்துத் தருமம் செய்துகொண் டிருக்கும்படி சொல்லிற்று'' என்ருள். பிறகு அவள் "இந்தச் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றி விடுங் கள்'' என்று வேண்டிக்கொண்டாள். அரசனும் அப்ப டியே செய்தான். சிறைக் கோட்டம் அறக்கோட்டம் ஆயிற்று.

தன் இடத்திற்குத் திரும்பி வந்தாள் மணிமேகலை. முன்போல் தன் வேலையைக் கவனிக்கலானுள். இந்தச் சமயத்தில் உதய குமரன் அங்கே வந்து சேர்ந்தான். அவனை முந்திக்கொண்டு காஞ்சனன் என்னும் வித்தியா தரன் ஒருவனும் அவ்விடத்தை வந்து அடைந்தான். அவன் முன்னம் யானைத்தீ என்னும் நோயால் வருந்திய காயசண்டிகை என்பவளது கணவனுவான். அந்த நோய் தீரப்பெற்றுச் சென்ற அவள் அவனிடம் போய்ச்சேர

வில்லை. அவள் சாபம் தீர்ந்து நோய் சொஸ்தமாவதற் குரிய காலம் தீர்ந்திருக்க வேண்டும்! இன்னும் ஏன் அவள் வரவில்லை என்று சிந்தித்தான். அவள் உலகவற வியில் இருந்தது அவனுக்குத் தெரியுமாகையால் அங்கே போய்ப் பார்க்கலாமென்று வந்தான்.

வந்தவன் காயசண்டிகை உருவில் இருந்த மணி மேகலையை காயசண்டிகை என்றே எண்ணிவிட்டான். மனைவியை நெருங்குவதுபோல அவளை நெருங்கினான். அவளிடம் வார்த்தையாடுவதுபோலவே வார்த்தையாடி னான். மணிமேகலை என்ன செய்வாள்! ஏதாவது பேசு வதைவிடப் பேசாமலிருப்பதே நலம் என்று எண்ணி அப்படியே இருந்தாள்.

நிற்க, உதயகுமரன் காயசண்டிகையாகிய மணி மேகலையைப் பார்த்தான், "நிச்சயமாக இவள் மணி மேகலைதான். நம்மை ஏமாற்றுவதற்காக இந்த வேடம் அணிந்திருக்கிறாள். இவள் ஏன் இப்படிச் செய்ய வேண்டும். இப்போதும் இவள் நம்மைக் கண்டதும் தடுமாறுகிறாள். நம்மை வெறுத்துத் தள்ளவில்லை! உள்ளன்பு இருப்பது நிச்சயமாகிறது. பின் ஏன் வந்து வார்த்தையாடாமலிருக்கிறாள்? மணிமேகலா தெய்வத் தின் கட்டுப்பாடா? அப்படி என்று ஒரு வார்த்தை சொல்லிவிடட்டுமே! முன்னே வந்தபோது ஞானோப தேசம் செய்தாள்! இப்போது என்ன உபதேசம் செய் கிறாள் பார்க்கிறேன்! நெருங்கி வார்த்தையாட முயல்கிறேன்!"

இப்படி எண்ணிக்கொண்டு அவளை நெருங்கினான். இவன் யார் நம் மனைவியோடு பேச முற்படுகிறவன்? இங்கே வந்து இவள் நடத்தை கெட்டுவிட்டாளோ? இருந்தாலும் இருக்கலாம்! பௌத்த சங்க முனிவர்கள் இருக்கை, தீய நடத்தை ஏற்படாது என்று நாம் விட்டுச் சென்றோம். இவன் அரசகுமாரன் போலக் காணப்படு கிறான்! அதனால்தான் அச்சமில்லாமல் இச்செயல் செய் யத் துணிந்திருக்கிறான். அரசகுமாரனானால் நமக்

கென்ன! இவன் மட்டும் வாலை ஆட்டட்டும் ஒட்ட நறுக்கிவிடுகிறேன்!" இவ்வாறு சொல்லி உறுமிக் கொண்டு அங்கே ஒருபுறம் தனித்து நின்று கவனிக்க லானுன்.

உதயகுமரன் மணிமேகலையை நெருங்கினுன். ஒன் றும் பேசாமலிருப்பது மரியாதையல்ல! அதனுல் அவள் அவனைப்பார்த்து முன்போலவே ஞானுேபதேசம் செய் வாளாய், "மன்னவன் மகனே, பூவாலும், சந்தனத்தா லும் துர்நாற்றத்தை மறைத்தும், ஆடையாலும் அணி கலன்களாலும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்படிச் செய்தும், உடலினது இழி நிலைமையை மறைத்து வஞ் சனையாக நம் கருத்து அவ்வுடலில் ஈடுபடுமாறு செய்யப் பட்டிருக்கும் தன்மையை நீ அறிந்துகொள்வாயாக!'' என்ருள்.

மறைந்து வேவு பார்த்து நின்ற காஞ்சனன் இந்தச் சொற்களைக் கேட்டான். "இவள் இவனிடம் வேதாந் தம் பேசுகிருள். ஏன்? நான் இங்கே வந்திருப்பதை இவள் அறிவாள். நம் எதிரில் இவனுடன் இணக்க மாய்ப் பேசுவாளா? வேதாந்தம் பேசுவதுபோல் பேசி இவனிடம் குறிப்பாய் நமது வருகையை அறிவிக்கிருள். நல்லது, இன்னும் என்ன நடக்கிறது என்று பார்ப் போம்!'' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு மேலும் கவனிக்கலானுன் அவன்.

உதயகுமரன் அவள் வேதாந்தத்தைக் கேட்டான். மீண்டும் வேதாந்தமா! ஏன் தெளிவாய்ப் பேசி, நிலை மையை விளக்கித் தன் தீர்மானத்தை எடுத்துக்கூறக் கூடாது? மணிமேகலா தெய்வத்தின் பேரால் வேறு வலிமையுடையவர்கள் இவளைக் கட்டுப்படுத்துகிருர்கள்! சொல்ல முடியாமல் மென்று விழுங்குகிருள் இவள். நல்லது; இப்போது பகல், வெளிப்படையாய் இவளைக் கொண்டுசெல்லும் வல்லமை எனக்கு உண்டு என்ருலும் அப்படிச் செய்வது கேவலமாகும். இன்று இரவு இங்கு வந்து எப்படியாவது இவளைக் கொண்டு செல்கிறேன்''

என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

அவன் மனத்துள் மேற்கண்ட எண்ணம் ஓடிக் கொண்டிருக்கையில் அதற்கேற்றபடி அவன் உடலி லும் சில அசைவுகள் தோன்றின. முகத்திலும் அதற் குரிய குறிகள் தோன்றலாயின. இந்த அசைவுகளையும் குறிகளையும் கண்டான் காஞ்சனன். இவன் போகும் விதத்தைப்பார்த்தால் ஏதோ தீர்மானம் செய்துகொண்டு போவதுபோல் காணப்படுகிறது. இவன் இவளை விடப் போவதில்லை. இவள் பேசிய பேச்சுக்களின் குறிப்பு "இப்போது ஒன்றும் பேசாதே; பிறகுவா பார்த்துக் கொள்ளலாம்!" என்பதுபோலும் இவன் பிறகு எப்போது வருவான்? ஏன் சந்தேகமில்லாமல் இரவில்தான்! இரவில் இவன் வரட்டும்! பார்க்கிறேன் ஒருகை!" என்று எண்ணிக்கொண்டு அவ்விடம் விட்டுப்போனான்.

இரவாயிற்று. எங்கும் ஓசை அடங்கிற்று. மெல்லப் புறப்பட்டான் உதயகுமாரன். "துணைக்கு யாரையாவது அழைத்துக்கொள்வோமா? துணை எதற்கு நமக்கு? அவளைத் தூக்கிவர என்னால் முடியாதா? என்று எண் ணிக்கொண்டு தனியாகச் சென்றான். காஞ்சனன் இரவில் சற்று முன்னேரத்திலேயே அங்கே போனான். அங்கே எல்லாம் அமைதியாக இருந்தது. சரி, இன்னும் அவன் வரவில்லை. சாதாரணமாக அவன் நள்ளிரவில் வரலாம். அதற்கப்புரமும் கொஞ்ச நேரம் வரையில் இருந்து பார்க்கிறேன். வந்தால் ஒரே வெட்டு. வரா விட்டால் போகட்டும். எப்படியும் என் மனைவியை நான் இன்று கொண்டுசென்று விடுகிறேன்!" என்று தனக்குள் எண்ணிக்கொண்டான். எலியை எதிர்பார்த்துப் பூனை பதுங்கியிருப்பதுபோல் அங்கோரிடத்தில் பதுங்கியிருந் தான்.

உதயகுமாரன் விரைவாக நடந்துவந்தான். வழியில் எல்லாம் அமைதி! உலகவறவிக்குள் நுழைந்தான். அங்கே ஒரு தூண்மறைவில் உருவியவாளுடன் தயா

ராய்க்காத்திருந்த காஞ்சனன் ஒரே வெட்டில் அவன்தலே வேறு உடல் வேறு ஆக்கிவிட்டான். ஆயிரம் பேரை வெட்டி வீழ்த்தி வீரச்சங்கை ஊதவல்ல உதயகுமாரன் கொஞ்சமும் எதிர்பாராவகையில் இப்படி அநியாயமாய் இறந்து பட்டான். மணிமேகலே அதற்குள்தான் ஓரிடத்தில் படுத்திருந்தாள். பகலில் அரசகுமாரனுடன் பேசிய செய்தி அவள் மனத்தை அலேக்களித்தது. அன்பு ஒருபுறம். எடுத்துக்கொண்ட மனவுறுதி ஒருபுறம். இரண்டும் எதிரெதிர்த் திசைகளில் அவளே இழுக்கலாயின. தூக்கமில்லாமல் படுத்துப் புரண்டுகொண்டிருந்தாள். காஞ்சனன் வெட்டிய சத்தத்தையும், உதயகுமரன் உடல் தொப்பென்று கீழே விழுந்த சத்தத்தையும் அவள் கேட்டாள். உடனே எழுந்து என்ன சங்கதி என்று அறிய ஓடிவந்தாள்.

உதயகுமாரன் உடல் கீழே துடித்துக்கொண்டிருந்தது. "ஆ" என்று அலறிக் கீழேவிழுந்து மூர்ச்சையானுள். காஞ்சனன் அவளேத் தூக்கிக்கொண்டுபோக எண்ணி அவளே நெருங்கினுன். அப்போது அங்கே ஒரு தூணில் பிரதிஷ்டிக்கப்பட்டிருந்த கந்திற்பாவை என்னும் தெய்வம் அவனே நோக்கி, "காஞ்சன! தொடாதே அவளே!" அவள் உன்மனேவி அல்ல! மணிமேகலே! அவள் ஒரு காரணத்திற்காக உன் மனேவியின் உருவத்தை எடுத்துக் கொண்டாள். உன்மனேயியின் செய்தியைச் சொல்லுகிறேன் கேள்; அவள் அமுதசுரபியிலிருந்த உணவை உண்டதும் அவளுடைய நோய் பறந்துவிட்டது உடனே அவள் உன்னிடம் வருவதற்கு இங்கிருந்து புறப்பட்டாள். வானத்தின் வழியாகப் பிரயாணம் செய்துகொண்டிருந்தாள். வழியில் விந்தியமலே குறுக்கிட்டது. அம் மலேயில் விந்தாகடிகை என்னும் பெயரையுடைய பெண் ஒருத்திஇருக்கிருள். அவள் அம்மலேமேல் வான்வழியாகச் செல்லுகிறவர்களே, அவர்களுடைய நிழாலால் பிடித்து இழுத்துச் சாப்பிட்டு விடுவாள். அதனுல் ஆகாசத்தின் வழியாகப் பிரயாணம் செய்கிறவர்கள் அந்த மலேயின் மேல் பறக்கமாட்டார்கள். சற்று அப்பால் சுற்றி வளேத்துப் பறந்து போவார்கள் உன் மனேவிக்கு அவளேப்பற்

றிய செய்தி தெரியாது. அதனுல் அவள் அம்மலேயின் மேல் நேராகப்பறந்து சென்ருள். உடனே விந்தாகடிகை அவளேப் பிடித்து இழுத்துச்சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டாள். நீ கொஞ்சமும் ஆலோசியாமல் அரசகுமாரனேக் கொன்றுவிட்டாய்! இந்தப் பாபம் உன்னேவிடாது தொடர்ந்து துன்பம் செய்யப்போகிறது! இன்னும் இதற்கு மேலும் பாவம் செய்யாதே! மணிமேகலே கிட்டப் போகாதே! போ! உன் ஊருக்குப் போய்ச் சேர்!'' என்றது.

காஞ்சனன் திடுக்கிட்டான். "ஆராயாமல் முன் கோபத்தால் அரசகுமாரனேக் கொன்று விட்டோம். உடனே இங்கிருந்து ஓடிவிடவேண்டும். இல்லாவிட்டால் அரசகாவலர் வந்து பிடித்துக்கொண்டு விடுவர். விசாரணேயில் நாம் செய்தது தவறு என்று ஏற்படும். அப்புறம் உயிருக்கு ஆபத்து. ஆகையால் ஓடி விடுவதே சரி!'' என்று எண்ணிக்கொண்டு ஓடிவிட்டான்.

இதற்குள் உலகவறவியிலுள்ள முனிவர்களுக்கு உதயகுமாரன கொலே செய்யப்பட்டான் என்ற சங்கதி தெரிந்துவிட்டது. அரசனிடம் சமயம் பார்த்துப் பக்குவமாக இந்தச் சங்கதியை எடுத்துச் சொல்லவேண்டும். ஆகையால் இந்த அரசகுமாரனுடைய உடலே இங்கேயே ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் ஒளித்துவைப்போம். நாளேக் காலே அரசனிடம் போய்ச் சங்கதியைப் பக்குவமாய் அறிவிப்போம்!'' என்று தங்களுக்குள் தீர்மானித்து அப்படியே செய்தார்கள்.

மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்தாள் மணிமேகலே. தன்னே விரும்பிவந்து அநியாயமாய் இறந்தான் தன் அன்பிற்குரியவன். மனவுறுதி தளர்ந்துவிட்டது அவளுக்கு! துக்கம் தாங்காமல் புலம்பலானுள். "ஆ! காதலா! என் உயிரே, இறந்தனேயோ! உன் துன்பத்தை ஒழிக்கவே நான் காயசண்டிகை வடிவானேன்! அப்படியிருந்தும் விதி சதிசெய்துவிட்டதே! பாவி அந்த வித்யாதரன் இப்படிச் செய்வான் என்று கனவிலும் நான் கருத

வில்லையே! என் வடிவமே உனக்கு இந்தக் கதியை உண்டாக்கிற்று! நான் பாவி! மகாபாவி! என்று புலம்பினுள். "இனிப் புலம்பி என்ன பயன்? நடந்தது நடந்துவிட்டது. ஐயோ! என் உருவம் அவருடைய சாவுக்குக் காரணமாக வேண்டுமா! எல்லாம் விதி! அதன் பாழாய்ப் போன விளையாட்டு!" என்று எண்ணி விம்மலானுள். அப்போது முனிவர்கள் அங்கே வரவே எழுந்து ஒதுங்கிச் சென்றுவிட்டாள்.

# 11. மகானுபாவன் வேலைகள்

புதுமை விரும்பும் நமது ஐக்கியமுன்னணித் தோழர்கள் அவரவர்களின் அவசர வேலையின் நிமித்தம் அரை மணி காலதாமதமாகக் கூடினர்.

"என்ன இளைய நம்பிகளே! இன்றைக்கு மகானுபாவன் வேலைகளைப்பற்றி நீங்கள் தெரிவிக்கவேண்டுமே, ஏதாவது அறிந்து வந்திருக்கிறீர்களா?"

"ஓய் கௌதமரே, உம்மால் இன்றைக்குக் கூட்டம் அரை மணி நேரம் தள்ளிப்போடவேண்டி வந்துவிட்டதே, அது ஏன்?"

"காரணமிருக்கிறது சொல்லுகிறேன். முதலில் பிரபாகரே, நீர் உமது செய்தியைச் சொல்லும்!"

"என் செய்தியா? அரசருக்கு இன்று நாகநாட்டிலிருந்து ஒரு செய்தி எட்டியிருக்கிறது. அன்றைக்குப் பீலிவளையைப்பற்றிச் சொல்லப்பட்டதல்லவா? அந்தப் பீலிவளை தன் மகனை அரசனிடம் அனுப்பிவைத்திருக்கிருள். நாகநாட்டிலிருந்து ஒரு கப்பல் அவனை ஏற்றிக் கொண்டுவருகிறது! அந்தக் கப்பலின் பெயர் **தண்ணீர்ப் பாம்பு!**

"என்ன? தண்ணீர்ப்பாம்பா? சரிதான்! நான் அந்த ஏற்பாடு செய்ததும் நல்லதாயிற்று!" என்ருர் இளைய நம்பிகள்.

"என்ன ஏற்பாடு செய்தீர்?

"நான் மகானுபாவனுடைய கூட்டத்திற்குச் சென்றிருந்தபோது அவன் காவிரிப்பூம்பட்டினத்தை நோக்கி வந்துகொண்டிருக்கும் தண்ணீர்ப்பாம்பு என்னும் கப்பலை டார்ப்பிடோ மூலம் உடைக்க உத்தரவிட்டுக்கொண்டிருந்தான். அப்படி ஒரு கப்பலின் பெயர் இருக்குமா? அது எந்தநாட்டுக்கப்பல் என்று ஆலோசனை செய்தேன். ஒன்றும் புலப்படவில்லை. எதுவாயிருந்தால் நமக்கென்ன? இந்த மகானுபாவன் செய்கிற கெட்டகாரியம் நமக்கு இப்போது ஒன்று தெரிய வந்திருக்கிறது. அதைத் தவிர்க்கவேண்டும். உடனே துறைமுகத்துக்கு ஓடும்படி மோட்டார் சைக்கிள் ஒன்றைக்கொடுத்து என் ஆள் ஒருவனை அனுப்பினேன். அங்கிருந்து அறவணவட்டிகளுக்கும் வித்யாவிநோதனுக்கும் அந்தச்சங்கதியை "வயர்லெஸ்" செய்ய ஏற்பாடு செய்யச்சொல்லியிருக்கிறேன்!

"பலே நல்ல வேலை செய்தீர்! நான் என் சங்கதியை இப்போது செரல்லுகிறேன்," என்று ஆரம்பித்தார் அகோரம். மணிமேகலைக்குச் சிறைச்சாலையைப்போய் அடைந்து அமுதசுரபியைக்கொண்டு தருமம் செய்யும்படி உத்தரவு அனுப்பப்பட்டது. அவள் முகத்தில் தயக்கம் காணப்பட்டது உத்தரவைக்கொண்டுவந்த பெண், என்ன தயங்குகிறாய்? அமுதசுரபியிலிருந்து எடுக்கஎடுக்க உணவு வரவேண்டுமே என்று பார்க்கிறாயா? அதற்கெல்லாம் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது! என்றாள்.

மணிமேகலை போனாள். அங்கிருந்த ஒரு காவலன், வாங்க அம்மணி! இங்கே குந்துங்க!" என்று சொல்லி ஒரு இடத்தைக்காட்டினான். அது சிறைச்சாலையின் ஒரு மூலையிலுள்ள இடம். அதற்குப்பக்கத்தில் ஒரு அறை இருந்தது. அங்கே கீழே சுரங்கவழி சென்றது. அங்கே பாத்திரத்தை வைப்பதற்கு ஒரு மேடை இருந்தது. "அம்மணி, இங்கே இருந்துகொண்டு அறம் செய்யுங்கள்" என்று அக்காவலன் சொன்னான். உடனே மணிமேகலை செய்தியை ஊகித்துக்கொண்டு விட்டாள்.

முன்னே அவளிடம் பேசிய காவலன் அதற்குள் சிறைச் சாலையின் உள்ளேபோய் மணிமேகலை அன்று அங்கே இருப்பவர்களுக்கு உணவு அளிக்கும் செய்தியைத் தெரிவித்து விட்டு வந்தான். உடனே சிறையிலுள்ள கைதிகள் எல்லாரும் அங்கே வரவழைக்கப்பட்டார்கள் காவலாளிகள் அவர்களைக் காவல் காத்துக்கொண்டு நின்ருர்கள். மணிமேகலை அடிக்கடி அந்த மேடையில் பாத்திரத்தை வைத்தாள். அவர்கள் முன்னிலையிலேயே தட்டில் உணவு நிறைந்தது. அதை எல்லாருக்கும் கொடுத்தாள்.

எல்லாம் முடிந்ததும் அவள் அரசனிடம் சென்ருள். அவள் அங்கே போகும்படி அவளுக்கு மேலிடத்து உத்திரவு அனுப்பப்பட்டது. அங்கே பேசவேண்டிய செய்திகளும் அந்த உத்திரவில் குறிக்கப்பட்டிருந்தன. அவளும் அங்கேபோய் அப்படியே பேசினுள். அரசன் அந்தச் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றினுன்! என்று தம் பேச்சை முடித்தார் அவர்.

"சரிதான் அமுதசுரபிக்கு ஒரு பெருமையும், மணிமேகலைக்கு ஒரு பெருமையும் தேடித்தரப்பட்டுள்ளன. மேலும் பௌத்த சங்கத்தார்களைப் போன்ற நல்லவர்கள் கிடையாது. அந்த மதம் உண்மையில் உயர்ந்ததுதான், என்னும் சங்கதி உலகில் கொஞ்சம் அதிகமாகப்பரவ ஏற்பாடாகியிருக்கிறது. அது போகட்டும்! உமது செய்திகளைத் தெரிவியும் நம்பிகளே!" என்ருர் கௌதமர்.

"நான் கொஞ்சம் சாவகாசமாகச் சொல்லவேண்டும். உங்கள் செய்தியைச் சொல்லும் கௌதம முனிவரே! உமது காலதாமதத்திற்குக் காரணம் சொல்ல வேண்டும்! நினைவிருக்கிறதா ?"

"ஆகா! நன்ருக நினைவிருக்கிறது! சொல்லுகிறேன். அது திடுக்கிடும் செய்தி. கேட்கத் தயாராகுங்கள்! இளவரசர் உதயகுமார் கொல்லப்பட்டு விட்டார்?"

"என்ன கொல்லப்பட்டுவிட்டாரா? யாரால்? எங்கே! எப்படி? எப்பொழுது? ஒரு சந்தடியும் காணுமே! என்ன காரணம்? உங்களுக்கு இது எப்படித் தெரிந்தது?"

"அப்பா ஒரு மூச்சில் இத்தனே கேள்விகளா! நல்லது எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்!

நாம் அவருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினேம் அல்லவா? அதாவது காயசண்டிகையாக வந்தது மணிமேகலேதான்; அவள் போட்டது வேஷம் என்று அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் துள்ளி எழுந்தார். பறந்தோடி வந்தார் உலக அறவிக்கு. அப்போதும் மணிமேகலே காயசண்டிகை வேடத்தில்தான் இருந்தாள். கூர்ந்து கவனித்தார் அவளே! விஷயம் விளங்கிவிட்டது. உடனே நெருங்கிப்பேச ஆரம்பித்தார் அவள் வழக்கம் போலவே வேதாந்தம் பேசினுள். அங்கே கும்பல் அதிகமில்லே; ஆனுலும் பகல். பலவந்தமாய்க் கொண்டு சென்ருல் எதிர்ப்புக்கள் வரும். ஆகவே பேசாமல் போய்விட்டார். பிறகு இரவில் வந்தார். அவரைப் பார்த்ததும் ஒருவன் கட்டிடத்திற்குள் இருந்த ஒரு தூண் மறைவில் பதுங்கினுன். அவன் யாரென்று அடையாளம் தெரியவில்லே. முகமூடி அணிந்திருந்தான் அவன்.

இளவரசன் அந்தத் தூணின் பக்கம் போனுனே இல்லேயோ, ஒரேவெட்டு தலேவேறு உடல்வேறு ஆகிவிட்டது. முகமூடியைக் கழற்றினுன் அவன். வெட்டினவன் காஞ்சனன். காயசண்டிகையின் கணவன் தன் மனேவியைக் கெடுக்க முயன்றதால் அவன் வெட்டிக் கொன்ருன் என்று நம்பும்படி செய்யப்பட்டிருக்கிறது. உண்மையை யார்கண்டார்கள். இரண்டுநாளேக்கு முன்னமேயே அவன் வந்துவிட்டான். அவர்கள்தான் அவனே வரவழைத்து இப்படிச் செய்திருக்க வேண்டும் என்பது என் ஊகம். பிறகு காஞ்சனன் உள்பக்கம் அடியெடுத்துவைத்தான். அப்போது அங்கே இருந்த

கந்திற்பாவை, மணிமேகலையின் பக்கம் போகாதே. அவள் உன் மனைவியல்ல; மனைவியின் வேஷத்தில் இருக்கும் மணிமேகலை!" என்றது. உடனே காஞ்சனன் திரும்பிப்போய்விட்டான்.

"காஞ்சனன் மணிமேகலையைக் கொண்டுபோகப் பார்த்தானே?"

"இருக்கலாம்! யார்கண்டார்கள்? நடு இரவு! ஒருவருமில்லை. மெதுவாகத் தான் அடித்துக்கொண்டு போய்விடலாம். தன் மனைவியின் வேஷத்தில் இருப்பதால் சரியான காரணமும் இருக்கிறது என்று எண்ணியிருக்கலாம்!"

"சரிதான் இருக்கும் இருக்கும்! ஆனல் சங்கத்தாரா விடுகிறவர்கள். கந்திற்பாவை வடிவத்தில் அவர்கள் நடப்பதை எல்லாம் கவனித்துக் கொண்டுதானே இருக்கிருர்கள்!"

"சரி இளவரசன் உடல் என்னவாயிற்று?"

"அதை மறைத்துவைத்திருக்கிருர்கள். விடியலில் முனிவர்கள் சிலர் போய்ப் பக்குவமாய் அரசருக்கு எடுத்துச்சொல்லப் போகிருர்களாம்!"

"இளவரசரை நம்மால் காப்பாற்ற முடியாமல் போயிற்றே! என்ன ஏமாற்றம்?"

"நாமும் கண்ணில் வத்தியை வைத்துக்கொண்டு தான் வேவுபார்த்து வருகிறோம். நமக்கும் தெரியாமல் சில சங்கதிகள் நடந்துவிடுகின்றன. அதற்கு நாம் என்ன செய்யலாம்? அது போகட்டும் உன் சங்கதியைச் சொல்லு!"

"மகானுபாவன் மகானுபாவன்தான்! அவன் என்ன சபதங்கூறினன் ஞாபகமிருக்கிறதல்லவா? இந்த அறவண வடிகளை என்ன செய்கிறேன் பார்? இந்த அரசனை என்ன செய்கிறேன் பார்! இந்தப் பீலிவளையை

என்ன செய்கிறேன் பார்? இந்த வித்யாவிநோதனை என்ன செய்கிறேன் பார்! என்று சொன்னான் அல்லவா? எல்லோரையும் ஒழிக்கச் சரியான திட்டம் வகுத்து விட்டான்!''

"என்ன! எல்லாரையும் ஒழிக்கவா! சரியான திட்டமா?''

"ஆம்! ஒரு திட்டம் வேலைமுடிந்து விட்டது. இன்னொரு திட்டமும் வேலைமுடிந்து விட்டதென்றே கூறவேண்டும்! மற்ற இரண்டு திட்டங்களும் வேலை முடியும் தறுவாயில் இருக்கிறது!''

"சரிசரி விளக்கமாகச் சொல்லும்!''

"முதல் திட்டம் வித்யாவிநோதனை ஒழிப்பது! அவன்தான் சிலநாள் தன் சொந்த நாட்டுக்கு அதாவது வித்யாதர நாட்டுக்குச் சென்றுவருவதாக அறவணவடிகளுக்கு ஒரு கடிதம் எழுதியதுபோல் பொய்க் கடிதம் ஒன்றைச் சிருஷ்டித்தான். அதை அறவணவடிகளுக்கு அனுப்பிவிட்டு, அவனைச் சிறைப்படுத்தித் தன்கீழ் இரகசியப் பாதாளக் கிடங்கு ஒன்றில் போட்டுவைத்திருக்கிறான்.

இரண்டாவது திட்டம் நாகநாட்டிலிருந்து "தண்ணீர்ப் பாம்பு'' என்னும் கப்பலில் பீலிவளை நமது அரசரிடம் வந்துகொண்டிருப்பதை அறிந்து அந்தக் கப்பலை அழிப்பது. அதற்கும் அவன் ஆள் அனுப்பியாகி விட்டது.

ஆனால் இந்த இரண்டு திட்டங்களுக்கும் எதிரிடையாக நான் வேலை ஏற்கனவே செய்தாகிவிட்டது.

இனி மூன்றாவது நான்காவது திட்டங்கள் புகார் நகரத்தையே தண்ணீரில் ஆழ்த்திவிடுவதும், அதன் மூலமாக அறவணவடிகளையும் அரசனையும் ஒழித்துவிடுவதுமாகும். இதற்குத் தக்கமாற்று ஏற்பாடு செய்யவே நான் இப்போது இங்கே வந்திருக்கிறேன்!''

"சரி, அவன் நமது ஊரை ஒழிக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிருன்? சீக்கிரமாகச் சொல்லும்!"

"அவசரப்பட்டுப் பயனில்லை! அவன் செய்திருப்பது பிரம்மாண்டமான ஏற்பாடு. நம்முடைய சக்தியோ மிகக் குறைவு!"

"சரி, அவசரம் வேண்டாம்! சாவகாசமாகச் சொல்லுங்கள்!"

"முன்னே அந்த மகானுபாவனை வித்யா விநோதன் அடக்கியபோது அவன் பூனை போலப் பதுங்கிவிட்டான். எப்போதும் கூழைக்கும்பிடு போட்டபடியும், எள் என்பதற்குமுன் எண்ணெய் என்று சொல்லும்படியும் தாசானுதாஞய் நடந்துகொண்டான். பாவம் அந்த நல்ல மனிதன் வித்யாவிநோதன் எல்லா வேலைகளையும் அவனிடமே ஒப்படைத்து விட்டான். புத்த சங்கத்தாருக்கு, இன்னும் மற்றவருக்கு அவர்கள் நிறையவேலைகள் செய்யவேண்டியிருந்தன. அவற்ருேடு அவன் தனக்கும் தன் சகாக்களுக்கும் வேண்டிய வேலைகளையும் அவர்கள் செலவிலேயே முடித்துக்கொண்டான். அவனுடைய முக்கியமான சகாக்கள் நமது ஊருக்கு மேற்கே சுமார் அறுபது மைல்தூரத்தில் காவேரிக்கரையிலும் அதன் கிளை நதிகள் இரண்டின் கரையிலும் இருக்கிருர்கள். வேறு சிலர் அவ்வளவு முக்கியமானவர்கள் அல்ல. அவர்கள் தூரத்தில் சேலம், கோயம்புத்தூர்ப் பக்கங்களில் இருக்கிருர்கள்.

சேலம் கோயம்புத்தூர்ப் பக்கத்தில் அவன் பெரிய நீர்த்தேக்கங்களை ஏற்படுத்திருக்கிருன். நீர்த்தேக்கங்கள் அவர்கள் அமைக்கச்சொன்னவை; ஆனல் அவற்றின் கரையை உடைத்துவிட்டால் அந்த நீர் காவிரியில் பாயும்படிச் செய்திருக்கும் இரகசிய ஏற்பாடு அவனுக்குச் சொந்தமானது. இப்படியே அங்கங்கே வேறு சிலஇடங்களிலும் இரகசிய ஏற்பாடோடு கூடிய நீர்த்தேக்கங்கள் உண்டு. எல்லா நீரும் காவிரியில் வடியும்படியாகவே செய்யப்பட்டுள்ளது. "இந்திரவிழாவை எக்காரணத்

தாலாவது செய்யாமல் நிறுத்தினுல் காவிரிப்பூம்பட்டினம் அழிந்துவிடும்! '' என்று ஒரு பேச்சுக்கூறப்பட்டு வருகிற தல்லவா? இந்திரவிழாவை எப்படியாவது நடத்தாமல் செய்துவிடவேண்டியது. அதுகாரணமாக ஊர் நீரில் மூழ்கிவிட்டது என்று நம்பும்படிதான் தன் நீர்த்தேக்கங் களில் தேக்கியுள்ள நீரை ஒரேயடியாகத்திருப்பி, அதைக் காவிரிப்பூம்பட்டினத்தை அழிக்கும்படி செய்துவிடவேண் டியது! இதுவே அவன் பெரிய திட்டம்!''

''அதெப்படி முடியும் தேக்கங்களின் நீரைக் காவேரி யில் திருப்பினுல் வழியில் வேறு இடங்களையும அது அழிக்கக்கூடுமே! காவிரிப்பூம்பட்டினத்தை மட்டும் அழிப் பது எப்படி?''

''அதற்காக இரகசிய ஏற்பாடு ஒன்று இருக்கிறதாம்! அது முடிய இன்னும் சில நாள் ஆகுமாம்! முடிவடையா மல் ஒன்றும் சொல்லக்கூடாது என்பதற்காக அவன் அதைப்பற்றி மட்டும் சொல்லவில்லை. ஆனுல் தன் ஏற் பாட்டினுல் காவிரிப்பூம்பட்டினம் அழிவது நிச்சயம் என்று மார்தட்டிப் பேசுகிருன்! அந்த ஏற்பாடுகளை அவன் அடுத்த கூட்டத்தில் பேசக்கூடும் என்று எண்ணு கிறேன்!''

''இந்தக் காஞ்சனன் அவனுடைய ஆளாயிருக்க லாமோ?''

''இருக்கலாமோ என்பதென்ன? நிச்சயமாக அவன் அவனுடைய ஆளேதான்!''

''உதயகுமாரனைக் கொன்றது அவன் ஏற்பாடாக இருக்குமோ?''

''இருக்கும்! இருக்கும்! ஆ! இப்போதல்லவா தெரிகிறது கருத்து! நிச்சயமாய் காஞ்சனன் அவ னுடைய ஆள்தான்! அவன் அனுப்பியே வந்திருக்கி ருன்!''

''என்ன திடீரென்று இப்படி ஞானேதயம்!''

"எப்படியாவது இந்திர விழாவை நிறுத்திவிடுவது அவன் எண்ணம் அல்லவா? அதற்காக அவன் இரண்டு ஏற்பாடுகள் செய்திருக்கிருன். ஒன்று உதய குமாரனைக் கொல்வது! மற்றொன்று பீலிவளையின் கப்பலை உடைப்பது. அந்தக் கப்பலை உடைத்து விட்டால், அவளும் அவள் குழந்தையும் அதாவது அர சன் குழந்தையும் மாண்டு போகிருர்கள். காதலி ஒருத்தி, குழந்தைகள் இரண்டு பேர் இறந்தார்கள் என்ருல் இந்திர விழா செய்யத் தோன்றுமா? அவன் அதைச் செய்யாமல் விட்டுவிடுவான். தன் ஏற்பாட்டின் படி வெள்ளம் உண்டாக்கி ஊரை அழித்துப் பழியை, இந்திரன் சாபம், மணிமேகலா தெய்வத்தின் சாபம் என்று அந்தச் சாபங்களின் தலையில் போட்டுவிட வேண்டியது!"

"சரி இப்போது நாம் இதற்குத் தக்க மாற்று ஏற் பாடு செய்யவேண்டும்! ஒன்றைத் தவறவிட்டுவிட்டோம் உதயகுமரனைக் காக்கமுடியாமற் போய்விட்டோம்! மற் றவைகளையாவது நடக்காமல் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்!" சரி, நீர் என்னமோ முதல் இரண்டு திட் டங்களைக் குலைக்க ஏற்பாடு செய்திருக்கிறதாகச் சொன் னீரே! அவை எவை?"

"அவற்றில் ஒன்றைத்தான் முன்னமேயே குறிப் பிட்டேனே, என் ஆள் ஒருவன் துறைமுகத்துக்குப் போய் "தண்ணீர்ப் பாம்பு" என்ற கப்பலுக்கு எச் சரிக்கை வயர்லெஸ் செய்வான், என்று. மற்றொன்று வித்யாவிநோதனைச் சிறையிலிருந்து விடுவிக்கும் ஏற் பாடு. அதை உடனே செய்ய முடியாது! அவன் வைகாசி பௌர்ணமி அன்று ஊரை மூழ்கடிக்கத் தீர் மானித்திருக்கிருன். அதற்கு இரண்டு மூன்று நாள் முன்னதாக அவனுடைய ஆட்கள் அந்த வேலையில் தான் மும்முரமாக இருப்பார்கள். வித்யாவிநோதனுக்கு காவல் அநேகமாக இருக்காதென்றே எண்ணுகிறேன். இருந்தால் ஒரே ஒரு காவலாளி இருக்கலாம். அவனை ஒழித்துவிட்டு அவனை விடுவிப்பது அப்போது சுலப

மாகும். உடனே அவன் மகானுபாவனைச் சிறைப் படுத்த ஏற்பாடு செய்வான். ஊரையழிக்க அவன் போட்ட திட்டத்தையும் குலைத்து விடுவான்.''

"பலேபலே! சரியான ஆலோசனை! இதற்குமேல் நாங்கள் என்ன சொல்லப்போகிறோம்! அப்படியே செய்துவிடுங்கள் இளையநம்பிகளே! இதனால் எல்லாமே சரியாகிவிடும் என்று தோன்றுகிறது!''

"அப்படியல்ல! அரசருக்கும் இந்தச் செய்திகளைத் தெரிவித்து அவரால் செய்யக்கூடிய மாற்று ஏற்பாடுகளை யும் செய்யச் சொல்லவேண்டும்!''

"ஆம்! ஆம்! அப்படித்தான் செய்யவேண்டும்! ஆனால் ஒன்று! நாளை அவருக்கு முனிவர்கள் உதய குமரன் இறந்த செய்தியைத் தெரிவிக்கப் போகிறார்கள்! அதோடு நமது வெடி குண்டையும் தூக்கிப்போடவேண் டாம். வைகாசி பௌர்ணமிக்கு இன்னும் கொஞ்ச காலம் இருக்கிறது. அரசருக்கு இந்தத் துக்கம் கொஞ் சம் அடங்கட்டும். அப்புறம் நமது செய்தியைத் தெரி விப்போம்.

"அதுதான் சரி; அப்படியே செய்வோம்.

# 12 சிறைப்படுத்தலும் மீளுதலும்

இனி ப்ழமை பகர்வதாவது :-

உதயகுமாரன் இறந்ததற்குமறுநாள் காலையில் சக்கர வாளக் கோட்டத்து முனிவர்கள் சிலர் அரசசபைக்குப் போனார்கள். உதயகுமாரன் இறந்த சங்கதியைப் பக்கு வமாகத் தெரிவிக்கலானார்கள். "அரசே வாழ்க! கொற் றம் செழிக்க! உனதுகுலம் கொஞ்சமும் நீதி தவறாத குலம் முன்னம் ஒரு பசுக்கன்று தேர்க்காலில் வந்து விழுந்து இறந்ததற்காக மனுச்சோழன் தன் மகன் வீதிவிடங்கனைத் தேர்க்காலில் இட்டு முறை செய்தான். பரசுராமர் க்ஷத்திரியர்களைக் கருவறுத்தகாலத்தில் இந்

நகரை ஆண்டுகொண்டிருந்த சோழனிடம் சில பெரியோர் வந்து, "இச்சமயம் நீ பரசுராமனிடத்தில் போருக்குச் சென்ருல் ஆபத்து ; அவன் அரச பதவியில் இல்லாதவர்களோடு போருக்கு வரமாட்டான். ஆகையால் நீ உன் காமக்கிழத்தி மகன் ககந்தனுக்கு அரசைக் கொடுத்துவிட்டு அரச பதவியிலிருந்து விலகிக்கொள். ககந்தன் காமக்கிழத்தி மகன் ஆனதால் க்ஷத்திரியன் அல்ல என்று பரசுராமன் அவனுடனும் போர் புரியமாட்டான். உங்கள்குடிக்கு உண்டாயிருக்கும் ஆபத்து நீங்கும்!" என்றனர். அம்மன்னவனும் அப்பெரியார் சொற்படியே நடந்தான். நாடு ககந்தன் வசம் ஆயிற்று. அவனல் ஆளப்பட்டதனல் இந்தக் காவிரிப்பூம் பட்டணத்திற்குக் காகந்தி என்று ஒரு பெயரும் உண்டு. இதை நீ அறிவாயன்ரே?

அந்தக் காகந்தியின் மகன் ஒருவன் இந்நகரத்தில் இருந்த விசாகை என்னும் பெண் ஒருத்தியின் மையல் கொண்டு அவளைத் தன் வசப்படுத்த முயற்சி செய்தான். அவனுடைய மற்ரெரு மகன் மருதி என்னும் பெண்ணை வசப்படுத்த முயன்ருன் அந்த அரசன் அந்த இருவரையும் தன் மக்கள் என்றும் பாராமல் தக்க வகையில் தண்டித்தான்!"

"நல்லது பெரியோர்களே, நீங்கள் இவ்விதம் பேசுவதன் கருத்து என்னவோ? இப்போது அவ்விதம் முறைகேடான செய்தி ஏதாவது நடந்ததோ?"

"ஆம்! நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. தங்கள் மகன் உதயகுமாரன் உலக அறவியில் காயசண்டிகை என்னும் வித்தியாதரப் பெண்ணின் வடிவத்தில் இருந்த மணிமேகலையிடம் பேசிக்கொண்டிருந்தான். உண்மைக் காயசண்டிகையின் கணவன் அப்போது அங்கே வந்திருந்தான். அவன் தன் மனைவியிடம் அவன் தகாத முறையில் நடந்துகொள்வதாக எண்ணி, அவனை வெட்டிக் கொன்றுவிட்டான்."

"என்ன சொன்னீர்கள்! துறவுபூண்டு பிக்குணியா யிருக்கும் மணிமேகலையிடம் அவன் பேசினனா? அவன் ஏன் அவளிடம் பேசவேண்டும்? அதுவும் உலக அறவி யில்! தகாத முறையில் நடந்த அவனுக்குத் தக்க தண் டனையே கிடைத்தது. நானே அவனுக்கு அந்தத் தண் டனை அளித்திருக்கவேண்டும். எனக்குப் பதிலாக அந் தக் காஞ்சனன் அவனுக்குத் தண்டனை அளித்துவிட் டான். என் தண்டனையை அவனே நிறைவேற்றி விட்டான். இதுவரையில் களங்கம் இல்லாமல் இருந்த சோழர் குடியில் ஒரு இழிமகன் பிறந்து களங்கத்தை உண்டாக்கிவிட்டான் என்னும் சொல் மற்ற அரசர் களுடைய செவிகளில் படுவதற்கு முன்னதாக அந்த உதயகுமரனைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோய் எரித்து விடுங்கள், அந்த மணிமேகலையையும் சிறை செய்யுங் கள்!" என்று அரசன் கத்தினன். அரச கட்டளைகளை நிறைவேற்றும் அதிகாரி அப்படியே செய்தான்.

மணிமேகலை சிறையில் அடைக்கப்பட்டாள். உதயகுமரன் இறந்ததையும் மணிமேகலை சிறையில் அடைக்கப்பட்டதையும், உதயகுமரன் தாயாகிய இராச மாதேவி அறிந்தாள். மகனிறந்த துக்கம் அவளால் தாள முடியவில்லை. "என் மகன் இறந்ததற்கு இந்த மணிமேகலை அல்லவா காரணம் என்று அவள் மீது அடங்காக் கோபம் கொண்டாள். அவளைச் சும்மா சிறையில் வைத்திருப்பது போதாது, அவளுக்கு நிறை யத் துன்பத்தைக் கொடுத்து ஒழித்துவிடவேண்டும்", என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். அரசனி டம் சென்று மணிமேகலைக்காகப் பரிந்து பேசுபவளைப் போல, "அவள் பௌத்த பிக்குணி. உலக அறவியில் அன்னதானம் செய்துகொண்டிருந்தவள். அவளிடம் சென்றது உதயகுமரன் பேரில் பிசகு! அதற்கு அவள் என்ன செய்வாள்? அவளை விட்டுவிடுங்கள்!" என்ருள். அரசனும் அப்படியே அவளைச் சிறையிலிருந்து விடு வித்துவிட்டான்.

பிறகு இராசமாதேவி அவளிடம் நயமாய்ப் பேசித் தன் அந்தப்புரத்திற்குக் கொண்டுபோய், அங்கே தன்

அதிகாரத்தின்கீழ் அவளைச் சிறைவைத்துவிட்டாள். சிறையில் அவளுக்கு உணவு கொடாமல் பட்டினி போட்டுக்கொல்ல ஏற்பாடும் செய்துவிட்டாள். மணிமேகலை பசி எடுக்காதிருக்கும் மந்திரத்தை மணிமேகலா தெய்வத்தினிடமிருந்து கற்றிருந்ததனால் அதை ஜபித்துப் பசியே இல்லாமல் இருந்துவிட்டாள். சிலநாள் பட்டினி போட்டபின் அவள் இறந்திருப்பாள் என்று எண்ணி இராசமாதேவி சிறைக்குவந்து பார்த்தாள். அவள் யாதொரு துன்பமும் இல்லாமல் எப்போதும் போல் இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். பிறகு பைத்தியம் பிடிக்கச் செய்யும் மருந்தை அவளுக்குக் கொடுத்து உண்ணச் செய்தாள். அவள் பைத்தியம் பிடித்துப் புடவையைக் கிழித்துக்கொண்டு கந்தல் துணியுடன் தெருத்தெருவாய் அலையவேண்டும். கண்டவர் அவள்மேல் கல்லைவிட்டெறியவேண்டும். நான் என் கண்குளிர அதைப் பார்க்கவேண்டும். அப்போதுதான் என் மகன் இறந்த துக்கம் கொஞ்சம் ஆறும்!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

ஆனால் மணிமேகலைக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை. அவள் மணிபல்லவத்துக்குச்சென்று புத்தபீடிகையைத் தரிசித்துப் பழம் பிறப்புணர்ச்சி பெற்ற புண்ணியவதியாயிருந்தபடியால் அந்த மருந்து அவளை ஒன்றும் செய்யவில்லை. அதைக்கண்டாள் இராசமாதேவி. ''இந்த மருந்துக்கு ஏதோ மாற்று மருந்தை எப்படியோ சாப்பிட்டு இவள் தனக்குப் பைத்தியம் பிடிக்காதபடி செய்துகொண்டுவிட்டாள் போல் தோன்றுகிறது. ஆனாலும் விட்டேனா இவளை! என்று கறுவினாள். மூர்க்கனும் முரடனும் காமப்பித்து பிடித்தவனுமான ஒருவனைச் சிறைச்சாலைக்கு அனுப்பி மணிமேகலையைக் கற்பழிக்குமாறு தூண்டிவிட்டாள். அவனும் அங்ஙனமே சிறைச்சாலைக்குச் சென்றான். ஆனால் மணிமேகலை அவன் வந்ததும் தன் மந்திர வலிமையால் ஆண்பிள்ளையாக மாறினாள். அந்த ஆண்மகனைக் கண்டதும் அவன் துர்க்குணங்கள் பறந்தோடி விட்டன. புலியைப்போல வந்தவன் பூனைபோலத் திரும்பிச்சென்றான்.

மும்முறையும் தன் முயற்ச்சி பலிக்காததை இராச மாதேவி கண்டாள். ''உண்மையிலேயே இவள் தெய் வத் தன்மைவாய்ந்தவள். இவளைக்கெடுக்க முயன்றது மகாபாவம். இவள் எனக்குச் சாபங்கொடுத்து என் குடியையே கெடுத்தாலும் கெடுத்துவிடக்கூடும். ஆத லால் இவளைப் பணிந்து மன்னிப்புக் கோருவதே நல்லது! ''என்று தனக்குள் எண்ணி, மணிமேகலை யைச் சிறையிலிருந்து விடுவித்து அவள் காலில்விழுந்து மன்னிப்புக்கேட்கத் தொடங்கினாள். மணிமேகலை அவளைத் தன் காலில் விழாமல் தடுத்து நிறுத்தி,'' அரசீ, கேள்;

''நான் நன்மையடைவதற்குக் காரணமான புண்ணி யம் தன்பயனைக் கொடுக்கும் காலம் வந்துசேர்ந்தமை யால் மணிமேகலா தெய்வத்தால் நான் மணிபல்லவத் துக்குக் கொண்டுபோகப்பட்டேன். அங்கே புத்தபீடிகை யைத் தரிசித்ததால் பழம்பிறப்புணர்ச்சியைப் பெற்றேன். அதோடு மணிமேகலா தெய்வத்தின் அருளால் வான்வழி யாகச் செல்லும் மந்திரம் பசியெடுக்காதிருக்கும், மந்திரம் வேற்றுரு எடுக்கும் மந்திரம் ஆகியவைகளைக் கற்றேன். இன்னும் அப்புண்ணியத்தின் பயனாலேயே அமுத சுரபி என்னும் பாத்திரத்தையும் பெற்றேன். இப்படி நன்மை யடைந்ததனால் தான் நீஎன்னைக்கெடுப்பதற்காகச்செய்த சூழ்ச்சிகளினின்றும் தப்பமுடிந்தது. அதுநிற்க, நான் முற்பிறப்பில் ஒரு அரசகுமாரியாயிருந்தேன். அப்போது என் பெயர் இலக்குமி. எனக்கு இரண்டு தமக்கைமார் இருந்தனர். அவர்கள் முறையே தாரை, வீரை எனப் பட்டனர். அந்தத் தாரையும் வீரையும் இப்பிறப்பில் மாதவியாயும் சுதமதியாயும் பிறந்துள்ளனர். முற்பிறப் பில் எனக்குக் கணவனாயிருந்தவன் ஓர் அரசகுமாரன். அவன் பெயர் இராகுலன். நானும் என் கணவனும் ஒருநாள் ஒரு பூந்தோட்டத்தில் உல்லாசமாயிருக்கையில் புத்தசாரணமுனிவர் ஒருவர் அங்கே வந்தார். அவரை நாங்கள் உபசரித்து உணவளிக்க முயற்சித்தோம். எங்கள் சமையற்காரனை அழைத்து உணவு சமைத்துக் கொண்டுவரச் சொன்னோம். அப்படியே அவனும் சமைத்

துக்கொண்டுவந்தான். ஆனால் காலதாமதமாக வந்தான். அதைப்பொறாத என் கணவன் இராகுலன் அவனுக்குக் கொலைத்தண்டனை விதித்தான். அந்தப்பாவத்தினால் அவன் அந்தப்பிறப்பிலே திட்டிவிடம் என்னும் பாம்பு கடித்து இறந்தான்.

இறந்தவன் மறுபிறப்பில் உன்மகன் உதயகுமரனாகப்பிறந்தான். அந்த முற்பிறப்பின் சேர்க்கைகாரணமாகவே என்மேல் காதல்கொண்டான். முற்பிறப்பில் செய்த அந்த கொலைப்பாதகத்தின் காரணமாகவே இப்பிறப்பிலும் வித்தியாதரனால் கொலையுண்டான். அவன் இறந்தது முற்பிறப்பின் தீவினைப்பயனாலேயே ஆயினும் நீங்கள் உங்கள் அறியாமையினால் என்னைச் சிறையில் வைத்துத் துன்புறுத்தினீர்கள். நீங்கள் வைத்த சிறையிலிருந்து என்னால் முன்னமேயே தப்பிப்போயிருக்க முடியும். ஆயினும் உங்களுக்கு நல்லறிவு புகட்டுவதற்காகவே நான் இதுவரையில் சிறையில் தங்கியிருந்தேன். இப்போது நீங்கள் நல்லறிவு வரப்பெற்று என்னை வணங்கமுற்பட்டதனால் நான் இப்போது இந்தச்செய்திகளை உங்களுக்குத் தெரிவித்தேன். முற்பிறப்பில் என் கணவனாக இருந்தவருக்கு நீங்கள் தாயாக இருக்கிறீர்கள். அதோடு அரசியாகவும் இருக்கிறீர்கள். அதனால் நீங்கள் என்னை வணங்கலாகாது. நானே உங்களை வணங்கவேண்டும்'' என்று சொல்லி வணங்கினாள்.

இந்தச்சமயத்தில் சித்திராபதி வந்து மணிமேகலையைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு கூறினாள். மணிமேகலைதான் முன்னமேயே சிறையிலிருந்து விடுபட்டதாகக்கூறவே, அவள் மகிழ்ந்து பேசாமலிருந்துவிட்டாள். அப்பால் மாதவியும் சுதமதியும் அறவணவடிகளை அழைத்துக்கொண்டு மணிமேகலையைச் சிறையிலிருந்து விடுவிக்கும் நோக்கத்துடன் அங்கேவந்தார்கள். அவர்களுக்கும் மணிமேகலை விடுபட்டுவிட்ட சங்கதி தெரியவந்து மகிழ்ந்தார்கள்.

அறவணவடிகள் தாமாகவே தன் அந்தப்புறத்திற்கு வந்ததைக்கண்ட அரசி மிகமகிழ்ந்து அவரைத் தக்க

மரியாதையுடன் வரவேற்று உபசரித்தாள். அதனுல் மகிழ்ந்த அடிகள் அவளுக்குப் ''பஞ்சசீல''த்தையும், பேதமை முதலான பன்னிரண்டு "நிதானங்''களேயும் உபதேசித்தார். பிறகு மணிமேகலேயைப் பார்த்து அவர், ''உனக்கு இவற்றையும் இன்னும் பல கோட்பாடுகளேயும் பின்னர் உபதேசிப்பேன். நீ போகலாம்!'' என்ருர். அவள் நான் இனி இந்த ஊரில் இருந்தால், "அரச குமாரன் கொலேயுண்டதற்குக் காரணம் இவள்!'' என்று என்னேச்சுட்டி உலகத்தார் என்னேத் தூற்றுவார்கள். ஆகையால் நான் சாவகநாட்டிற்குப் போய்ச் சிலகாலம் இருந்து விட்டு வரலாமென்று நினேக்கிறேன்! என்ருள். அறவணவடிகள், நல்லது அப்படியே செய்! என்ருர். பிறகு மணிமேகலே சாவகநாடு நோக்கிச்சென்ருள். மற்றவர்கள் அவரவர் இருப்பிடங்களே அடைந்தார்கள். உதயகுமாரன் இறந்த துயரத்தில் அரசன் சூழ்ந்திருக் கையில் மற்ருெரு துன்பச்செய்தி அவனுக்கு எட்டியது, அதாவது அவனுடைய மற்ருெரு மனேவி பீலிவளேயின் மூலமாகப் பிறந்த மகன் நாகநாட்டினின்று தன் தாயுடன் காவிரிப்பூம்பட்டினம் நோக்கி கப்பலில் வந்துகொண்டி ருந்தபோது அக்கப்பல் கடும் புயலில் சிக்கிச் சிதைந்து விட்டது என்பதே. தன் மனேவி என்ன வானுள்? மகன் என்னவானுன்? அவன் இறந்தானு? அல்லது இறைவன் அருளால் முன்பு சோதிடர்கள் கூறியவாறு பிழைத் தானு? அவ்வாறு பிழைத்திருந்தால் அவன் எந்நாட்டில் உள்ளானே என்று தெரியாமல் திகைத்தான். அரசன், முன்னடைந்த துன்பம் மறையாதிருக்கையில் இதுவும் சேர்ந்து அவனேப் பைத்தியமாக்கி விட்டதென்றே கூற வேண்டும்.

அவன், ''என் அருமைக் குழந்தாய்! என் கண்ணே! எங்கு சென்ருயோ'' என்று துயரமேலீட்டால் கத்திக் கொண்டு சிங்காசனத்தினின்று இறங்கிக் கடற்கரை நோக்கி ஓடினுன். அச்சமயம் இந்திரவிழா நடத்துவதற் குரிய சமயம். அரசன் தன் அன்பின் அடையாளமான இரு மகன்களேப் பறிகொடுத்த துக்கத்தில் நினேவற்றிருந் தான். அதனுல் இந்திரவிழா நடத்தவேண்டும் என்ற

நினைவே அகன்று விட்டது. என் குழந்தைகளைக் காப் பாற்றாத இந்திரனுக்கு ஏன் விழா வைக்கவேண்டும்? என்ற எண்ணத்தால் இந்திரவிழா தடைப்பட்டது. நடைபெறவில்லை.

இதனால் கோபமடைந்தான் இந்திரன். முன்பு மணி மேகலா தெய்வம் இட்டசாபத்தாலும், இந்திரனுடைய கோபத்தாலும் பெருமழை பெய்தது. ஏரி, குளங்கள் உடைத்துக்கொண்டு காவிரிப்பூம்பட்டினம் நோக்கிச் சென்றன. கடலும் இந்திரனின் கட்டளையால் பேரலை களுடன் பொங்கி எழுந்தது. அந்தோ நம் அழகிய காவிரிப்பூம் பட்டினம் அழிந்தது.

தேனினுமினிய தமிழின்பம் பருக ஆவல் கொண் டான் போலும் கடலரக்கன். இதே போன்று எத்தனை யோ தமிழ் நகரங்களை உண்டும் ஆவலடங்காத அரக்கன் காவிரிப்பூம்பட்டினத்தையும் உண்டான்.

சாவகநாடு சென்றிருந்த மணிமேகலை, அங்குள்ள புண்ணியராசன் என்பவனை மணிபல்லவத்திற்குக் கூட்டிச்சென்று முற்பிறப்பில் அவன் ஆபுத்திரனாயிருந் தான் என்பதை அறியச்செய்தாள். பின்னர் காவிரிப் பூம்பட்டினத்திற்குத் திரும்புகையில் அது அழிந்தமை கேட்டு மிக வருந்தினாள். பிறகு சேரர்தலை நகராகிய வஞ்சிமாநகரத்திற்குச் சென்றாள். அங்கு புத்த சங்கத் தில் சேர்ந்து தொண்டாற்றிவந்த தன் பாட்டன் மாசாத் துவானை கண்டு வணங்கினாள். அங்கு கோவிலில் பிரதிஷ்டை செய்திருந்த பத்தினித் தெய்வமாய் விளங் கிய தன் மாண்புமிக்க தாயைக்கண்டு வணங்கினாள். பின்பு ஆணுருக்கொண்டு பற்பல மதவாதிகளையும் கண்டு அவர்கள் கொள்கையுணர்ந்து தேர்ந்தாள். தன் தாய் மாதவி, சுதமதி, அறவணவடிகள் மூவரும் காஞ்சியில் இருப்பதாய்க் கேள்வியுற்று அவர்களைக் காணும் ஆவ லால் அங்கு சென்றாள்.

காஞ்சி அரசன் தனக்கு ஒரு தெய்வம் கனவில் கூறியபடி மணிபல்லவத்தீவில் உள்ளது போன்று, புத்த

பீடிகை, கோமுகிப் பொய்கை, சோலை யாவும் அழகாய் அமைத்திருந்தான். அங்கு சென்ற மணிமேகலை அற வணவடிகளின் உபதேசம் பெற்று, அமுதசுரபியால் மக்களுக்கு உணவளித்து மகிழ்வித்து, தன் பாவங்கள் யாவும் நீங்கத் தவம் செய்யலானுள்.

# 13 அபாய அறிவிப்பு

''வாருங்கள்! வாருங்கள்! நம்பிகளே! என்ன உங்கள் செய்தி எல்லாம் அவசரக்கூட்டமாகவே இருக்கிறது?''

''என்ன செய்கிறது! இல்லாவிட்டால் ஆபத்துவந்து விடும்போல் இருக்கிறதே!''

''ஆபத்தா? என்ன ஆபத்து? உடனே சொல்லும்!''

''ஆபத்துத்தான். ஆனுலும் உங்கள் செய்தியை நீங்கள் சொன்னபிறகு அதைச் சொல்லலாம் அதற்குள் ஆபத்து நேர்ந்துவிடாது. ஆகையால் முதலில் உங்கள் செய்திகளைச் சொல்லுங்கள். நான் கொஞ்சம் நிதான மாகச்சொல்லவேண்டி யிருப்பதால் பிறகு சொல்கிறேன்'

''நல்லது; நான் முதலில் என் செய்தியைச் சொல்லு கிறேன், கேளும்!'' என்று கௌதமர் சொல்லத் தொடங் கினுர். உதயகுமரன் சவத்தைமறைத்துவிட்டு மறு நாட் காலையில் அரசனிடம் சென்ற புத்தபிக்ஷுக்கள் மெல்லப் பாம்புப்புட்டியின் மூடியைத்திறந்து மகுடி ஊத ஆரம்பித் தார்கள். அரசனிடம் நேரிடையாகச் சங்கதியைச் சொல் லாமல் சுற்றி வளைத்துப்பேசினுர்கள். முதலில் சோழர் குடியின் பெருமையைச் சொன்னுர்கள். அப்பால் அவர் களுடைய நீதிமுறையை மெச்சினுர்கள். இப்படி அவர் கள் பேசினதைக்கண்ட அரசன் இவர்கள் இப்படிப் பேசு வதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று ஊகித்துக்கொண்டு விட்டான். அதோடு அதைக்குறித்து அவர்களைக் கேட்கவும் கேட்டுவிட்டான். அவர்களும் தாங்கள் ஒருவிதமாக அரசன் மனத்தைப் பண்படுத்தி

விட்டதாக எண்ணிச் செய்தியைத் தெரிவித்தார்கள். மக்கள் மேல் உள்ள பாசம், எல்லாம் கடந்த ஞானிகளையும் விடாதே! அரசனைமட்டும் விடுமா? பட்டத்திற் குரிய இளவரசன்! பெருவீரன்! நற்குணமுடையவன்! அவன் அநியாயமாக கொலை செய்யப்பட்டான் என்றால் யாருக்குத்தான் மனம் பொறுக்கும்! ஆனால், இதில் யாரை நோவது? காஞ்சனன் கொன்றதற்குத் தக்க காரணமிருக்கிறது! அதோடு அவன் அப்பொழுதே கம்பி நீட்டிவிட்டான். மகன் மேல் அபாண்டப்பழி விழுந்து விட்டது! ஆகவே பேசாமல் மகனை அடக்கம் செய்யச் சொன்னான். ஆயினும் கோபம் போகவில்லை. மணி மேகலையைச் சிறைப்படுத்திவிட்டான்.

ஆனால் சிறைச்சாலையில் உள்ள முக்கியமான சிலர் அவளுக்கு பைத்தியம் பிடிக்கும் மருந்து கொடுத்தார்கள். சங்கத்தாரால் மாற்றுமருந்து கொடுக்கப்பட்டது. பட்டினி போட்டுக்கொல்ல முயற்சித்தார்கள். பசி எடுக்காதிருக்கும் மாத்திரை கொடுக்கப்பட்டு அதைச்சமாளித்தார்கள். முரடனும், கல்லாதவனும், பெண் பித்துப்பிடித்தவனு. மான ஒருவனைக் கொண்டு அவளைக்கெடுக்க முயற்சித்தார்கள். அவன் வந்து சிறையில் அவள் இருந்த அறைக்குள் நுழைந்ததும், அவனுக்குப்பின் ஓசைப்படாமல் ஒரு கள்ளக்கதவு தானே திறந்துகொண்டது. அதற்குள்ளிருந்து ஒருவன் வெளிப்பட்டு அவன் தலையை ஒரு துணியால் மூடி இறுகப்பிடித்துக்கொண்டான். கொஞ்ச நேரத்தில் அம்முரடன் மயக்கமாய் விழுந்தான். அப்பால் அவன் சிறைச்சாலைக்கு வெளியே கொண்டுபோய் வெட்டவெளியில் கீழே கிடத்தப்பட்டான். மூர்ச்சை தெளிந்தும் அவனுக்குத் தான் ஏதோ தெய்வத்தின் மாயையால் அப்புறப்படுத்தப்பட்டதாக ஓர் எண்ணம் உண்டாயிற்று. அவன் மணிமேகலையை வணங்கிவிட்டுப் போய்விட்டான்.

பிறகு சித்திராபதியும் அறவணவடிகளும், மாதவி, சுதமதி ஆகியோரும் வந்து அவளைச் சிறைமீட்டார்கள். அவள் இவ்வூரில் இருந்தால் தன்னை எல்லாரும் தூற்று

வார்கள் என்று சொல்லி, சாவகநாட்டுக்குப்போய் விட்டாள்!'' என்ருர்.

''சரி, நீர் அறிந்ததற்கு மேல் நான் ஒருபடி அதிகம் அறிந்திருக்கிறேன்'' என்று சொல்லிப் பிரபாகர் சொல்லத் தொடங்கினர். ''அந்த மணிமேகலை சாவகநாட்டிற்குத் தானுகப்போகவில்லை. அறவணவடிகளுடைய உத்திரவின் பேரிலேயே போனுள். ''மேலிடம்'' என்பது அவரே. அந்த மேலிடத்து உத்தரவு அவள் சிறையில் இருக்கும் போதே அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அப்படி அரசிக்கும் ஒரு பயமுறுத்தல் கடிதம் மணிமேகலையை விடுவிக்கா விட்டால் உடனே அவளுக்குப் பெருந்தீங்கு நேரும். உதயகுமரன் கொல்லப்பட்டது போல்! என்று அதில் கண்டிருந்தது. இவ்வளவையும் செய்து விட்டு ஒன்றுமறியாதவர்போல் அவர் அரசியிடம் பரிந்துபேச வந்துவிட்டார். மணிமேகலை பேரிலும் குற்றமில்லை! உதயகுமரன் பேரிலும் குற்றமில்லை! காஞ்சனன் பேரிலும் குற்றமில்லை. எல்லாம் விதி! ''என்ருர் அவர். அதற்குத் தக்கபடி அவள் முற்பிறப்புவரலாறு ஒன்று கூறினுள். முற்பிறப்பில் சமையற்காரன் ஒருவனைக் கொன்ற பாவந்தான் இப்படி அவன் இறக்க நேரிட்டது என்று அரசியை நம்பும்படிச் செய்தார்கள். பாவம்! அரசி என்ன செய்வாள். அவளைச் சிறையிலிருந்து விடுவித்து விட்டாள். அவளும் சாவகநாடு போய்விட்டாள்!'' என்று முடித்தார் அவர்.

''நல்லது! நான் வேருெரு முக்கியமான செய்தி அறிந்து வந்திருக்கிறேன்!'' என்று தொடங்கினர் அகோரம். முன்னே அரசனைப்பிரிந்து அவசரமாக நாகநாடு சென்ற பீலிவளைக்கு ஒருமகன் பிறந்தான். அவனுக்கு ஐந்தாறு வயது ஆகிவிட்டது. தன்கணவனிடம் தன்னைக் கொண்டுபோய்விட வேண்டும் என்று அவள் தன் தந்தையை நீண்டகாலமாகத் தொந்தரவு செய்துகொண்டு வந்தாள். அவன் சில நாட்களுக்கு முன் அவளையும் அவள் மகனையும் கப்பலிலேற்றிச் சோழ நாட்டுக்கு அனுப்பினுன். அவள் வந்தக்கப்பல் புயல்

காற்ருல் பாறையில் மோதப்பட்டு உடைந்து விட்ட தென்றும் அவளும் அவள் மகனும் கடலில் விழுந்து இறந்துபோஞர்கள் என்றும் இன்று காலே அரசனுக்குச் செய்தி கிடைத்தது. அரசன், ஆ! காதலி! ஆ! மகனே! என்று அலறிக்கொண்டு கடற்கரைப் பக்கம் சென்றிருக் கிருர். அவர் இன்னும் திரும்பிவரவில்லே என்றும், ஒரு வேளே அவர்கள் உடைந்த பலகைத் துண்டுகளேப் பிடிந் துக்கொண்டு கரைவந்து சேரமாட்டார்களா என்னும் கருத்துடன் அங்கேயே இருப்பதாகக் கேள்வி!'' என்ருர்.

''உம்''கப்பல் உடைந்துவிட்டதா? அப்படி யாஞல் நான் செய்த ஏற்பாடு பலிக்கவில்லே என்று தெரிகிறது!'' என்ருர் நம்பிகள்.

''நீர் செய்த ஏற்பாடா? அது என்ன ஏற்பாடு?''

''நாகநாட்டிலிருந்து பீலிவளே தன்மகனுடன் கப்ப லேறிப்புறப்பட்டுச் சோழநாட்டுக்கு வரும் செய்தியை, மகானுபாவன் இரகசியக்கூட்டம் நடத்திக்கொண்டிருக் கும்போது அவன் ஆள்வந்து தெரிவித்தான். அவன் உடனே டார்ப்பிடோவால் அக்கப்பலே மூழ்கடிக்கும்படி முன்னதாக ஏற்பாடு செய்துவிட்டுப் பிறகு வந்து கூட்டத்தை நடத்திஞன், கூட்டம் முடிந்ததும், நான் என் இரகசிய ஆள் மூலம் அந்த வேலே நடக்கவொட் டாதபடி ஏற்பாடு செய்தேன். என் ஏற்பாடு எப்படியோ கெட்டுவிட்டது, அவன் ஏற்பாடு பலித்துவிட்டது!''

''சரி, அதுபோகட்டும்! இப்போது அவசர கூட்டம் நடத்துவதற்குக் காரணமான தலேபோகிற செய்தி என்னவோ?''

''தலேபோகிற செய்திதான் அது! காவிரிப்பூம்பட்டி னத்திலுள்ள எல்லாருடைய தலேயும் போகிற செய்தி!''

''எல்லாருடைய தலேயுமா? அப்பா! காதால் கேட்ப தற்கே அச்சமாயிருக்கிறதே!''

''ஆம்! மனத்தால் நினேக்கவும் அச்சம்தான். அதைக்கேட்க மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்!

''சரி, திடப்படுத்திக்கொண்டாகி விட்டது. சொல்லும் அதை!!''

''மகானுபாவன் தன் எதிரியால் அரசாளப்படும் இந்நகரை, அழிக்கத் திட்டம் போட்டுப் பல நாட்கள் ஆகின்றன. அப்போதிருந்தே அவன் இரகசியமாக வேலைசெய்திருக்கிறான். இந்திரவிழாவை நடத்தாவிட்டால் ஊரைக் கடல் கொண்டுவிடும் என்பதை உண்மையாக்குவதன் மூலம் தன் கருத்தை முடிக்கத் திட்டமிட்டான் அவன். இப்போது அவனுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. சமயம்பார்த்து அவன் ஆள் உதயகுமாரனைக் கொன்றான். பீலிவளையையும் அவள் மகனையும் அழிக்க ஏற்பாடு செய்தான். இதனால் ஏற்படும் சோகத்தால் அரசன் இந்திரவிழாவைக் கவனிக்கமாட்டான் என்று அவன் திடமாக நம்பியிருக்கிறான். அப்படி ஒருக்கால் அரசன் இந்திரவிழாவை நடக்குமாறு செய்தாலும் தான் ஏதாவது சூழ்ச்சிசெய்து அதை நடக்க வொட்டாமல் செய்யப்போவதாகவும் எப்படியும் நகரத்தை அழித்தே தீருவதாகவும் அவன் கூட்டத்தில் சொல்லியிருக்கிறான். ஆனால் இப்போது உள்ள நிலையைப்பார்த்தால் அவன் அந்த விசேஷ முயற்சிசெய்யவேண்டியதில்லை என்றே தோன்றுகிறது. ஏனென்றால் அரசன் இருக்கிற இருப்பில் அவன் இந்திரவிழா நடத்தப்போவதாகத் தெரியவில்லை. சென்ற வருஷங்களில் எல்லாம் இவ்வளவு நாளைக்குள்ளாக ஊரார் ஊரை அலங்கரிக்கத் தொடங்கி விட்டார்கள். இப்போது ஊர் துக்கத்தில் மூழ்கியிருக்கிறது. இந்திரவிழாவில் சிரத்தையுடைய பெரியோரும் ஒன்றும் செய்யாமல் பேசாமல் இருக்கிறார்கள். புத்த சங்கத்தாரோ இந்திரவிழா நடக்கப்போவதில்லை, இந்திரனுடைய சாபம் பலிக்கும் காலம் வந்துவிட்டதுபோல் காணப்படுகிறது என்று பேசிக்கொள்ளுகிறார்கள்.

நிற்க அவன் செய்திருக்கும் பயங்கர ஏற்பாடு என்னவென்றால் அவன் சில நீர்த் தேக்கங்களிலிருந்து மறைவாக நீர் பாயுமாறு செய்யப்பட்டுள்ள சுரங்கக் கால்வாய்களின்மூலம் திடீரென்று நீர் பாயச் செய்வது.

அந்த நீர்த் தேக்கங்களின் பக்கமாகப் போய் நின்று பார்த்தாலும் நீர் அதிலிருந்து வெளிச் செல்லுவதாகத் தெரியாது. ஆனால் நீர் மட்டும் குறைந்துகொண்டு வரும். தண்ணீர் யாவும் வற்றினால்தான் இரகசியக் கால்வாய் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கலாம். அந்தக் கால்வாய்களின் வழியாகப் பாயும் நீர் எல்லாம் மிக வேகமாகப் பாயும். மேலும் இந்த நகரில் ஆங்காங்கே இரகசியமாய் அமைக்கப்பட்டுள்ள சில கிணறுகளின் வழியாக கடலிலிருந்தும் தண்ணீர் வெளிவரும். பார்ப்பதற்குக் கிணறுகளிலிருந்து நீர் பொங்குவது போலக் காணப்படும். இப்படிப் பொங்கும் நீர் தெருக்களில் பாய்ந்து ஊரை நீர் மயமாக்கும். மேலும் அவன் வேறொரு ஏற்பாடு செய்திருக்கிறானும். அதாவது அவன் இரகசியமாகச் சிறிய மோட்டார்கார் போன்ற ஆகாயத்தில் செல்லக்கூடிய ஒரு யந்திரத்தைத் தயார் செய்திருக்கிறானும். அதை இரகசியமாக மறைத்து வைத்திருக்கிறானும். அதை அவனே ஓட்டிக்கொண்டு வந்து நகரை இடி இடிப்பது போன்ற மிகப் பயங்கரமான ஜலவாயு குண்டுகளைப் போட்டு அழித்துவிடுவானும். தண்ணீரைப் பாயச் செய்துவிட்டு அவன் மோட்டாரைச் செலுத்திக் கொண்டு வருவான். தண்ணீர் மெதுவாக வரும். மோட்டார் விமானம் வேகமாக ஓடி முன்னால் வந்துவிடும். அதிலிருந்து குண்டு போட்டால் இந்த ஊர்க் கட்டிடங்களையெல்லாம் அவ்வவற்றிலுள்ள பொருள்களோடு தவிடுபொடியாக்குமாம். அந்த நாச வேலை முடிவடைந்ததும் தண்ணீர் பாய்ந்து எல்லாவற்றையும் கடலுக்குள் கொண்டுபோய்த் தள்ளிவிடுமாம்!"

"அப்பா! உண்மையிலேயே இது மிகவும் பயங்கரமான சங்கதிதான்! அவன் எப்பொழுது இதைச்செய்யப் போகிறான்? நாம் உடனே ஊராருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டாமா?"

"நாளை ஒருநாள்தான் நமக்கு அவகாசம் இருக்கிறது. அதற்கு அடுத்த நாள் அவன் மோட்டார் விமானத்தோடு வந்துவிடுவான். அவன் வந்துவிட்டால்

தண்ணீர்மடை திறந்துவிடப்பட்டு நீர் இரகசியக் கால்வாய்களின் வழியாகப் பாய்ந்துகொண்டிருக்கிறது என்று அர்த்தம்!''

''சரி, இப்போது நாம் யார்யாருக்கு எப்படி யெப்படி எச்சரிக்கை செய்யவேண்டும்?''

''முதலில் கடற்கரையில் அலைந்துகொண்டிருக்கும் அரசருக்கு ஆள் அனுப்பவேண்டும்! அவர் எங்கே அலைந்துகொண்டிருக்கிறாரோ? அவரைத் தேடிப்பிடித்து நான் கூறிய உண்மைச் செய்தியை அறிவித்து அப்படியே அவரைத் தப்பி ஓடும்படிச் செய்யவேண்டும். அப்புறம் ஓராள் அரண்மனைக்குச் சென்று அவ்விதமே அரசிக்கு மட்டும் உண்மைச் செய்தியை அறிவித்து உடனே ஊரைவிட்டு ஓடச்செய்ய வேண்டும். பிறகு ஊரார் எல்லாருக்கும்பொதுவாக, மேற்கண்ட உண்மைச் செய்தியைச் சொல்லாமல், இந்திர விழா செய்யாமல் விடப்பட்டதால் இந்திரன் ஊரை அழிக்கப்போகிறான் என்று செய்தி சொல்லி எல்லாரையும் ஊரைவிட்டு ஓடச் செய்யவேண்டும்!''

''சரி! புத்தசங்கத்தாருக்கு ஒன்றும் தெரிவிக்க வேண்டாமா? அவர்களுக்கு நாமென்ன தெரிவிப்பது! ஊராருக்குச் செய்தி தெரிவிக்கிறோமே, அதைக்கேட்டு அவர்களும் தப்பியோடட்டுமே! மேலும் அவர்கள் நம் பேச்சு எதையும் கேட்கமாட்டார்கள். இந்திர விழாச் செய்யா விட்டால் ஊர் அழியும் என்னும் வதந்தியே அவர்கள் உண்டாக்கிவிட்டதுதானே! இந்திரவிழா செய்யப்படவில்லை ஊர் அழியும் என்று அறிவிக்க வேண்டியது அவர்கள் கடமை. அதை அவர்கள் ஒழுங்காகச் செய்துவிடுவார்கள். நான் சொன்ன சங்கதி அறவணவடிகளுக்கு எட்டாமற்போகாது. அவர் தம் நண்பர்களுக்கு வேண்டிய பாதுகாப்பைத் தாமே தேடிக் கொள்ளுவார். நாம்போய் ஒன்றும் குறுக்கிட வேண்டியதில்லை!

''சரி! நம் சொந்தப் பாதுகாப்பு விஷயம் என்ன?''

"அதைக் கவனியாமல் விட்டுவிடுவேனு? அந்த மகானுபாவன் எப்படி வேலே நடத்துகிருன் என்பதை நாம் நேரில் பார்க்க வேண்டாமா? அதற்கும் நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.''

"பலே பலே! அதென்ன ஏற்பாடு?''

"வானில் பறக்கும் உடைகள் நான்கு நம் நான்கு பேருக்கும் தயார் செய்து கொண்டுவந்திருக்கிறேன். கடற்கரையோரத்தில் அந்நிய நாட்டு வணிகன் வீடு ஒன்று காலியாயிருக்கிறது. அந்த உடையைப் போட்டுக்கொண்டு அந்த வீட்டு மாடியில்போய் நாம் இருக்க வேண்டும். மோட்டார் வந்தால் நகரின் மேற்குப்புறச் சாலே வழியாகத்தான்வரும், நான் குறிப்பிட்ட வீடு மிகவும் உயரமானது. ஏழடுக்குமாடி உடையது. ஊரை விட்டு ஒதுங்கியுள்ளது. நாம் மேல் அடுக்கில் நின்று கொண்டு ஆளுக்கு ஒரு "பைனுகுலர்'' வைத்துக் கொண்டு பார்த்தால் அந்த மகானுபாவன் எப்படி வேலே செய்கிருன் என்பது தெரியும். நமக்கு ஆபத்து வரும் போல் தோன்றினுல் உடனே பறந்துபோய்விட வேண்டியது.

"அந்தப் பாவி நமது ஊரை அழிப்பது! நாம் பார்த்துக்கொண்டிருப்பதா?"

"தற்சமயம் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது; ஆனுல் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவுகாண நான் ஒரு ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கிறேன்!''

"அதென்ன ஏற்பாடு?"

"அந்த மகானுபாவன் சிறைப் படுத்தியிருக்கும் வித்யாவிநோதனேச் சிறையிலிருந்து விடுவித்து அவனிடம் அந்தக் கொடியவனுடைய ஏற்பாடுகளேயெல்லாம் சொல்லச்சொல்லி என் ஆளே அனுப்பிவிட்டு வந்திருக்கிறேன். உடனே என் ஆள் போய் வித்யாவிநோதனே விடுவித்து வருவான். அவன் வெளிப்பட்டு விட்டால்

எல்லாம் சரியாகிவிடும் என்று நம்புகிறேன். அறவண வடிகளுக்கும் இதுகுறித்து எச்சரிக்கை விடுத்திருக்கிறேன். "பாம்பின் கால் பாம்பு அறியும்" அல்லவா? அந்த மகானுபாவன் சூழ்ச்சிகளையெல்லாம் அந்த வித்யாவினோதன் கண்டுபிடித்து எல்லாவற்றையும் சரியாக்கி விடுவான் என்று நம்புகிறேன். ஒருக்கால் நமது ஊரையும் அவன் காப்பாற்றிவிடக்கூடும் என்ற எண்ணமும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் நாம் தயாராயிருப்போம்!''

"சரி, நம்முடைய அடுத்த கூட்டம் எங்கே? எப்போது?''

"அந்த அறவணவடிகள் காஞ்சியரசனிடம் தன் செல்வாக்கை உபயோகித்து ஏதேதோ செய்யச் சொல்லியிருக்கிறதாகத் தெரிகிறது! ஆகையால் இந்த நகர் அழிந்துவிட்டால் அடிகள் அங்கேதான் செல்லுவார். ஆகையால் அங்கேதான் நாமும் செல்லவேண்டும்! அடிகள் எங்கெங்கே இருக்கிறாரோ, அங்கங்கேயெல்லாம் நாமும் இருக்கவேண்டியது அவசியமல்லவா? ஆகவே அடுத்த கூட்டம் காஞ்சியில்! காலம் நமது வழக்கப்படி!"

"இந்த ஊர் அழியாவிட்டால்?''

"அழியாவிட்டால் அவர் இங்கேயே இருப்பார்; நாமும் இங்கேயே கூட்டம் கூடுவோம்!''

"பிரபாகரரே, எல்லாருக்கும் அபாய அறிவிப்புச் செய்துவிடுகிறீரா?''

"ஆகா; அப்படியே!"

நமது ஐக்கிய முன்னணி நண்பர்கள் நால்வரும் குறிப்பிட்ட நேரத்தில் ஏழடுக்கு மாடியை அடைந்தார்கள். என்ன நடக்கப்போகிறதோ என்று ஆவலாய் பைனகுலரை வைத்துப் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். கண் சிமிட்டவில்லை.

# 14. பட்டினம் மூழ்கியது

நமது நண்பர்கள் விடுத்த எச்சரிக்கையாலும் அற வணவடிகளின் அரிய உதவியாலும் நகர மாந்தர்கள் பெரும்பாலோர் நகரைவிட்டுப் பாதுகாப்பான இடங் களுக்குச் சென்று கொண்டிருந்தனர்.

வித்யா விநோதனைப்பற்றித் தகவல் தெரிந்ததா? என்று கேட்டார் நண்பரில் ஒருவர்.

பிரபாகரர் பதில் கூறினர். வித்யா விநோதனைச் சிறையிலிருந்து விடுவித்தாகிவிட்டது. அவனிடம் தகவல் தெரிவித்தபோது, காலங்கடந்துவிட்டது குறித்து மிக வருந்தினன். எப்படியும் தன்னுலானவரை முயன்று பார்ப்பதாய்க் கூறியிருக்கிறன். "சில தினங்களுக்கு முன் விடுவிடுத்திருந்தால் எதையும் நிகழவொட்டாமல் தடுத்திருப்பேன்" என மிக வருந்தினன். மகானுபாவன் உபயோகிக்கப்போகும் ஆயுதம் மிகக்கொடியது. அதை உபயோகிக்கக்கூடாது என்று வித்யாவிநோதன்சொல்லி யிருந்தும் மகானுபாவன் கொண்டுவந்துவிட்டான். அதற்கு மாற்று என்னவென்றல் மகானுபாவன் மோட்டார் விமானத்தில் வரும்பொழுது, அதற்குமேல் உயரத்திலும், அதைவிட விரைவாகச் செல்லும் பறக்கும் தட்டில் வித்யாவிநோதன் வந்து மகானுபாவனிடமுள்ள ஜலவாயு குண்டை ஆகாயத்திலே வெடித்துவிடுவதாயும், அதனல் குண்டுடன் மகானுபாவனும் சேர்ந்து ஒழிவான் என்றும் கூறினர்.

அது சரி காஞ்சியில் அறவணவடிகள் என்ன ஏற் பாடு செய்திருக்கிறர் என்று ஏதாவது தெரியவந்ததோ.

ஆகா! அதையும் கவனித்துவிட்டேன். இங்கிருந்த புத்த சங்கத்தார் அனைவரையும் காஞ்சிக்கு அனுப்பி விட்டார். அங்கு எந்நகர் அரசனைக் கொண்டு மணி பல்லவத்தில் இருப்பதைப் போன்ற புத்த பீடிகை, சோலை, கோமுகிப் பொய்கை ஆகிய எல்லாவற்றையும் அந்நகரில் அமைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டாராம்.

முன்பே மணிமேகலை சாவகநாடு சென்றபோது தாம் வஞ்சிமா நகருக்குச் செல்லப் போவதாயும், அங்கு வந்து விடுமாறும் அறவணவடிகள் கட்டளையிட்டிருந்தார். அதன்படி இப்போது மணிமேகலை வஞ்சிமாநகர் வந்தால் அவளைக் காஞ்சி மாநகருக்கு அழைத்துவரும்படி ஆட்களுக்குப் பணித்திருக்கிறார்.

அப்படியானால் காவேரிப்பூம் பட்டினம் அழிந்து விடும் என்று அவர் முடிவு செய்திருக்கிறார் இல்லையா?

ஆம் அப்படித்தான் தோன்றுகிறது.

ஆ! அதோ தூரத்தில் ஏதோ சத்தம் கேட்கிறதே. ஆம் மோட்டார் விமானம் வரும் சத்தந்தான். எல்லோரும் பைனகுலரை எடுத்துக்கொண்டு தயாராக இருங்கள் மகானுபாவன் காலந்தவறமாட்டான். குறிப்பிட்ட நேரத்தில் வந்துவிடுவான். பல தீய குணங்களிடையே அவனிடமுள்ள நல்ல குணம் இது ஒன்றுதான். இன்னும் ஒரு நிமிஷமே உள்ளது. ஆம் இதோ வந்துவிட்டான்.

இதோ எதிர்த்திசையில் இன்னும் பலமான சத்தம் கேட்கிறதே. ஆம், இது வித்யாவிநோதன் தான். வெகு வேகமாகச் செல்கிறான். நிச்சயம் மகானுபாவனை அழித்து விடுவான். ஆ! நெருங்கிவிட்டானே? என்ன! பளிச்சென்று கோடி சூரியப் பிரகாசம் போன்ற மின்னல் ஆ! அந்த மின்னல் இதோ! இதோ மோட்டார்விமானத்திற்குச் செல்கிறது. அதற்குள், ஐயோ ஒரு கருப்பான, பாரமான சாமான் கீழே மோட்டாரிலிருந்து விழுகிறதே. ஆம்! இது ஜலவாயு குண்டாகத்தான் இருக்கவேண்டும்.

மின்னலும் மோட்டாரைப் பிடித்துவிட்டதே? ஐயையோ இதோ மோட்டார் மின்னல் பட்டதும் சுக்கு நூறாகி விழுகிறது. ஒழிந்தான் மகானுபாவன், தொலையட்டும். வாழ்க வித்யாவிநோதன்.

ஐயையோ! இதென்ன! அண்டம் யாவும் நடுங்கும் படியான சத்தம். பூகம்பம் போன்ற அதிர்ச்சி, நடுக்கம்

ஆகா ஜலவாயு குண்டு வெடித்துவிட்டது. காவிரிப்பூம் பட்டினமே அழிந்து விட்டது.

வித்யாவிநோதன் தன்னுடைய ரேடியக் கதிரினுல் மகானுபாவனே ஒழிக்க நினைத்தான். ஒழித்தான். ஆனுல் காவிரிப்பூம்பட்டினம் அழிய வேண்டும் என்ற விதியினுல் வித்யாவிநோதன் விடுத்த ரேடியக் கதிர் மோட்டார் விமானத்தில் படுவதற்கு ஒரு கணத்துக்கு முன்பு மோட்டார் விமானத்திலிருந்து குண்டு கிளம்பி விட்டது. குண்டு இல்லாத விமானத்தை ரேடியக் கதிர் தாக்கி அழித்தது. கீழே விழுந்த ஜலவாயு குண்டு காவிரிப்பூம் பட்டினத்தை அழித்தது.

அன்று பௌர்ணமி, இயற்கையும் சீற்றம் கொண்டது. புயல் வீசிற்று. கடலும் தன் நீண்ட, உயர்ந்த அலைக்கரங்களால் அழகான காவிரிப்பூம்பட்டினத்தை உண்டு, உறங்கியது.

முற்றும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
Ac. No. 105064
EGMORE, MADRAS-600 008